வெளியீடு: 24-03-2004 Issued: 24-03-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மே 9, 2003 – தொகுதி 50**

**Friday the 9th May, 2003 – Volume 50**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**'ve Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

9-5-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | vii-xi |
| Governor and Council of Ministers | xiii-xvi |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. தகவல் கோரல்—** | |
| (அ) மயிலாடுதுறையில் கொலை | 1-2 |
| (ஆ) அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் போராட்டம் | 3 |
| **2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, *2003* | 3 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 3 |
| (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2003* | 4-5 |
| மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் | 4, 5 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 4 |
| திரு. ஜி.கே. மணி | 4 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 5 |
| திரு. கே. மகேந்திரன் | 5 |

பக்கங்கள்

**2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 6-7

மாண்புமிகு திரு செ.ம. வேலுசாமி — 6, 7

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 6

திரு ஜி.கே. மணி — 6

திரு. வை. சிவபுண்ணியம் — 6

திரு. கே. மகேந்திரன் — 7

(ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 7-8

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 8

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 8

திரு. ஜி.கே. மணி — 8

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003 — 172-173

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 173

(ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 175

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 175

**3. அறிவிப்புகள்**—

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) — 4

(ஆ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) — 5





பக்கங்கள்

**3. அறிவிப்புகள்**—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) — 7

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) — 172

(உ) உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கவிருக்கும் விருந்து — 173

(ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) — 173, 174

(எ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி — 222

**4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**

(அ) கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா — 9-26, 67-70

(ஆ) கோரிக்கை எண் 27 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் — 26-38,63-67

(இ) கோரிக்கை எண் 25 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை — 38-60,61-63

*மாண்புமிகு திரு. அ. மில்லர் — 9-26

*மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் — 26-38

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் — 38-59,60

(ஈ) கோரிக்கை எண் 2 - ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(உ) கோரிக்கை எண் 1 — மாநிலச் சட்டமன்றம்
(ஊ) கோரிக்கை எண் 15 — நிதித் துறை
(எ) கோரிக்கை எண் 35 — திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை
— 71-298

| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (ஏ) கோரிக்கை எண் 48 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 71 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 71,78,86,94, 101,108,133, 154 |
| டாக்டர் பி. வள்ளல் பெருமான் | 108-112,114,115 |
| திரு. எம்.ஏ. ஹக்கீம் | 115-125,127-129 |
| திரு. கா. கந்தசாமி | 71,82,93, 99-100,129-138 |
| திரு. ஜி.கே. மணி | 138-139,145, 146,147,148, 149,151 |
| திரு. எச். ராஜா | 139-143 |
| திரு. செ.கு. தமிழரசன் | 151-153 |
| **5. அரசினர் தீர்மானங்கள்**— | |
| (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல் | 176 |
| (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல் | 222-223 |
| **6. உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கவிருக்கும் விருந்து இரத்து**— | 192 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003 | 176-184 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 176,180, 183,184 |
| திருமதி டி. யசோதா | 177-182, |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி | |
| (ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 184-191 |
| மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி | 184,187,188, 189,190-191 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 185-189,190 |
| திரு. ஜி. பழனிசாமி | 185 |
| திரு. எச். ராஜா | 189 |
| (இ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 193-199 |
| மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி | 193,198,199 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 193,194,195,196 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 194,197 |
| திரு. கே.சி. கருணாகரன் | 194 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 195,196 |
| திரு. எச். ராஜா | 197-198 |
| (ஈ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 200-201 |
| மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி | 200,201 |
| (உ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 202-207 |
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 202,207 |
| திரு. ஜி.கே. மணி | 202,205 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 202,203,204 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 203 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 204 |
| திரு. கே.சி. கருணாகரன் | 204-205 |

| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி | |
| (ஊ) தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 207-210 |
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 207,210 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 208 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 209 |
| (எ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல் திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 | 210-215 |
| மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா | 210,212-213, 214 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 211-212 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 214 |
| (ஏ) வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 215-217 |
| மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா | 215,216 |
| (ஐ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச் சட்டமுன்வடிவு, 2003 | 217-219 |
| மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் | 217,218 |
| (ஒ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 219-221 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 219,220,221 |
| திரு. என். நன்மாறன் | 219 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 223-224 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** ..**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**
பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**
நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக குடிநீர் வழங்கல்.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**
கால்நடை பராமரிப்பு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு.ஆர். வைத்திலிங்கம்:**
வனம், சுற்றுச்சூழல் ட்ற்றும் மாசுக் கட்டுப்பாடு.

20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**
வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

21. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**
மீன் வளம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy·** Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| 6. Minister for Health and Education | .. | **The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| 7. Minister for Backward Classes | .. | **The Hon. Thiru A. Papasundaram:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 8. Minister for Labour | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 9. Minister for Agriculture | .. | **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 10. Minister for Social Welfare | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 11. Minister for Adi-Dravidar Welfare | .. | **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | | |
|---|---|---|
| 12. Minister for Transport | .. | **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 13. Minister for Electricity and Industries | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| 14. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes. |
| 15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection | .. | **The Hon. Thiru P. Mohan:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| 16. Minister for Local Administration | .. | **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 17. Minister for Animal Husbandry | .. | **The Hon. Thiru P.V. Damodaran:** Animal Husbandry. |
| 18. Minister for Rural Industries | .. | **The Hon. Thiru R. Vadivel:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |

| | | |
|---|---|---|
| 19. **Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 20. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 21. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 22. **Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| 23. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 24. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 25. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள் ***

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

*28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | .. குழு அலுவலர் |
| திரு. உவ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செவ)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆவா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சநதானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்



87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்.
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன, திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி



131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)



173. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி

196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி



217. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 26, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2034
## 2003 மே 9, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"

உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொறுத்து சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொறுத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

[***குறிப்பு:*** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### (அ) மயிலாடுதுறையில் கொலை

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் கேட்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் கடந்த 30 ஆம் தேதி இரவு குருஞானசேகரன் என்பவர் சிலராலே வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். மயிலாடுதுறை பழைய ஸ்டேட் பாங்க் ரோட்டிலே திருவழுந்தூரைச் சேர்ந்த அவருடைய நண்பரோடு நடந்து வந்துகொண்டிருந்த நேரத்தில் மறைந்திருந்த கும்பல் அவர்மீது கை எறி குண்டுகளை வீசியெறிந்த பிறகு அரிவாள் போன்ற ஆயுதங்களால் வெட்டிச் சாய்த்திருக்கிறார்கள். அன்றையதினமே மயிலாடுதுறையில்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 மே 9

உள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டு அங்கே இறந்துவிட்டார். அவருடைய நண்பர், திருவழுந்தூரைச் சேர்ந்த அவருடைய நண்பர், தஞ்சாவூரிலே இருக்கிற மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்தக் கொலைக்கு பல்வேறுவிதமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். காங்கிரஸ் கட்சியில் விவசாய சங்கத் தலைவராகவும் அவர் இருந்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் அங்கே அவருக்கு நல்ல பெயர் இருக்கிறது. என்றாலும் அங்கே அவர் ஒரு புதிய குடியிருப்புப் பகுதியை ஏற்படுத்தியிருக்கிறார். அந்தப் பகுதியிலே இருக்கிற சிலபேர்—சேத்தங்குடியைச் சேர்ந்த, சேத்தங்குடி, பசுபதி அக்ரகாரத்தைச் சார்ந்த—அங்கே குடியிருப்புப் பகுதியை ஏற்படுத்தியிருக்கிறார். அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலபேர்—அதில் ஒரு ஏக்கர் நிலம் முழுமையாக அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றும் அதுமட்டுமல்லாமல் பணமும் கொடுக்க வேண்டும் என்றும், பெருந்தொகையைக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அவர் கொடுக்க மறுத்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அந்த விவரங்களுக்குள் போக வேண்டாம். அதாவது, ஒத்திவைப்புத் தீர்மானங்களோ அல்லது சிறப்புக் கவன ஈர்ப்புகளோ இல்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானமாக நான் கொண்டு வந்தேன். இதுவரை எந்தவிதமான பதிலும் வரவில்லை. என்ன நடைபெற்றிருக்கிறது? அதற்குக் காரணமானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? இல்லையா? மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? இல்லையா? என்ன நடவடிக்கை அரசு இதுவரை எடுத்து இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானங்களோ, சிறப்புக் கவன ஈர்ப்புகளோ, கவன ஈர்ப்புகளோ நம்முடைய நிகழ்ச்சி நெருக்கடிகளின் காரணமாக எதுவும் எடுத்துக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை இல்லை. என்னுடைய அங்கீகாரத்தைப் பெற்று அரசுக்குச் செல்லுமானால், அதற்கு அரசிடமிருந்து பதில் வந்தால் அந்த பதிலை நான் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். திரு. ஜி.கே. மணி.



2003 மே 9]

### (ஆ) அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம்

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் போராட்டம் கடுமையாகிக் கொண்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றே சொல்லிவிட்டீர்கள். விட்டுவிடுங்கள்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்...(குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் அறிமுக நிலையிலேயே காங்கிரஸ் கட்சி தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சேபிக்கிறது.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 10-05

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டுவருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவசரப்படுகிறார்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.



**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவுக்கு பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்—தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 25—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் ஆகியோரால் 8-5-2003 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்திற்கு பதில் உரை. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாயை வணங்குகிறேன்! தமிழ்த் தாயை வணங்குகிறேன்!
மாதா பராசக்தி வையமெலா நீநிறைந்தாய்
ஆதாரமு ன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயி னும்வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப் பணிந்து வாழ்வோமே

என மகாகவி பாரதியார் அன்னை பராசக்தியை போற்றிப் பாடும் இந்தப் பாடலைக் கூறி எனது உரையைத் துவக்குகிறேன்.

தமிழகத்தின் கடைக்கோடியில் உள்ள நீலகிரி மாவட்டத்தில் பிறந்த என்னை-- சுதந்திரம் அடைந்து அரை நூற்றாண்டுக்குமேல் ஆகியும் எந்த ஆட்சியும் அளிக்காத அமைச்சர் பதவியை, மலைகளின் ராணியான நீலகிரி மாவட்டத்திற்கு அமைச்சர் பதவி கொடுத்து இந்தத் தொண்டனையும்-- பெருமைப்படுத்தியதற்காக நீலகிரி மாவட்ட மக்கள் சார்பாகவும், கூடலூர் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு வணங்குகிறேன்.

மயிலாட வான்கோழி தடை செய்வதோ?
மாங்குயில் பாட கோட்டான்கள் குறை சொல்வதோ?
முயற்கூட்டம் சிங்கத்தின் எதிர் நிற்பதோ? அதன்
முறையற்ற செயலை நாம் வரவேற்பதோ?
உங்களை எதிர்கொள்ள இந்த உலகிலே யாரும்
இல்லை தாயே!

ஆறரைக் கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் ஏழை எளியோருக்குக் கலங்கரை விளக்கமாகவும், இந்தியத் திருநாட்டிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்திட முன்னேற்றத் திட்டங்கள் பல தீட்டி அதனைச் செயல்வடிவமாக்கி வருபவருமான அகில இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் தமிழக அரசின் அடுத்து வரும் நலத் திட்டங்கள் என்னவென்று ஆவலோடு எதிர்பார்க்க வைக்கவும், நாளை சரித்திர வல்லுநர்களும் வரலாற்று ஆசிரியர்களும் இந்த ஆட்சி பொற்கால ஆட்சி என எழுத வைக்கப் போகும் சாதனைச் செம்மலான, என் தாயே, மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கும் சிங்கநிகர் தலைவியே, திக்கெட்டும் பரவட்டும் உங்கள் புகழ்.

*முற்பகல் 10-10*

சுற்றுலா வளர்ச்சிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்பு-- சுற்றுலாத் துறையின்மீது தனிக் கவனம் செலுத்தி-- பல சிறப்புமிக்க அறிவுரைகளைக் கூறினார்கள். அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படியே தற்போது தமிழக சுற்றுலாத் துறை வீறுநடை போடுகிறது.

சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் இங்கே தெரிவித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரெஞ்சு நாடு காத்த வீராங்கனை Joan of Arc, அன்னை தெரசா, வேலுநாச்சியார், தில்லையாடி வள்ளியம்மை, டாக்டர் முத்துலட்சுமி, கவிக்குயில் சரோஜினி ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில்



தனிச் சிறப்புப் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களது ஆற்றல், வீரம், துணிவு, தியாகம், மதிநுட்பம் போன்ற அனைத்தும் ஒருங்கே பெறப்பட்டவராக விளங்குகிறார் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தந்தை பெரியார் அவர்கள் பெண்ணுரிமை பற்றி, 'அடிமைத்தனம் அடக்குமுறைகள், பழைய பழக்கவழக்கங்களை உடைத்தெறிந்து, பெண்கள் தங்களது வாழ்க்கையை பயனுள்ளதாக்கிக்கொள்ள வேண்டும்' என்று, முழக்கமிட்டார்கள். இதனை நடைமுறையில் செயல்படுத்தியது தந்தை பெரியாரின் வடிவாகத் திகழும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர், கொடுத்துக் கொடுத்துச சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர், கொடை வள்ளல், பாரத ரத்னா, மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர்களின் பாதையில் நடந்து அவர்தம் கொள்கைகளைச் செயல்படுத்தி, ஏழைகளுக்காக, ஏழைத் தொழிலாளிகளுக்காக வாரி வழங்கிவரும் புரட்சித் தலைவரின் மறுவடிவம்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்

என்று பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக தமிழக மக்களின் மேம்பாட்டிற்காக அயராது பாடுபட்டு வருகின்றார் நமது அம்மா அவர்கள்.

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை.

'இயற்கை நுண்ணறிவும், அதனோடு சேர்ந்த நூலறிவும் ஒருங்கே உடையவரான ஒருவருக்கு எதிராக எந்த நுட்பமான சூழ்ச்சிகளும் நிற்க முடியாமல் போய்விடும் என்ற வள்ளுவரின் வாக்கை

நடைமுறைப்படுத்தி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்து வருகிறார் நமது அம்மா அவர்கள்.

இலக்கியங்களில் அறுதியிட்டுக் காட்டப்பட்டுள்ள அனைத்து நற்குணங்களும் உடைய ஒரு வீராங்கனையாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். அம்மாவின் அரசியல் பயணம் இந்நூற்றாண்டின் வரலாற்றுச் சாதனை என்றால் அது மிகையாகாது.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதி தமிழுக்குத் தொண்டாற்றுவதாக தனக்குத் தானே தலைவனாகப் பதவி கொடுத்துக்கொண்டு நாட்டிலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் ஓய்வு எடுத்துவரும் ஒருவர், அவரது ஆட்சிக் காலத்தில் உலகத்தில் விவிலியத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள திருக்குறளை நாட்டிற்குக் கொடுத்த தெய்வப் புலவர் திருவள்ளுவரை அய்யன் திருவள்ளுவர் என்று கூற வேண்டுமென்று கூறியவர், அய்யனை நடுக்கடலில் நாதியற்றவராக நிறுத்திவிட்டார். ஆனால் தமிழின்பால் பற்றுள்ள தாய், தமிழ்த் தாய், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருவள்ளுவர் சிலைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு சுற்றுலாத் துறைக்கு ஆணையிட்டு, பணிகள் முடிக்கப்பட்டு நவீனப்படுத்தி பொதுமக்கள் பார்த்து மகிழ வழிவகை செய்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளில் பெரும்பாலோர் தேயிலை சாகுபடி செய்து வருகின்றனர். இவர்கள் இந்தப் பசுந்தேயிலையை, தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு விற்று, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து ஜீவனம் நடத்தி வருகின்றனர். 1998 ஆம் ஆண்டு பசுந்தேயிலையின் விலை வீழ்ச்சி அடைந்ததால் அவர்கள் வாழ்க்கைத் தரம் மிகவும் பாதிக்கப்பட்டது. இதன் மூலம் நீலகிரி மாவட்டப் பொருளாதாரமே வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த விலை வீழ்ச்சி தொடர்ந்து நீடித்ததால் இந்த மாவட்ட சிறு தேயிலை விவசாயிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். அவ்வாறு ஈடுபட்ட விவசாயிகள்மீது திரு. கருணாநிதி அரசு உண்மைக்கு மாறான வழக்குகளைப் போட்டது. இளைஞர்களை அரை நிர்வாணமாக்கி தெருக்களில் இழுத்துச் சென்றது. இந்த நிகழ்வில் மனித உரிமைக்



பாதிக்கப்பட்டவர்களுக்கு 31 இலட்சத்து 30 ஆயிரம்
கழகம் தலையிட்டு வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியது. இந்தத்
ரூபாய் நட்டஈடாக வழங்க ஐந்தரை மாதங்கள் ஆட்சியிலிருந்த திரு.
தீர்ப்பிற்குப் பின்னாலும் இதனைச் செயல்படுத்தவில்லை. பின்னர் ஆட்சிப்
கருணாநிதி அரசு மாண்புமிகு அம்மா அவர்கள் அமைதியான முறையில்
பொறுப்பேற்ற நடத்தி, திரு. கருணாநிதி அரசின் அத்துமீறலால்
போராட்டம் நபர்களுக்கு மாநில மனித உரிமை ஆணையத்தின்
பாதிக்கப்பட்ட கடுமையான நிதி நெருக்கடியிலும் 31 இலட்சத்து 30
உத்தரவுப்படி ரூபாய் நிவாரணத் தொகையை (மேசையைத் தட்டும் ஒலி)
ஆயிரம் வழங்கினார்கள் என்பதையும், அவர்கள் மேல் போடப்பட்ட
நேரடியாக வழக்குகளையும் திரும்பப் பெற்றார்கள் என்பதையும் இந்த
அனைத்து நேரத்தில் நினைவுகூற விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும்
நல்ல ஒலி)

நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்க, தேயிலைத் தூள் விற்பனையை அதிகரிக்க ஊட்டி 'டீ'-யை அறிமுகப்படுத்தி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாய விலை அங்காடிகள் மூலம் ஊட்டி 'டீ' விற்க ஆவன செய்து, அதன் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தற்பொழுது இந்த ஊட்டி டீ, மாதமொன்றுக்கு 280 டன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஊட்டி பிரிமியம் கோல்டு டீ என்ற பெயரில் புதியதாக தரம் உயர்ந்ததாக தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் விற்பனை தமிழகத்தில் சேலம், கோவை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் விற்பனை துவக்கப்பட்டுள்ளது. இரு டீ-க்களுக்கும் ஐ.எஸ்.ஓ. தரத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒருசில நாட்களில் ஐ.எஸ்.ஓ. தரம் கிடைத்துவிடும். தரச் சான்றிதழ் கிடைத்தவுடன் இம்முத்திரையுடன் வெளி மாநிலங்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10-15

பச்சைத் தேயிலைக்கு விலை மிகவும் குறைவாக, விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத விலையில் விற்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்விலை விற்பனையில் வீழ்ச்சிக்கான காரணத்தை அறிந்து அத்தொழிலில் உள்ள இடைத்தரகர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக அரசே ஏல விற்பனை மையம் துவங்க ஆணையிட்டார்கள். இந்த ஏல மையம் துவங்கப்பட்டால் நீலகிரி மாவட்ட சிறு தேயிலை

விவசாயிகள் வாழ்வில் மிகப் பெரிய மறுமலர்ச்சி உண்டாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதேபோன்று தமிழக விவசாயிகளின் ஒவ்வொரு சிறு பிரச்சினைகளையும் ஆராய்ந்து அறிந்து அவற்றைக் களைய உரிய நடவடிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழர்களுக்குத் தொண்டாற்றுவதாகக் கூறி அரசின் கஜானாவை காலி செய்துவிட்டு, தமிழுக்குத் தொண்டாற்றுவதாகக் கூறி செல்வம் சேர்க்கச் சென்றுவிட்டார் ஒருவர். தமிழுக்கும், தமிழர்களுக்கும் தொண்டாற்றுவதையே, தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இலக்கியத்திற்கெல்லாம் இலக்கியமாகவும், மக்கள் இதயத்தின் இலட்சிய தீபமாகவும் மாறி 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்னும் முதுமொழிக்கேற்ப தொண்டாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு புதிய அணுகுமுறையைப் பெற்றுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. தற்போதைய அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-ல் தலைமைப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்பு மாநில அரசு சுற்றுலா வளர்ச்சியில் மிகுநத ஆர்வம் காட்டி வருகிறது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 13-7-2001-ல் சுற்றுலாத் துறையின் செயல்பாடுகளை முதன் முறையாக ஆய்வு செயதார்கள். அச்சமயம் சுற்றுலாத் துறை மேற்கொள்ள வேண்டிய பணிகள், நோக்கங்கள் பற்றி மிகுந்த ஆர்வத்துடன் விளக்கி, அறிவுரைகள் வழங்கினார்கள். அதோடுமட்டுமின்றி சுற்றுலாத் துறைக்கு நிதி ஒதுக்கீடு அதிகமாக வழங்குவதற்கும் வழிவகை செய்தார்கள். அதன்படி 2001-2002 முதல் 2003-2004 வரை அதிக நிதி ஒதுக்கீடு வழங்கியும், சுற்றுலாத் துறையை ஒரு முன்னுரிமை பெற்ற துறையாகவும், தென் மாநிலங்களில் சுற்றுலா வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தமிழகம் எந்த நிலையிலும் பின்தங்காமல், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு செயலாற்ற வேண்டும் என்ற அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இத்துறை முழு முனைப்புடன் செயலாற்றி வருகிறது. இதுவரையில் தமிழகத்திற்கு



வருகின்ற சுற்றுலாப் பயணிகள் உள் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் என்று இரண்டு வகையில்தான் பிரித்துப் பார்க்கப்பட்டனர். முதன்முதலாக தற்போது தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்குள்ளேயே சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாட்டு சுற்றுலாப் பயணிகள்; தமிழ்நாட்டிற்கு மற்ற மாநிலங்களிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள்; தமிழ்நாட்டிற்கு வெளி நாட்டிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள். இங்கு வரும் ஒவ்வொரு வகை சுற்றுலாப் பயணிகளுக்கும் அவர்களது தேவை என்ன என்பதை அறிந்து அதை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முறையாக எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தமிழகத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அதிக நாட்கள் தங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுவதுடன் அதிகமான வருவாய் ஈட்டவும் இயலும்.

உலகச் சுற்றுலாக் குழுமம் தனது கண்ணோட்டத்தில் சுற்றுலா மூலம் ஏற்படும் வேலைவாய்ப்பு வசதி தற்போதுள்ள 2.4 விழுக்காட்டிலிருந்து 6.8 விழுக்காடு கூடுதலாக, வரும் 10 ஆண்டுகளில் உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தேசிய வளர்ச்சிக் குழு 10-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 21-12-2002-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் 5 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும். மாபெரும் இப்பணியில் சுற்றுலாத் தொழில் மிகப் பெரிய பங்கினை ஏற்க உள்ளது என்பதை இங்கே தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் மிகவும் விரும்பி வருகை புரிகின்றனர். இதற்கு ஏதுவாக தமிழ்நாட்டிலுள்ள புகழ்மிக்க சிற்பங்கள், வான் உயரும் கோபுரங்கள், நமது பாரம்பரிய சிறப்புகள் கொண்ட வரலாற்று நினைவகங்கள் போன்றவை அவர்களை மிகவும் கவர்கின்றன. 2003-2004-ல் சுகாதார சுற்றுலா, சிறப்புமிக்க கல்வி நிலையங்கள், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அளிக்கும் உயர் கல்வி நிலையங்கள், மலைத் தோட்ட சுற்றுலா, திரைப்படத் தொழில் ஆகிய சுற்றுலாக்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்தகைய சிறப்புமிக்க காரணங்களால், தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர் என்பது மட்டுமின்றி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்வதால் இங்கு சுற்றுலாப் பயணிகள் மன நிறைவோடு வந்து செல்ல வாய்ப்புள்ளது என்பதனை கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

முற்பகல்: 10-20

தமிழக சுற்றுலா வளர்ச்சிக்குரிய குறிக்கோள்களாக மேற்கொண்டுள்ளவையை இங்கே தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். அவை, சுற்றுலாப் பயணிகள் வருகையை தற்போதுள்ள 4-9 என்ற சதவீதத்திலிருந்து 10-12 என்ற சதவீதமாக அதிகரிப்பது; உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலத்தை 7-9 நாட்களிலிருந்து, 10-12 நாட்கள் வரை அதிகரிப்பது; வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கும் நாட்களை 4-7-லிருந்து 6-8 நாட்களாக அதிகரிப்பது. இக்குறிக்கோளை அடைய பல திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் மைய, மாநில அரசு 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது:—

மாமல்லபுரம் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு ரூ.499.85 இலட்சத்திற்கும், கழுகுமலை கிராமியச் சுற்றுலா மேம்பாட்டுக்கு ரூ.18.68 இலட்சத்திற்கும், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் உள்ள ஒளிவிளக்கிற்கு ரூ.16.50 இலட்சத்திற்கும், 8-2-2003 அன்று காஞ்சிபுரம மாவட்ட வளர்ச்சிப் பணிகள் துவக்க விழாவின்போது மாமல்லபுரம் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா தனது பொற்கரங்களால் துவக்கி வைத்தார்கள். இத்திட்டம் நிறைவு பெற்றவுடன் மாமல்லபுரம் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட சுற்றுலாத் தலமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

மேலும் தமிழ்நாட்டு சுற்றுலா வளர்ச்சியில் தற்போது நடைபெறும் பணிகள் பற்றிய சிறிய குறிப்பினை இங்கு தருவது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

2002-2003-ல் 7 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதன் மதிப்பு ரூ.281.75 இலட்சமாகும். 2003-2004-ல் நிறைவேறும் நிலையில் 31 திட்டங்கள் உள்ளன. இதன் மதிப்பு 817.28 இலட்சங்களாகும். 2003-2004-ல் நிறைவேற்றப்பட உள்ள 21 திட்டங்கள், மதிப்பு ரூ.749.90 இலட்சங்களாகும். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2002-2003-ல் ரூ.50 இலட்சத்திற்குப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 2003-2004-ல் ரூ.75.25 இலட்சத்திற்கு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.



கடந்த பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் சொகுசு வரி அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்று பல்வேறு அமைப்புகள் அரசின் கவனத்திற்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்தன. இதனை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரிவுடன் பரிசீலித்து டிசம்பர் 2002-ல் சொகுசு வரியைக் குறைத்து ஆணை வெளியிட அறிவுறுத்தினார்கள். அதன்படி 25 சதவீதம் இருந்த சொகுசு வரி அறை வாடகைகளுக்கு ஏற்ப 5 சதவீதம் முதல் 12.50 சதவீதம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த சொகுசு வரிக் குறைப்பை சுற்றுலாப் பயணிகள் வரவேற்றுள்ளனர். இது மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஊக்கத்தினை அளித்துள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் டாகடர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இத்தகைய நடவடிக்கையினைப் பற்றிச் சுற்றுலா வல்லுநர்கள் பாராட்டுகின்றனர் என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மேலும் தமிழகத்தில் சிறப்பான சுற்றுலா வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தனியார் முதலீட்டை ஊக்குவிக்கவும், பண்பாட்டு கிராமம் அமைத்தல், நட்சத்திர விடுதிகள் கட்டுதல் போன்ற சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்தில் கடற்கரை சாகச விளையாட்டுப் பூங்கா அமைக்கவும், கன்னியாகுமரியில் 'ஸ்பா' உலாத்தலம், மலைப் பகுதி மற்றும் பள்ளத்தாக்குப் பகுதியில் கம்பிவழிப் பயணம், ஒலி-ஒளிக் காட்சி, கேளிக்கை வசதிகள், தொலைநோக்குத் திட்டங்கள் போன்றவை முனைப்பாக நிறைவேற்றப்படவுள்ளன.

அண்டை நாட்டிலுள்ள சுற்றுலாப பயணிகளைக் கவருவதற்கு ஏற்றவாறு சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக இலண்டன், மலேசியா, இலங்கை, பாங்காக், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள பண்பாடு சார்ந்த சுற்றுலாப் பயணிகளைத் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-25

தமிழ்நாட்டில் உதகமண்டலம், கொடைக்கானல் ஏற்காடு, ஏலகிரி, ஜவ்வாது மலை, கொலலிமலை போன்றவை மிக முக்கிய மலைவாச ஸ்தலங்களாகும். இந்த மலைப் பகுதிகளைக் கண்டுகளிக்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். தற்போது நிலவும் இந்திய அரசியல்

நிலையில் கோடைக்காலங்களில் மட்டும்தான் மலைவாசஸ்தலங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்ற நிலை மாறி, ஆண்டு முழுவதும் தமிழகத்திற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. இவர்களை மேலும் அதிக அளவில் ஈர்க்க மலைவாசஸ்தலங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் சிறப்பாக நடைபெற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூறியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கலாச்சார விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள், கோடை விழாக்கள், வன விலங்கு சரணாலயங்கள் போன்றவை சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. சாகசச் சுற்றுலா, உடல் நலச் சுற்றுலா போன்றவை தற்போது சுற்றுலாப் பயணிகளின் இடையே அதிகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. அத்தகைய சுற்றுலாக்களை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாரம்பரியச் சுற்றுலா, வியாபாரச் சுற்றுலா போன்றவற்றையும் கவனத்தில் கொண்டு இவ்வரசால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தங்குமிட வசதிகள் செய்து தருவதுடன், சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாப் பயணத் திட்டங்களை ஏற்படுத்தித் தருவது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்றொரு முக்கியப் பணியாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் ஆண்டுதோறும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. சேவை மற்றும் அர்ப்பணிப்புப் பணிகளை பொதுத் துறையில் செய்வதைவிட, தனியார் துறையில் அதிகமான பொறுப்புடன் முறையாகச் செய்ய இயலும் என்ற நோக்கத்திலும், நட்டத்தில் நடத்தி வரும் ஓட்டல்களைத் தனியாரிடம் ஒப்படைப்பதன்மூலம், விருந்தினர்களுக்கு நல்ல பயனும், நட்டத்தைத் தவிர்க்க சிறந்த வழியாகவும் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதுவரை 10 ஓட்டல்கள் தனியார்மூலம் குத்தகைக்கு விடப்பட்டு நடத்தி வருகிறது. மேலும் உதகமண்டலம் படகுக் குழாமில் உள்ள உணவகம், பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகியவற்றை தனியார் மூலம் நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



இந்த நடவடிக்கை நல்ல பலனை அளித்துள்ளது. இந்த இனங்களுக்கு ரூபாய் 9 இலட்சம் மட்டுமே கடந்த ஆண்டு இலாபம் கிடைத்தது. தனியாரிடம் ஒப்படைத்ததன்மூலம் ரூபாய் 35 இலட்சம் இலாபம் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஏரிப் பூங்காவில் உள்ள உணவகம் மற்றும் நுழைவுக் கட்டண வசூல் ஆகியவற்றை தனியாரிடம் ஒப்படைத்ததன்மூலம் ரூ.16.60 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இந்தியாவிலேயே முதன்முறையாக இரயில் மூலம் சுற்றுலாப் பயணங்கள் 2002-2003-ல் செயல்படுத்தப்பட்டன. இப்பயணத்தில் பங்கு பெறுவோருக்கு உறுதிசெய்யப்பட்ட இரயில் பயணச் சீட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தில் இட வசதி, தமிழ்நாடு ஓட்டல்களில் தங்குமிட வசதி ஆகியவை அளிக்கப்படுகின்றன. கடந்த 29 ஆண்டுகளிலே, 2002-2003 ஆம் ஆண்டில்தான் அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சி அதிக அளவான ரூபாய் 75 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது என்பதை-- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு சாதித்துள்ளது என்பதை-- இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதுவரை கண்டிராத அளவிற்கு 2002-2003 ஆம் ஆண்டில் 93 இலட்சம் ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது.

2002-2003-ல் நிதிநிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் மூலமும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனைப்படி பீடுநடை போடுகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது ஒட்டுமொத்த நட்டமான ரூபாய் 193 இலட்சத்தை இந்த ஆணடே சரிசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கடந்த கால ஆட்சியில் சுற்றுலா வளர்ச்சிக்காக 1996-1997 முதல் 2001 வரை ரூபாய் 19.36 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில், இரண்டு ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு ரூபாய் 23.05 கோடியை (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுலா வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் ஐந்து ஆண்டுகளில் செலவழித்த தொகையைவிட அதிகமாகும்.

1981 முதல் மதுரை திருமலை நாயக்கர் மஹாலில் ஒலி-ஒளிக் காட்சி நடத்தப்பட்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி கடந்த 3-12-2001 முதல் திரும்பத் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக இக்காட்சி நடைபெற்று வருவதால், அதன் சிறப்புத்தன்மை குறைந்துள்ளது. எனவே இதனை மைய, மாநில அரசு நிதியுதவியுடன் ரூபாய் 96.18 இலட்சத்தில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழக தொழில்நுட்ப உதவியுடன் நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் மாமல்லபுரம், தஞ்சாவூர், காஞ்சிபுரம் மற்றும் கன்னியாகுமரியில் இதுபோன்ற ஒலி-ஒளிக் காட்சி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழக சுற்றுலாத் துறையுடன் இணைந்து செயல்பட முன்வந்துள்ளது.

*முற்பகல் 10-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆணையின்படி சில அறிவிப்புகளை அறிவிக்க இருக்கிறேன்.

## புதிய அறிவிப்புகள்

*(1) நவக்கிரக சன்னிதி சுற்றுலாச் சுற்றுச் சாலை:* 'நவக்கிரக சன்னிதி' சுற்றுலாச் சாலையில் இடம்பெற்றுள்ள இடங்களில் திருநள்ளாறு நீங்கலாக இதர சுற்றுலாத் தலங்களான சூரியனார் கோயில், திங்களூர், வைத்தீஸ்வரன்கோயில், திருவெண்காடு, ஆலங்குடி, கஞ்சனூர், கீழ்பெரும்பள்ளம் மற்றும் திருநாகேஸ்வரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகள்/பக்தர்களுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ. 50.00 இலட்சம் செலவிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் கழிப்பறை, வாகனம் நிறுத்துமிடம், அணுகு சாலை, ஓய்வுக் கூடம் போன்ற கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) சுற்றுலாத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை மிகவும் கவனமாகச் செலவழிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தும் முன்னர், அந்த சுற்றுலாத் தலம் குறித்து ஒரு



பெருந்திட்டம் தயாரிப்பது அவசியமாகிறது. எனவே இராமேஸ்வரம், கொடைக்கானல், குற்றாலம், உதகமண்டலம், ஏற்காடு மற்றும் ஒகேனக்கல்லில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கு அந்த இடங்கள் குறித்து பெருந்திட்டங்கள் தயாரிக்க ரூ. 20 இலட்சம் மாநில அரசால் 2002-2003 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சுற்றுலாச் சுற்றுச் சாலைகள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்துவதற்காக பெருந்திட்டம் தயாரிக்க ரூ. 25 இலட்சம் செலவு செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**சுற்றுலாச் சுற்றுச் சாலைகள்:**

சிதம்பரம் - கங்கைகொண்ட சோழபுரம் - தாராசுரம் - கும்பகோணம் - தஞ்சாவூர் - முத்துப்பேட்டை - திருச்சிராப்பள்ளி.

**அறுபடை வீடு:**

திருத்தணி - சுவாமிமலை - பழனி - பழமுதிர்ச் சோலை - திருப்பரங்குன்றம் - திருச்செந்தூர்.

**சென்னையைச் சுற்றியுள்ள புனிதத் தல சுற்றுலாச் சுற்றுச் சாலை:**

திருவிடந்தை - திருமலைவையாவூர் - வல்லக்கோட்டை - ஸ்ரீபெரும்புதூர் - திருநின்றவூர் - திருமுல்லைவாசல் - மேலூர் - கோயம்பேடு.

**சுற்றுலாத் தலங்கள்:**

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, ஏலகிரி, கொல்லிமலை, புதுக்கோட்டை, ஆவுடையார்கோயில், காரைக்குடி மற்றும் செட்டிநாடு.

*(3) புதிய சுற்றுலாத் தகவல் மையங்கள் திறப்பு:* தமிழ்நாடு அரசின் சுற்றுலா அலுவலகங்கள் தமிழ்நாட்டில் 14 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, பிற மாநிலங்களில் புது தில்லி, மும்பை, கொல்கத்தா, கோவா, ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ரா ஆகிய 6 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 2001-2002 ஆம் ஆண்டில் ஜெய்ப்பூர், ஆக்ரா ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் திறக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. 18 சுற்றுலாத் தகவல் மையங்கள் தமிழ்நாட்டிலும், பெங்களூர், ஐதராபாத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய மூன்று சுற்றுலாத் தகவல் மையங்கள் பிற

மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன. 2003-2004ஆம் ஆண்டில் அகமதாபாத், புவனேஷ்வர், சண்டிகர், கௌகாத்தி, மற்றும் வாரணாசி ஆகிய இடங்களில் சுற்றுலாத் தகவல் மையங்கள் ரூ. 7.75 இலட்சம் செலவில் திறக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் பிற மாநில சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு அரசின் சுற்றுலா அலுவலகங்கள் ஜெய்ப்பூர், ஆக்ரா, புது தில்லி, கோவா, மும்பை, கொல்கத்தாவிலும், சுற்றுலாத் தகவல் மையங்கள் ஐதராபாத், திருவனந்தபுரம் மற்றும் பெங்களூரிலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசின் சுற்றுலா அலுவலகம் சுற்றுலாத் தகவல் மையம் இல்லாத இடங்களில் சுற்றுலா விளம்பர முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 2003-2004ஆம் ஆண்டில் ரூ. 18 இலட்சம் செலவில் புவனேஸ்வர், இந்தூர், புனே, சிம்லா, லக்னோ, வாரணாசி, அகமதாபாத் மற்றும் சூரத் ஆகிய இடங்களில் விளம்பர முகாம்கள் நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) சுற்றுலாவுடன் தொடர்புள்ள பல்வேறு நிறுவனங்களை ஒன்று சேர்க்கும் பன்னாட்டு அமைப்பு 'ஸ்கால்' ஆகும். 1937-ல் பாரிசில் முதல் 'ஸ்கால்' சங்கம் அமைக்கப்பட்டது. இந்த அமைப்பின் 500 கிளைகள், 80 நாடுகளில் 25,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் செயல்படுகின்றன. இவ்வமைப்பு பல்வேறு நாடுகளில் ஆண்டுதோறும் 5 நாட்கள் மாநாட்டினை நடத்துகிறது. இத்தகைய மாபெரும் மாநாடு இந்தியாவில் குறிப்பாக சென்னையில் முதல்முறையாக அக்டோபர் 2003-ல நடைபெறவுள்ளது. இதில் 1,200-க்கும் மேற்பட்ட பன்னாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை, இம்மாநாட்டை 'ஸ்கால்' அமைப்புடன் இணைந்து நடத்தவுள்ளது. இதற்காக ரூ. 25 இலட்சம் செலவிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டின் கலை, பண்பாடு, கைவினைப் பொருட்கள், பட்டாடைகள், பாரம்பரியம், வரலாறு, தமிழர்களின் விருந்தோம்பல் தன்மை போன்றவற்றிற்கு பன்னாட்டைச் சேர்ந்த முக்கியப் பிரதிநிதிகளிடையே சிறப்பான விளம்பரமும், ஆதரவும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



முற்பகல் 10-35

(6) சுற்றுலா வழிகாட்டிகள் சுற்றுலாத் துறையில் மிக முக்கிய பங்கை வகிக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாத் தலங்களை சுற்றிப் பார்க்கவும் மற்றும் போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி, உணவக வசதி, அங்காடி வசதி போன்ற விவரங்களை அளித்தும் சிறந்த சேவை புரிகிறார்கள். வழிகாட்டிகளை அமர்த்துவதால் படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. எனவே 2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 5.00 இலட்சம் செலவில் 'சுற்றுலா வழிகாட்டி' பயிற்சி நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) சுற்றுலாத் துறையின்கீழ் 20 சுற்றுலா அலுவலகங்களும் 21 சுற்றுலாத் தகவல் மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமேஸ்வரம், தருமபுரி, கொடைக்கானல், மதுரை, உதகமண்டலம், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பூம்புகார், சிதம்பரம், மாமல்லபுரம், சென்னை ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்களில் கணினி நிறுவப்பட்டுவிட்டது.

2003-2004 ஆம் ஆண்டில் புது தில்லி, மும்பை, கொல்கத்தா, கோவா, ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ரா ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்களிலும், திருவனந்தபுரம், பெங்களூர் மற்றும் ஐதராபாத் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலாத் தகவல் மையங்களிலும் ரூ. 9.00 இலட்சம் செலவில் கணினி நிறுவ மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(8) சுற்றுலாப் பயணிகள், ஓட்டல் அதிபர்கள், சுற்றுலா முகவர்கள், பிற மாநில அதிகாரிகள், மாணவர்கள் ஆகியோர்களுக்கும் மேலும் மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தமிழ்நாட்டில் சுற்றுலா வளம் குறித்து விளக்கப்படம் திரையிட 2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுலா ஆணையரகத்திற்கு ஒரு நவீன ஒளி வீழ்த்திக் கருவி ரூ. 5.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(9) புது தில்லி, மும்பை, கொல்கத்தா, கோவா முதலிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்களிலும் ஐதராபாத், திருவனந்தபுரம் மற்றும் பெங்களூரில் உள்ள சுற்றுலாத் தகவல் மையங்களிலும் நிகரி

வசதி தற்போது உள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் ஆக்ரா, ஜெய்ப்பூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமேஸ்வரம், பூம்புகார், சென்னை, தருமபுரி, கொடைக்கானல், உதகமண்டலம், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்களிலும் மற்றும் சென்னையிலுள்ள சுற்றுலா ஆணையரகத்திலும் ரூ. 6.80 இலட்சம் செலவில் நிகரி வசதி ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(10). சுற்றுலாத் துறை மூலம் முடிக்கப்பட்ட திட்டங்கள், செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள், மேலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள், விளம்பரக் குறிப்புகள், பணியாளர்கள் விவரம், பொருட்காட்சி, விழாக்கள், ஓட்டல்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து வைத்து தேவையான நேரத்தில் துல்லியமாக எடுத்து பயன்படுத்த 2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுலா ஆணையாக உபயோகத்திற்கு ரூ. 1.50 இலட்சம் செலவில் ஒரு சிறிய கணினி கொள்முதல் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(11) சுற்றுலா ஆணையரக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பூம்புகார் சுற்றுலா வளாகம், கட்டபொம்மன் நினைவுக் கோட்டை, பாஞ்சாலங்குறிச்சி, கன்னியாகுமரி, உதகமண்டலம், மாமல்லபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்களில் ரூ. 2.00 இலட்சம் செலவில் 2003-2004 ஆம் ஆண்டில் மழைநீர் சேகரிப்பு வசதி செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழக அரசு, சுற்றுலா வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. அதிக பிரபலமடையாத சுற்றுலாத் தலங்கள்மீது கவனம் செலுத்தி மாபெரும் வளர்ச்சியை எதிர்நோக்கி இத்துறை செயல்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ. 26.79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாவின் இந்த மாபெரும் வளர்ச்சிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தனிப்பட்ட ஆர்வம் ஒரு முக்கிய காரணமாகும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அரசின் ஒத்துழைப்பினால் சுற்றுலாத் துறை கடந்த இரண்டு ஆண்டுகளில் நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது. இத்துறையின் முக்கிய முயற்சிகள்



அனைத்தும் தமிழ்நாட்டிற்கு அதிக அளவு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் அதன்மூலம் வேலை வாய்ப்பு மற்றும் அந்நியச் செலாவணியைப் பெருக்கும் எண்ணத்தோடும் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் மனநிறைவுடன் தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேற்கொள்ளவும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையவும இத்துறை அயராது தொடர்ந்து பாடுபட்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி என்றால் அது புதிய பூபாளம்; புதிய பூபாளம் என்றால் அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். காலம் அளித்த தீர்ப்பு இது. நியாயங்களின் பளிங்கு மண்டபங்கள் அநியாயங்களின் சிறைக் கதவுகளாக மாறியபோதெல்லாம் இன்னல்களையும் இடர்களையும், சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கி அந்தச் சிறையின் கதவுகளை உடைத்து எறிந்த கரங்கள் யாருடைய கரங்கள்? அதிகார வெறியர்களின் அக்கினிப் பார்வைகள் நம்மை சுட்டபோதெல்லாம் பாசப் பனிமலர் தூவி, எங்களைப் பாதுகாக்க ஓடிவந்த பாதங்கள் யாருடைய பாதங்கள்? சுற்றி வரும் பகை முடிப்பேன், பழி துடைப்பேன் என ஆதரவின்றி அழுத திராவிடக் குழந்தைக்கு போராடிப் புது வாழ்வு தந்த புனித நெஞ்சம் யாருடைய நெஞ்சம்? வஞ்சம் தீர்க்க சில வஞ்சக நெஞ்சினர் அலைந்தபோதும், ஆயிரமாயிரம் அவலக் குரல்களை அனுதினம் கேட்கும் அன்னை உள்ளம் யாருடைய உள்ளம்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையாக நிற்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் வீறு நடை போடுவோம்; வெற்றிச் சரித்திரம் படைப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

மகிளா சிரோன்மணி, ராஷ்டிரிய பீஷ்மாச்சாரி ஆகிய எங்கள் தாயே, சென்னை கோட்டையிலே கொடியேற்றிய உங்கள் பொற்கரங்கள் டெல்லி கோட்டையிலே கொடியேற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உரையினிலே குறையிருப்பின் பொறுத்தருள வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேறி இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளில் கூறிய கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு முயற்சி எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கங்கள் இடம் பெற்றிருப்பதால் எனது பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அம்மா என்றால் அன்பு. அன்பினால் உண்டாவது பண்பு. பண்பினைத் தொடர்வது அறிவு. அறிவினால் ஏற்படுவது ஆற்றல். ஆற்றலில் மிகுதி திறமை. திறமை படைப்பது சாதனை. இந்த சாதனைக்குரியவர்தான் நம் அம்மா அவர்கள்.

இந்த யுகத்தில் ஸ்ரீபரந்தாமனின் பரிபூரண அருள்பெற்ற மக்கள் குல மாதாசிதான் மாண்புமிகு அம்மா அவர்கள். நல்லவர்களை வாழவைத்தும், அதேபோல கயவர்களை அழிப்பதற்கும், ஏன்? கயவர்களே அழிந்துபோகும் அளவிற்கு நல்லனவற்றைச் செய்து கொண்டிருப்பவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். கோடானுகோடி தமிழ் மக்களின் ஒப்பற்ற தலைவியே, எங்களை வாழவைதது்க் கொண்டிருக்கிற வெற்றித் திருமகளே, சாதனைத் தலைவியே, இதய தெய்வமே, மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களின் பாதம் தொட்டு வணங்கி எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்கிக் கொண்டு, இந்த மாமன்றத்தில் எனது உரையை தங்களது பரிபூரண ஆசியோடு தொடங்குகின்றேன்.

சிங்கமென நிமிர்ந்து நின்று, எந்த மக்கள் தங்களைத் தேர்ந்தெடுத்தார்களோ, அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதையே தனது முதல் கடமையாக மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதற்குச் சான்றுதான் சாத்தான்குளத்தில் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

ஒரு பொற்காலத்தை தமிழர்களுக்காகப் படைத்துக்கொண்டு இருக்கும் அம்மா அவர்களின் அறிவார்ந்த வழிகாட்டுதலில், அம்மா



அவர்களின் மகத்தான ஆட்சியில் வீரநடை போடுகிறது செய்தி மற்றும் விளம்பரத் துறை. இத்துறையின் பணிகள் வருவாயை நோக்கமாகக் கொள்ளாமல் பொதுமக்களின் நலனை மையமாகக் கொண்டது. தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான பணிகளை, சாதனைகளை பேரவையில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தினசரி நாளிதழ் பத்திரிகையாளர்களுக்கு மட்டுமே அரசு அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தனியார் தொலைக்காட்சியினருக்கும் அரசு அங்கீகார அட்டைகள் வழங்க உத்தரவிட்டு பெருமை சேர்த்தார்கள். தனியார் தொலைக்காட்சி நிருபர்களுக்கும், ஒளிப்பதிவாளர்களுக்கும் ஒரு நிறுவனத்திற்கு 10 செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வீதம் வழங்கப்பட்டு வருகினறன. 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் 592 பேருக்கு செய்தியாளர் அரசு அங்கீகார அட்டையும், 383 பத்திரிகையாளர்களுக்கு இலவச பேருந்து அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில்தான் அம்மா அவர்களின் ஆணையின்பேரில், பத்திரிகையாளர்களுக்கு அதிக அளவில் அங்கீகார அட்டையும் இலவச பேருந்து அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் 67 நலிவுற்ற ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் மாதந்தோறும் ஓய்வு ஊதியம் பெற்று வருகின்றனர். 9 பத்திரிகையாளர் குடும்பத்தினர்கள் குடும்ப ஓய்வு ஊதியம் பெற்று வருகின்றனர். 2002-2003 ஆம் ஆண்டில் 23 இலட்சம் ரூபாய் ஓய்வூதியத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-45

தலைமைப் புகைப்படப் பிரிவிற்கு இந்தத் துறையில் முதன்முறையாக 3 டிஜிட்டல் புகைப்படக் கேமராக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புகைப்படங்களை கணினி மூலம் அனைத்து பத்திரிகைகளுக்கும் e-mail வாயிலாக உடனுக்குடன் அனுப்ப ஏதுவாகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் செய்தியாளர் கூட்டத்தின்போது, பத்திரிகையாளர்கள் செய்திகளை வசதியாக எடுக்கும் வகையில், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சி கேமராமேன்கள் வசதியாக நின்று படங்கள் எடுக்கும் வகையிலும், முதலமைச்சர் அறைக்கு அருகில் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின் பேரில், ஒரு பத்திரிகையாளர் அறை அமைக்கப்பட்டு, அங்கு தற்போது பத்திரிகையாளர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் பத்திரிகையாளர்களின் நலன் கருதி, வீட்டு வசதி அடுக்குமாடிக குடியிருபபுகள் மற்றும வீடுகளை சுலபத் தவணையில வாஙகும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததனைத் தொடர்ந்து, தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் பாரத மாநில வங்கியும், இணைந்து செயல்படுத்தி வருகிறது. இது பத்திரிகைத் துறையினரின் குடும்ப நலத்தின்மீது மாண்புமிகு அமமா அவர்கள் கொண்டுள்ள பாசப்பிணைப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். ஆட்சியை விட்டுப் போகின்றபோது, கஜானாவை காலி செய்த மஞ்சள் துண்டுக்காரர் நிதி நெருக்கடியை விட்டுவிட்டுப் போனாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் மனம் தளராமல்

'அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை யச்சமில்லை, அச்சமென்பதில்லையே'

என்று துவளிச்சலான செயல்வேகத்துடன் செயல்பட்டு வருகிறார்கள்.

கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சிக் காலத்தில், இத்துறையின் திட்டங்களுக்காக, ரூ. 219.32 இலட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் இத்துறையின் மேம்பாட்டிற்காக, ரூ. 175.25 இலட்சம் ஒதுக்கீடு செய்து இந்தத் துறைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விடுதலை வீரர்களையும், சுதந்திரப் போராட்ட தியாகிகளையும், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும், சமுதாய மேம்பாட்டிற்கும், தமிழ் மொழி மேம்பாட்டிற்கும் உழைத்திட்ட பெரியோர்களையும் போற்றிப் பெருமைப்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஈடு இணை யாரும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் தென்மாவட்ட மக்களின் நீண்ட நாள் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாருக்கு திருநெல்வேலி நகரில் மணிமண்டபம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, 13-3-2003 அன்று, மாண்புமிகு அம்மா அவர்களால் இம்மணி மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவகம் பல ஆண்டு காலமாக சரியாக பராமரிக்கப்படாமல் இருந்தது.



மாண்புமிகு அம்மா அவர்கள் இந்நினைவகத்தின் சிறப்புப் பராமரிப்புக்காக ரூ. [illegible] இலட்சம் நிதி ஒதுக்கீடு செயது ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

திரை உலகிற்கு பெருமை சேர்க்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின் பேரில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நினைவாக, நினைவு மண்டபம் அமைப்பதற்கு, சென்னை நகரின் மையப்பகுதியான அடையாறில் ரூ. 10.27 கோடி மதிப்புள்ள 65 சென்ட் நிலத்தை இலவசமாக தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள். தென்னிந்திய நடிகர் சங்கம் அதில் கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில், வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம அமைக்க ரூ. 35 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து, நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டுமானப பணிகள நடைபெற்று வருகினறன.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நினைவகம் அமைக்கும்பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓமந்தூர் கிராமத்தில், அரசு ஆணையிட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலை வீரர்களைப் போற்றும் வகையில், விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவாக ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் மணிமண்டபம் கட்ட ஆணையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம அமைக்க தி.மு.க. அரசு ரூ. 50 இலட்சம் அனுமதியளித்தது. 2001 ஆம் ஆண்டு வரை இம்மண்டபம் அமைக்க ரூ. 22 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. கட்டுமானப் பணிகளில் தி.மு.க. அரசு கவனம் செலுத்தாததாலும், கட்டுமானப் பணிகளுக்கு மீதமுள்ள தொகை கொடுக்கப்படாததாலும் கட்டுமானப் பணிகள் நின்று போயின. எல்லாத் துறைகளிலும் கஜானாவை காலி செய்த கருணாநிதி, இந்த மணிமண்டபம் கட்டுவதிலும் நிதியைத் தரவில்லை. இது மக்கள் பணியினை மறந்து சட்டமன்றத்தைப் புறக்கணித்த சுயநலக்காரர்களின் கபட நாடகத்தையும், மெத்தனப் போக்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

இதனை எதற்காகச் சொல்கின்றேன் என்றால், சக மதத்தினர்கள் அனைவரையும் மதிக்கக்கூடிய இந்த மக்கள் தொடர்புத் தன்மை அவர்களுக்கு இல்லை. இல்லாத காரணத்தால்தான், மரபை மீறுவதை, மரபாகக் கொண்டிருக்கிறார்கள், இந்த மாயாஜாலக்காரர்கள். இவர்கள் காழ்ப்புணர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

முற்பகல் 10-50

இஸ்லாம் சமுதாயத் தலைவர்கள்பால் மிகுந்த மரியாதையும், பாசமும் கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் நிதிநிலை நெருக்கடியிலும் மீதமுள்ள ரூ. 28 இலட்சத்திற்கு அனுமதியளித்து, கட்டுமானப் பணி தொடர மனித நேயத்தோடு ஆணையிட்டார்கள். மேலும் இம்மணிமண்டபம், இஸ்லாமிய கலாச்சார அடிப்படையில் கருணாநிதி அமைக்கவில்லை என்ற இஸ்லாமியப் பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று, இம்மணிமண்டபத்தின் முகப்பில் இஸ்லாமியப் பெருமக்களின் விருப்பத்திற்கேற்ப, மாற்றியமைக்க உடனடியாக உத்தரவிட்டதோடு, அதற்குக் கூடுதல் செலவினமான ரூ. 8.69 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, போற்றுதலுக்குரிய இம்மணிமண்டபம் நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இந்த அவைககுத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகத்தை தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கிற கருணாநிதி அவர்கள், இந்த மண்டபத்திற்கு முழுப்பணம் ஒதுக்கினாரா? அந்த மண்டபம் எந்த அளவுக்கு இருந்தது என்பதை நாங்கள் அந்த இடத்திற்குச் செல்கிறபோது காண நேர்ந்தது. அங்கே உள்ளே செல்லமுடியாத அளவுக்குப் புதர்கள் மண்டியிருந்தன. வேலைப் பணிகள் முடிவு பெறாத நிலையில் இருந்தன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜரைப் பெருமைப்படுத்தும் வகையில், பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும் என இம்மாமன்றத்திலே அறிவித்து, 15-7-2002 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னையில், காமராஜர் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கிவைத்து, விழாவினைச் சிறப்பித்தார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.



அதுமட்டுமின்றி, ஆண்டு முழுவதும், இவ்விழாவினைக் கொண்டாட ஆணையிட்ட நம் அம்மாவின் மனிதாபிமானத்தைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. இவ்விழா, இதுவரை 23 மாவட்டங்களில் கொண்டாடப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 மாவட்டங்களில் வரும் மாதங்களில் கொண்டாடப்பட இருக்கிறது. நிறைவு விழாவினை, விருதுநகரில், 15-7-2003 அன்று கொண்டாடுவதற்கு நடவடிக்கைகள், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்புமிக்க 15 அம்சத் திட்டத்தை பொதுமக்கள் எளிதில் அறிந்து பயன் பெறும் வகையில், அரசின் அனைத்துத் துறைகளும் பங்கேற்கும் பல்துறை பணி விளக்க முகாம்களில், பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் நலிந்த கிராமியக் கலைஞர்கள் பலரின் வாழ்வும், அம்மாவின் பரிவால் வளம் பெறுகிறது.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக திரைப்படங்களில் பின்னணிக் குரல் கொடுப்பவர்களுக்கு (டப்பிங் கலைஞர்கள்), மாண்புமிகு அம்மா அவர்கள்தான், 2001 ஆம் ஆண்டில் திரைப்பட விருதுகளை அறிவித்தார்கள். அதில், 2000 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கப்படுவோர் பட்டியலில் ஆண் மற்றும் பெண் பின்னணிக் குரல் கொடுப்பவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழ்த் திரைப்பட உலகில், திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் அரிய திரைப்பட சேகரிப்புகளை அரசுடமை ஆக்குவதற்கு பரிவுத் தொகையாக ரூ. 10 இலட்சம் வழங்கியும், அவர் எழுதிய 'சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்ற புத்தகத்தினை வெளியிடுவதற்காக, ரூ. 5.50 இலட்சம் உதவித் தொகை வழங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இது, திரைப்படத் துறையிலுள்ள ஒரு சாதாரண நபருக்கு உதவி செய்துள்ளதை திரையுலகமே பாராட்டுகிறது என்பதைப் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரைப்படக் கல்லூரி மாணவர்கள், கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்காக, ரூ. 11 இலட்சம் செலவில் கம்ப்யூட்டர் மையம் அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னையிலுள்ள திரைப்படக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களை தேசிய மற்றும்

சர்வதேசத் திரைப்பட விழாக்களில் பங்கு பெறச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ. 75 ஆயிரம் நிதி ஒதுக்கி, இந்த ஆண்டு, 4 குறும்படங்கள் திரைப்பட விழாக்களுக்கு அனுப்ப தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அழுகின்ற குழந்தைகூட, சினிமா என்றால் சிரிக்கின்ற காந்த சக்தி கொண்ட திரைப்படத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த சாதனைகளோ ஏராளம். திரைப்படம் எடுப்பதற்கு திரைகடல் தாண்டிப் போகும் நிலையை மாற்ற, திரைப்பட நகரை மிகச் சிரமப்பட்டு, எழிலார்ந்த பிரதேசமாக உருவாக்கினார் மாண்புமிகு அம்மா அவர்கள். திரைப்படத் துறையின்பால் அக்கறை இருப்பது போல் நாடகம் நடிக்கும் கோபாலபுரத்துக் கோமாளிகள், என்ன செய்தார்கள் தெரியுமா? தென்னகமே வியந்து பாராட்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க திரைப்பட நகரை, சின்னாபின்னமாக்குவதற்காக கோபாலபுரத்து ஆசாமி, தனக்கு வேண்டியவர்களைத் தலைவர்களாக நியமித்து, திரைப்பட நகரை அழித்து, ஏராளமான நட்டங்களை உண்டாக்கி, நிர்வாகத்தைச் சீர்குலைத்து, தனக்கு வேண்டியவர்களைத் தேவையின்றி பணியில் அமர்த்தினார்கள். ஏன் தெரியுமா? வஞ்சகத்தை, சூழ்ச்சிகளை, பொறாமைதனை, தொகை தொகையாக எதிர்கொண்டு தூள் தூளாக்கிய அடிபெயரா இமயம் மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய நகரம்தான், திரைப்பட நகரம் என்ற ஒரே காரணத்திற்காகத்தான். இது என்ன கொடுமை? மேலும் இவர்களது 5 ஆண்டுகால ஆட்சியில் கிட்டத்தட்ட ரூ. 6 கோடியே 43 இலட்சம் நட்டத்தை உண்டாக்கினார்கள். இப்படிச் செய்தவர்களைத் தோலுரித்துக் காட்டுவது முக்கியக் கடமையாகும். இவர்களை திரைப்பட உலகம் மன்னிக்கவே மன்னிக்காது. ஆனால் திரைப்பட நகருக்கு மீண்டும் ஒரு புதுப் பொலிவு ஏற்படுத்தி தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அனுமதியளித்து, அதனை அறிவுநகரமாக மாற்றிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-55

இந்தத் துறையின் மூலம் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை சட்டப் பேரவைத் தலைவரின் ஒப்புதலோடு, வீடியோவில் பதிவு செய்து, சட்டமன்றம் நடைபெறும் நாட்களில், தொலைக்காட்சி நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக, நாள்தோறும் அனுப்பிவைக்கப்படுகிறது. மேலும் மாண்புமிகு அம்மா அவர்கள் பங்கேற்கும் சட்டமன்ற நிகழ்ச்சிகளை, தனியார் தொலைக்காட்சிகள் மூலம், தமிழகத்தில் அனைத்து கிராமங்களுக்கும் ஒளிபரப்பு செய்வதால், பொதுமக்களின் வரவேற்பு மிகுதியாக உள்ளது என்பதை இங்கே உவகையோடு கூறிக்கொள்கிறேன்.



இதுவரை 109 அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன. இதன் மூலம் அரசுக்கு 10.70 கோடி ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு 2001 டிசம்பரிலிருந்து இதுவரை நடைபெற்ற 127 தனியார் பொருட்காட்சிகளின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூ. 18.05 இலட்சம் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என்பதைப் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் பேரில் கடந்த ஜனவரி திங்களில் புது தில்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பாக பங்கேற்ற அலங்கார ஊர்தி தேர்வு செய்யப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருட்காட்சியின் மூலமாக கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 290 இலட்சம்தான். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரையின்படி சிறப்பாகச் செயல்பட்ட பொருட்காட்சியில் கடந்த இரண்டே ஆண்டுகளில், ரூ. 234.29 இலட்சம் வருவாயை ஈட்டி, மிகப் பெரிய சாதனை படைத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துறையால் நடத்தப்படும் தமிழரசு இதழில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி வேற்றுமொழிக் கதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் அரசின் திட்டங்கள், நலத் திட்ட உதவிகள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு அம்மா அவர்களின் உரைகள் போன்றவை வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் 13 சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டு இருக்கின்றன.

கடந்த ஆண்டு, காவல் துறை, சமூக நலத் துறை, தொழிலாளர் நலத் துறை போன்ற துறைகளின் திட்டங்கள் குறித்து சிறப்பு விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டுள்ளன.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், உடல் ஊனமுற்றோருக்கு அரசின் சலுகைகள் குறித்தும், ஆதி திராவிடர் நலத்திற்காக அரசு ஆற்றும் அரிய பணிகள், தொழிலாளர் நலத் துறை சார்பாக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, காவல் துறை சார்பாக பொது மக்கள் பின்பற்ற வேண்டிய எச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய விளம்பரங்கள் முதன் முதலாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி இந்தத் துறையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. இந்த விளம்பரங்கள் பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால், இந்த ஆண்டும் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கலந்து கொண்ட அரசு விழாவில், தொடங்கி வைக்கும் திட்டங்கள், நலத் திட்ட உதவிகள், வளர்ச்சித் திட்டப் பணிகள் ஆகியவற்றை அந்தந்த மாவட்ட மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது.

இந்தத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு அம்மா அவர்களின் ஆணையின்பேரில் நவீன பயிற்சி அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் ஒட்டுமொத்தத் துறைகளும் உன்னதமான துறைகளாக விளங்க வேண்டும்; அதன்படி இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் விளைந்த உயர்ந்த உன்னத நோக்கமாகும்.

மேலும் வளர்ந்து வரும் விஞ்ஞான வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் செய்தித் துறையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கி வருகிறார்கள் என்பதற்கு மேற்கூறிய சான்றுகளே இந்தச் சாதனைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியுடன்—ஆணையின்படி—கீழ்க்கண்ட சில அறிவிப்புகளை இங்கே வெளியிட விரும்புகின்றேன்:



முற்பகல் 11-00

(1) செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் தலைமைச் செயலகப் பிரிவின் பயன்பாட்டிற்காக, இந்தத் துறையில் அமைக்கப்பட்டுள்ள கணினி மையத்திற்கு ஒரு Server மற்றும் 10 கணினி உபகரணங்களும் ரூ. 5.50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

(2) செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் தலைமைச் செயலகப் பிரிவின் பயன்பாட்டிற்காக, ஓர் ஒளி நகல் இயந்திரம் ரூ. 1.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

(3) செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் தலைமைச் செயலகப் பிரிவுக்காக அமைக்கப்பட்டுள்ள கணினி மையத்திற்கு குளிர்சாதன வசதி செய்ய ரூ. 50,000 செலவில் குளிர்சாதன இயந்திரமும் உபகரணங்களும் வாங்கி பொருத்தப்படும்.

(4) செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு, பத்திரிகைத் தொடர்புப் பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களிடமிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள், அரசின் பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள் ஆகியவற்றை விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களிலும் அனைத்துப் பத்திரிகைகள், தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அனுப்ப, அதிகத் திறன் கொண்ட ஓர் ஒளி நகல் இயந்திரம், ஒரு கணினி மற்றும் துணைக் கருவிகள் வாங்குவதற்கும், செய்தி வெளியீட்டுப் பிரிவின் ஒரு பகுதியை குளிர்சாதன வசதி செய்து அங்கு கணினிப் பிரிவு அமைக்கவும் ரூ. 4.70 இலட்சம் செலவிடப்படும்.

(5) இத்துறையின் மேற்கோள் பிரிவிற்கு, நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றில் வெளியாகும் செய்திகளைச் சேகரித்து வைக்கவும், மாவட்டங்களிலிருந்து செய்திகளைப் பெறவும், முக்கியச் செய்திகளை உடனுக்குடன், மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் அலுவலகங்கள், துறைச் செயலாளர்களின் நடவடிக்கைக்காக அனுப்ப ஒரு கணினியும், துணைக் கருவிகளும் மற்றும் ஒரு நிகரி இயந்திரமும் ரூ. 1.50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

(6) தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் வீடியோ செய்தி மலர்களை கிராமப்புறங்களில் வீடியோ திரைப்படக் கருவிகள் மூலம் காண்பிக்க ஏதுவாக ஏற்கெனவே 26 செய்தி மற்றும் மக்கள் தொடர்பு

அலுவலகங்களுக்கு 26 வி.சி.டி. கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும், 6 செய்தி நிலையங்களுக்கும், தலைமையிடத்திற்கும், ஆக மொத்தம் 10 வி.சி.டி. கருவிகள் ரூ. 70,000 செலவில் வாங்கி வழங்கப்படும்.

(7) இந்தத் துறையினால் பராமரிக்கப்படும் நினைவகங்களில் கிரானைட் கல்லால் ஆன தகவல் பலகைகள் அமைக்கப்பட உள்ளன. நினைவகங்களைப் பற்றி பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், பல்வேறு விவரங்கள் தாங்கிய இந்த கிரானைட் தகவல் பலகைகள் முதற்கட்டமாக 20 நினைவகங்களில் ரூ. 5.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

(8) 2001 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய துறையின் ஆய்வுக் கூட்டத்தில் இத்துறையில் ரூ. 25.00 இலட்சம் செலவில் தனியாக ஓர் இணைய வலைதள ஒளிபரப்பு மேடை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இந்த இணைய வலைதள ஒளிபரப்பு மேடை அமைப்பதன் மூலம் நாடெங்கிலுமுள்ள பத்திரிகை அலுவலகங்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவை அரசு செய்தி வெளியீடுகள், புகைப்படங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் பெற மிகவும் பயனுள்ளதாக அமையும். ஊடக நிறுவனங்களுக்கு மட்டுமன்றி, பொதுமக்களுக்கும் பயனுள்ளதாக இந்த ஏற்பாடு அமையும். இந்தத் துறையின் தலைமையிடத்தில் (சென்னை) ஓர் இணைய வலைதள ஒளிபரப்பு மேடை ரூ. 25.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளின் சிகரமாக, சரித்திரத்தில் இமயமாக, தமிழகத்தில் பாரதி கண்ட வாலாற்றுத் தலைவியாக, இந்த வையகத்தில் மாசற்ற மக்களாட்சியை சிறப்புடன் நடத்திவரும் உலகம் போற்றும் உன்னதத் தலைவியாக, அன்னை தெரசாவால் போற்றப்பட்ட தமிழகத்தின் முதல் முதல்வராக எங்களுக்கெல்லாம் தாயாக, தந்தையாக, எங்களையெல்லாம் அரவணைத்துச் செல்லும் ஆசானாக, பொலிவு பெற்றுத் திகழும் தெய்வத் திருத்தலங்களின் மேம்பாட்டிற்கு வழிகாட்டியாக அமைந்திருக்கும் எங்களது இதய தெய்வமே! அன்று, அகஸ்டஸ் சீசரின் காலம் ரோமாபுரியில் பொற்காலமாக அமைந்தது. குப்தர்களின் காலம் வட இந்தியாவின் பொற்காலமாக அமைந்தது. இன்று, இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக்காலம் தமிழகத்திற்கு ஓர்



உன்னத பொற்காலம் என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாறு நாளைய சரித்திரப் பொன்னேடுகளில் பொறிக்கப்பட்டு, எதிர்காலச் சந்ததியினர்களுக்கும், அரசியல வல்லுநர்களுக்கும் ஒரு மாபெரும் எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனக் கூறிக்கொண்டு, மீண்டும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின பாதம் தொட்டு வணங்கி, என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கார்த்தி அவர்கள் பேசும்போது கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய நகரங்களில் நிரந்தரப் பொருட்காட்சியை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார்கள். ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் மேற்படி நகரங்களில் நிரந்தரப் பொருட்காட்சியை அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் *11-05*

மாண்புமிகு உறுப்பினர் ராஜேந்திரன் அவர்கள் பேசுகின்றபோது சில நினைவகங்களில் காப்பாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன எனவும், அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தப் பணியிடங்கள் காலியாக இருந்தாலும், மற்ற பணியாளர்களை வைத்து நினைவகங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பணியாளர்களை நியமிப்பதில் அரசு தடையாணை தளர்த்தப்பட்டவுடன் இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறையைப் பொறுத்தவரையில் 124 வெட்டுப் பிரேரணைகள் வரப்பெற்றன. அரசின் ஆக்கப் பணிகளையும், சமூக நலத் திட்டங்களையும் சிறப்பாக விளம்பரப்படுத்தி வரும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பணிகள் இன்னும் சிறக்கவும், மேம்பாடு அடையவும், மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறிய நல்ல பல அரிய கருத்துகளை ஏற்று, அம்மா அவர்களின் அறிவுரைகளின் அடிப்படையில் இந்த அரசு படிப்படியாக, நிச்சயமாக கொடுத்திருக்கிற அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கம் இடம் பெற்று இருப்பதால் எனது பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கத்தின் கர்ஜனையாகவும், சங்கத் தமிழின் கவிதையாகவும், சத்தியத்தின் வரவாகவும், விவசாயிகளுக்கு மாமழையாகவும், ஏழைகளுக்குத் தோழனாகவும், எதிரிகளுக்கு கூற்றுவனாகவும், ஆறுகோடித் தமிழ் மக்களின் ஒப்பற்ற ஒரே தலைவியாகவும், ஏழை எளிய மக்களின் இதய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும் அரசியாகவும், ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் காவல் இதய தெய்வமாகவும், சாதாரணத் தொண்டர்களையும் மதிக்கின்ற ஒரே கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதனை எடுத்துக்காட்டும் புரட்சித் தலைவியாகவும், சாதாரணத் தொண்டனாகிய என்னை அமைச்சராக்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அமைச்சரவையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் பொறுப்பையும் எனக்களித்து, எனக்கும் என்னைப் போன்ற தொண்டர்களுக்கும் வழிகாட்டியாக இருந்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது துறையின் மானியக் கோரிக்கை மீதான உரையைத் தொடங்குகின்றேன்.

ஒரு மனிதனுக்கு இன்றியமையாதது உணவு, உடை, உறைவிடமாகும். இப்பூமியில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் தன் வாழ்நாளில் தன் குடும்பத்திற்கு ஒரு வீடாவது கட்ட வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். எனவேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடும்பத்திற்கு ஒரு வீடு வழங்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்து இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டிககொண்டிருக்கிறார் என்பதனை இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கையை நிறைவேற்ற, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்குவேன் எனச் சபதமிட்டு அந்தச் சபதத்தை நிறைவேற்றும் வகையில் தமிழக மக்களுக்காகத் திட்டங்களைத் தீட்டி வருகிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தற்போது வாழ்கின்ற சமுதாய மக்கள் மட்டுமல்லாமல், வரவிருக்கின்ற மக்களுக்கும் பயன்படும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடனும், தீர்க்கமான சிந்தனையுடனும் பல முன்னோடித் திட்டங்களை தமிழக மக்களுக்கு அளித்தவர்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தொலைநோக்குப் பார்வையுடன் அவர் தீட்டித் தந்த திட்டங்களை, முன்பு இருந்த ஆட்சியாளர்கள் நிறைவேற்றத் தவறிய காரணத்தினால்தான் தமிழக மக்கள் அவர்களைத் தூக்கி எறிந்துவிட்டு மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் தமிழக மக்களைக் காக்கின்ற தெய்வமாக, தமிழக மக்களை வாழ வைக்க வந்த தெய்வமாக, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றுவதற்காக மாபெரும் மக்களின் ஒருமித்த சக்தியோடு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பினை மீண்டும் அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக, மகாபாரதக் கதையில் வருவதைப்போல பல வியூகங்களை அமைத்து அதில் தோல்வி கண்டு, கடைசியாக சாத்தான்குளம் இடைத்தேர்தலில் அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மாண்புமிகு தமிழக முதலவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அபிமன்யூவை வீழ்த்தியதைப் போல் வீழ்த்தலாம் என கனவு கண்டார்கள். ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அபிமன்யூ அல்ல, நீங்கள் எந்த வியூகம் அமைத்தாலும் அதை உடைத்து எறிகின்ற அர்ச்சுனன் என்பதை சாத்தான்குளம் இடைத்தேர்தலில் நடத்திக்காட்டியவர்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காகச் செயல்படுத்த இருந்த பல நல்ல திட்டங்களை முன்பு இருந்த ஆட்சியாளர்கள் வேண்டுமென்றே காலதாமதப்படுத்தினார்கள். பல நல்ல திட்டங்களைக் கிடப்பில்

போட்டார்கள். இப்போது அவை எல்லாம் தூசி தட்டப்பட்டு மீண்டும் நிறைவேற்றப்பட்டு வருவதை தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-10

இதற்கு ஓர் உதாரணத்தை மட்டும் இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னை, கோயம்பேட்டிலே சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1994 ஆம் ஆண்டு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையினுடைய அரசாணை எண் 499, நாள் 19-7-1994 மூலமாக ஓர் ஆணை வெளியிட்டதோடு, புறநகர்ப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு உள்வட்டச் சாலையில் 27 ஏக்கர் நிலத்தையும் தேர்வு செய்து, அதைக் கட்டுவதற்கான திட்ட அனுமதியும் வழங்கினார்கள். ஆனால் 1996 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் வேண்டுமென்றே காலதாமதம் செய்தார்கள். எனவேதான் தமிழக மக்கள் அவர்களைத் தூக்கியெறிந்துவிட்டு, மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஆட்சியைக் கொடுத்த உடனே 'நல்லவர்கள் காலத்திலே தொடங்கப்பட்ட நல்ல திட்டங்கள் நல்லவர்கள் காலத்திலேதான் நிறைவுறும்' என்பதற்கு எடுத்துக்காட்டாக, சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு அம்மா அவர்களுடைய திருக்கரத்தாலேயே 18-11-2002 அன்று மிகவும் சீரும், சிறப்புடன் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம் திறக்கப்படுமா, திறக்கப்பட்டாலும் சிறந்த முறையில் பராமரிக்கப்படுமா என்ற கேள்விகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து, இந்தியாவிலேயே மிகச் சிறந்த பேருந்து நிலையம் (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் 'ஏழைகளின் Airport' என்றும் (குறுக்கீடு) ஆசியா கண்டத்திலேயே மிகவும் சிறந்த பேருந்து நிலையம் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஏழைகளினுடைய Airport என்றும் பலரும் பாராட்டும்படி மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் அதற்கு முழுக் காரணம் எங்களது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். பொதுமக்களுடைய வசதிக்காக Airport-ல் உள்ளதுபோல் பெட்டி, படுக்கைகளை எளிதாக எடுத்துச்செல்ல trolley; முதியவர்கள் அமர்ந்து சென்று பேருந்துகளில் ஏற சக்கர வண்டிகள்,



மற்றும் இதுபோன்ற எண்ணற்ற வசதிகள் அனைத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனைப்படியே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கீரைத் தண்டு பிடுங்க ஏலேலோ பாடுவார்கள் கடந்த ஆட்சியாளர்கள். கடுமையான பணியினை கண நேரத்திலே முடித்திடுவார் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெருந்தன்மை என்பது மாண்புமிகு அம்மாவைப்போல பிறவியிலேயே வர வேண்டும். மண் குடிசை என்றால் அதை பொன் குடிசையாக மாற்றிடுவார். ஏழைகள் என்றால் அவர்கள் இல்லத்தினுடைய இருட்டைப் போக்க நிலவாய் வெளிச்சம் தந்திடுவார்.

மக்கள் நலனிலே மிகுந்த அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த பல்வேறு திட்டங்களை மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அதை விடுத்து, பொய்யான ஒரு மாயத் தோற்றத்தை நீங்கள் உருவாக்கி, மக்களை திசை திருப்ப நினைத்தால் அதில் உங்களுக்குத் தோல்விதான் மிஞ்சும்.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த வீட்டு வசதி வாரியம் என்று பெயர் எடுத்திருந்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கடந்த தி.மு.க. ஆட்சியாளர்களுடைய நிர்வாகச் சீர்கேட்டால் மீளாக் கடனில் மூழ்கி அமைப்பே சீரழிந்துவிடுமோ என்ற ஓர் அச்சமான சூழ்நிலையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாகடர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை 2001 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்ட பிறகு, எடுத்த நடவடிக்கையினால் மீளாக் கடனில் மூழ்கியிருந்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமானது பிற நிதி நிறுவனங்களுக்குத் திரும்பச் செலுத்த வேண்டிய கடன் தொகையின் வட்டி விகிதத்தை மாற்றியமைத்து, வாரியத்தினுடைய வட்டிச் சுமையைக் குறைத்து, நிதி நிலைமையைச் சீரமைத்த காரணத்தினால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ. 100 கோடி அளவில் வட்டிச் சுமை குறைந்துள்ளது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட தருணத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திலே சுமார் 688 கோடி ரூபாய் மதிப்பிலான வீடுகள், மனைகள் விற்கப்படாமல் தேக்க நிலையில் இருந்தன. இந்தத் தேக்க நிலையைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனையின்படி பல பரிசுத் திட்டங்களை அறிவித்து, விற்பனைக் குழுக்களை அமைத்து, வீட்டு வசதிக் கண்காட்சி மற்றும் பொருட்காட்சிகள் ஆகியவற்றில் பங்கேற்று பல புதிய யுக்திகளைக் கையாண்டதால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 6,548 மனைகள், 4,155 வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூபாய் 295 கோடியே 63 இலட்சத்திற்கு விற்கப்பட்டுள்ளன.

இத்தருணத்திலே வீட்டு வசதி வாரியத்தின் மதிப்புமிக்க நிலங்களைத் தனியார் ஆக்கிரமிப்புச் செய்து அனுபவித்து வந்ததை கடந்த தி.மு.க. ஆட்சியாளர்கள், வாரியத்தின் நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றிட எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்ததையும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சரியான நடவடிக்கை மூலம் சமீபத்திலே திருவான்மியூர் பகுதி, இந்திரா நகரிலே, சுமார் ரூ. 25 கோடி மதிப்புள்ள வாரியத்தினுடைய நிலத்தினை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்தவர்களிடமிருந்து பெறப்பட்ட, முடிந்த நிகழ்ச்சியினையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

சென்னை புறநகர் திட்டத்திற்காக திருவான்மியூர் கிராமத்தில் 2.81 ஏக்கர் நிலம் வாரியத்தால் 1964 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்டபோது திரு. டி.டி. பரசுராமன் என்பவர் ஒரு பொய்யான பட்டாவைப் பெற்று ஆக்கிரமிப்புச் செய்தார். 1984 ஆம் ஆண்டு அது கண்டுபிடிக்கப்பட்டது ; பட்டா இரத்து செய்யப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தில் இவர் தாக்கல் செய்த வழக்கில் பெற்றிருந்த தடையாணையும் 26-6-1997 அன்று நீக்கம் செய்யப்பட்டது. ஆனால் அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, மேற்சொன்ன நபரை நிலத்திலிருந்து காலி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. அவர் ஆக்கிரமிப்பு செய்த நிலத்தை பல்வேறு நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டிருந்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அந்த ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக



வெளியேற்ற விரைந்து செயல்பட வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் அந்த நிலத்தில் குத்தகை எடுத்தவர்கள் நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்குகளையெல்லாம் முறையாக நீதிமன்றத்தில் விரைந்து வழக்காடி, வீட்டு வசதி வாரியத்திற்குச் சாதகமான தீர்ப்பை 30-4-2003 அன்று பெற்று, ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப்பட்டனர்.

முற்பகல் 11-15

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கையின் காரணமாக ரூ. 25 கோடி மதிப்புள்ள வாரியத்தின் நிலத்தினை மீண்டும் பெற முடிந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த தி.மு.க. ஆட்சியில் வாரியத்தின் சொத்துக்களை மீட்க ஏன் முயற்சிகள் எடுக்கவில்லை என்பதனை மக்கள் அறிவார்கள்.

கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்களுக்காக 562 மனைகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்காக 106 மனைகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களுக்காக 847 மனைகள் மற்றும் குடியிருப்புகளும், உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்காக 541 மனைகள் மற்றும் குடியிருப்புகளும், ஆக மொத்தம் 2,056 மனைகள் மற்றும் குடியிருப்புகள் அடங்கிய திட்டம் ரூ. 94 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களின் இதய சிம்மாசனத்தில் என்றென்றும் வீற்றிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை நகர குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ. 44 கோடியே 84 இலட்சம் செலவில் 5,828 குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அமைத்துக் கொடுத்துள்ளார்கள் என்பதனை இங்கே நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிசைப் பகுதி சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 5 கோடியே 25 இலட்சம் செலவில் 30,124 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. கல்நார் ஓட்டு கூரை வீடுகள் அமைக்கும் திட்டத்தில் சுமார் ரூ. 11 கோடியே 33 இலட்சம் செலவில் 7,060 கல்நார் ஓட்டு கூரை வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மகளிர் தன்னம்பிக்கை உடையவர்களாக வளர்ச்சிப் பணிகளில் உரிய பங்கு வகித்து, பொருளாதார மேம்பாட்டினை அடைய தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் 5 இலட்சம் மகளிருக்கு ஐந்தாண்டுகளில் பயிற்சி அளிக்க திட்டம் ஒன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது.

2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சங்கள் வாரியத்திற்கு அரசு மானிய உதவி அளித்தது. இந்த நிதியுதவியினைக்கொண்டு கடந்த இரண்டாண்டுகளில் குடிசைப் பகுதிகளில் வாழும் 12,604 பெண்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பயிற்சி அளிக்கப்பட்டது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகள் பராமரிப்பின்றி இருப்பதைக் கண்ணுற்ற தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்ப்பதற்காகச் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் மற்றும் பிற நிதியிலிருந்தும் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ. 6 கோடியே 55 இலட்சம் செலவில் 10,000 குடியிருப்புகள் பழுதுபார்க்கப்பட்டன.

வால்மீகி அம்பேத்கர் திட்டத்தில் தனி வீடுகள் அமைத்தல் பகுதி-I-ன்கீழ் ரூ. 1 கோடி செலவில் 1,000 குடியிருப்புகள் கடந்த ஆண்டு கட்டப்பட்டுள்ளன என்பதனைப் பெருமையுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அன்புள்ளம் கொண்டவர்கள். எனவேதான் மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய சொந்தக் குரலில் பாடிய முதல் வரியே "அம்மா என்றால் அன்பு" என்பதுதான். அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னை நகரில் உள்ள குடிசைப் பகுதியில் இருக்கின்ற பாலர் பள்ளிகள் பல ஆண்டுகளாகப் பராமரிப்பின்றி இருக்கின்றன என்பதனை அறிந்து, அன்புள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் அப்பள்ளிகளைச் சீரமைக்க உத்தரவிட்டார்கள். அதன்படி ரூ. 73 இலட்சம் செலவில் 108 பாலர் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்க்கப்பட்டன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் 36,264 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 606 கோடியே 64 இலட்சங்கள் வீடுகள் கட்டுவதற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதனை மிக்க பொதுமக்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மக்களின் ஆதரவுடன்தான் திட்டங்களைத் தீட்டி அதனை வெளிப்படையாகச் செயல்படுத்தி நிறைவேற்றத்தான் தெரியும். பிறரைப்போல உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத் தெரியாது.

வடலூர் இராமலிங்க சுவாமிகள், "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, கவிஞர் கண்ணதாசன் பாடியதைப் போல, "உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், வேறொன்றும் தெரியாது. உள்ளத்தில் இருப்பதை வார்த்தையில் மறைக்கும் கபடம் தெரியாது". (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் கபட நாடகத்திற்குச் சொந்தக்காரர்களெல்லாம் முன்பு ஆட்சி செய்த தி.மு.க.வினர்தான். அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முன்பு ஆட்சி செய்த தி.மு.க.வினர் சமத்துவபுரம் திட்டத்தில் வீடுகள் தருகிறேன் எனக் கூறி, தரமற்ற வீடுகளைக் கட்டினார்கள். சமத்துவபுரத்தில் கட்டப்பட்ட ஒரு வீட்டினுடைய மதிப்பு ரூபாய் 45,000. ஆனால் இதில் ரூபாய் 35,000 மானியமாகவும், ரூபாய் 10,000 கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலிருந்து பயனாளிகள் பேரிலே கடன் பெறப்பட்டு, அந்தத் தொகை சமத்துவபுரத்திலே வீடுகள் கட்டிய ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. அந்த வீடுகளைப் பெற்ற பயனாளிகள் இன்று கடனாளிகளாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

தி.மு.க. அட்சியாளர்களின் சாதனை இன்று வேதனையாக மாறியுள்ளது என்பதுதான் உண்மை. ஏமாளியான பயனாளி ஒவ்வொருவரும் அன்று வாங்கிய கடன் தொகை ரூபாய் 10,000-க்கு வட்டியோடு சேர்த்து சுமார் ரூபாய் 20,000 வரை கூட்டுறவுச்

சங்கத்திற்குக் கட்ட வேண்டிய அவல நிலைக்கு அவர்களை ஆளாக்கியதுதான் கடநத தி.மு.க. அரசின் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து சமத்துவபுரம் திட்டங்களுக்கு 8,257 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 7 கோடியே 73 இலட்சம் ஆகும். இதற்காக சமத்துவபுரப் பயனாளிகளிடமிருந்து இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் 57 இலட்சங்கள் மட்டுமே. இலவசமாக வீடு கிடைக்கும் என எதிர்பார்த்த 8,257 பயனாளிகளின் வீடுகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடமானமாக வைக்கப்பட்டு, கடனைத் தற்போது திருப்பிச் செலுத்த இயலாததால் அவர்களது கடன் தவணை பாக்கிக்காக வீடுகளை ஜப்தி செய்யும் சூழ்நிலையே உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பயனீட்டாளருக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு ரூபாய் 15 கோடி வரை அரசு பொறுப்புறுதி ஏற்கும் என முன்னாள் அரசு ஆணை வழங்கியது. ஆனால் அதற்கான தொகையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்காததால் கடும் கடன் சுமையோடு பயனீட்டாளர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் கடனில் மூழ்கி உள்ளனர். என்வே சமத்துவபுரம் யாவும் தற்போது வேதனைபுரமாக மாறிய சூழ்நிலையை சென்ற ஆட்சி உருவாக்கித் தந்துள்ளது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இது எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை? இதற்கெல்லாம் யார் காரணம்? சமத்துவபுரம் திட்டத்தைச் சாதனைத் திட்டமாக ஊர் முழுவதும் சென்று பிரச்சாரம் செய்தாரே முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள்தான் இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதை நான் இந்த அவையிலே சுட்டிககாட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்று ஆட்சியிலிருந்த தி.மு.க. அரசு இதுபோன்று மறைமுகமான, மக்களை ஏமாற்றுகின்ற திட்டங்களைத் தீட்டியதால்தான் கடந்த பொதுத் தேர்தலிலும் மற்றும் பிறகு நடந்த இடைத்தேர்தலிலும் மக்கள் அவர்களுக்கு ஓட்டு அளிக்காமல் தி.மு.க.வினரை ஏமாற்றி அவர்களை ஓட ஓட விரட்டியடித்தனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் முறையாக வீடு கட்டுவதற்கு கடன்களை நாங்கள் வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் நிர்வாகப்



பொறுப்பேற்றவர்கள் அதிக விலையுள்ள மனைகளைக் குறைந்த விலைக்கு விற்றும், குறைந்த விலையுள்ள மனைகளை அதிக விலை கொடுத்து வாங்கியும் முறைகேடுகள் பல செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி நட்டத்தை ஏற்படுத்தி, சட்ட விரோதமாக சுய இலாபம் அடைந்துள்ளனர். போலி ஆவணங்கள் தயாரித்து வீடு கட்டக் கடன் வழங்கியுள்ளனர். ஏற்கெனவே கட்டப்பட்ட பழைய வீடுகளுக்கு மீண்டும் மீண்டும் வீடு கட்டக் கடன் வழங்கியுள்ளனர். குறைந்த பரப்பளவில் கட்டப்பட்ட வீடுகளுக்கு அதிக அளவு கடன் வழங்கியுள்ளனர். இதுபோன்ற முறைகேடுகள் செய்யப்பட்டுள்ள சங்கங்களின் பட்டியலை நான் சொல்லிக்கொண்டே சென்றால் இம்மாமன்றத்தினுடைய காலத்தை மிகுந்த அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கெடுப்பவர் எல்லாம் நிரந்தரமாக வாழ்வது கிடையாது. ஏழைக் குடும்பங்கள் சிந்திய கண்ணீர் வீண் போகாது. அடைக்க வேண்டியவர் கணக்கை எடுத்தால் சிறையே கொள்ளாது. கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களில் நடந்துள்ள முறைகேடுகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவது எனது கடமை என்ற காரணத்தினால் ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

நங்கநல்லூர் கூட்டுறவு கட்டடச் சங்க முன்னாள் தலைவராக இருந்தவரும், தற்போது ஆலந்தூர் நகராட்சித் தலைவராகவும் இருக்கின்ற திரு. ஆர்.எஸ். பாரதி என்பவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சுபம் நகர்-3 மனைப் பிரிவு ஏற்படுத்தியதில் காணப்பட்ட முறைகேடுகள் குறித்து கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது. அரசின் வழிகாட்டி மதிப்பு சதுர அடி ரூபாய் 61-க்கு நிலங்களை சங்கம் வாங்காமல் சதுர அடி ரூபாய் 82 மதிப்பிற்கு போலியான சந்தை மதிப்புச் சான்று தயாரித்து மனையிடங்கள் வாங்கபபட்டன. எனவே இதில் நங்கநல்லூர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபாய் 45 இலட்சம் இழப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த மோசடி குறித்து துறை விசாரணை முடிக்கப்பட்டு, வழக்கு தற்சமயம் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடிய விரைவில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள சங்கத்தின் முன்னாள் பொறுப்பாளர்கள்மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இம்மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு திரு. செங்கை சிவம் என்பவர் 31-8-1998 முதல் 25-5-2001 வரை தலைவராகப் பொறுப்பேற்று செயல்பட்டு வந்தார். அந்தக் காலகட்டத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக காவல் துறை குற்றப் புலனாயவுப் பிரிவிற்கு வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. கூடிய விரைவில் அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய ஆட்சியின்போது திருநகர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் நடைபெற்ற முறைகேடு சம்பந்தமாக முன்னாள் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள்மீது குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது. மதுரை வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கே. அக்கினிராஜ், சங்கத்தினுடைய முன்னாள் இயக்குநர்கள் திரு. ஏ. சாமுவேல், வேதமாணிக்கம் மற்றும் எஸ்.ஆர். சுரேந்திரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். சங்கத்தினுடைய முன்னாள் துணைத் தலைவர் திரு. கே. முருகன் என்பவரை காவல் துறை தேடி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம், செர்ரி ரோடு பகுதியில் பேலஸ் நகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் 68,012 சதுர அடி நிலத்தை சதுர அடி ரூபாய் 801 என்ற வீதத்தில் ரூபாய் 5 கோடியே 44 இலட்சத்திற்கு வாங்கி, அவற்றில் 119 அடுக்குமாடி வீடுகளும் 12 வணிக வளாகங்களும், 52 கடைகளும் ரூபாய் 7 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டியுள்ளது. ரூபாய் 9 கோடியே 85 இலட்சம் மதிப்பிற்குரிய வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் இன்னமும் விற்க இயலாத நிலையில் உள்ளன. கட்டுமானத்திற்குரிய திட்ட மதிப்பீட்டில் முறைகேடு, டெண்டர் முறையைக் கடைப்பிடிக்காமல் விலைப்புள்ளி, அதாவது Quotation முறை கடைப்பிடிக்கப்பட்டது. இந்தத் திட்டச் செயலாக்கத்தில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி 24 கூட்டுறவுச் சங்கங்களிலே சட்டப் பிரிவு 81-ன்கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 27 சங்கங்களில் சட்டப் பிரிவு 82-ன்கீழ் சட்டபூர்வமான ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



முற்பகல் 11-25

கூட்டுறவுச் சங்கங்களில் நடந்துள்ள முறைகேடுகளை நான் சொல்லிக்கொண்டே போகமுடியும். காலத்தின் நலன் கருதி ஒரு சில சங்கங்களில் நடந்த முறைகேடுகளை மட்டும் நான் இங்கே குறிப்பிட்டுள்ளேன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை விசாரணையின் முடிவில் முன்னாள் ஆட்சியாளர்கள் செய்த முறைகேடுகள் அனைத்தும் வெளி வரும்போதுதான் மக்கள் அவர்களை ஏன் தூக்கி எறிந்தார்கள் என்பது தெரியவரும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சில நல்ல திட்டங்களை எடுத்துரைத்தார்கள். தெளிவான சிந்தனையுடன், தீர்க்கமான முடிவெடுத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்கின்ற திட்டங்கள் எல்லாம் வெகு விரைவாகச் செயல்படுத்தப்பட்டு, அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

எடுத்துக்காட்டாக, கடந்த ஆண்டு சென்னை, கோயம்பேடு மொத்த காய்கறி வணிக வளாகத்தில் காய்கறி கழிவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றை ரூபாய் 5 கோடி செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் இதில் 75 சதவீதம் மைய அரசிடமிருந்து மானியமாகப் பெற்றும், மீதமுள்ள 25 சதவீதத்தினை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்று இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது என அறிவிக்கப்பட்டது. மத்திய அரசும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு மானியமாக ரூபாய் 3 கோடியே 75 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்து, மார்ச் மாதம் 2003 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் இத்திட்டத்திற்காக ரூபாய் 1 கோடியே 25 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்து, இத்திட்டத்தைச் சென்னை, தரமணியில் அமைந்துள்ள மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனமும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் இணைந்து செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 30 டன் காய்கறிக் கழிவைக்கொண்டு நாளொன்றுக்கு 5,000 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் இந்த நிதியாண்டில்

செயல்படுத்தப்படும். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் காய்கறிக் கழிவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவேன் என்று சூளுரைத்து, முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பணியாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதைப் பெருமையுடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கான ஆரம்ப வேலையை வெகுவிரைவிலே தொடங்கிவைப்பார்கள் என்பதனையும், அடுத்த ஆண்டு இத்திட்டம் முடிவு பெற்று, மின்சார உற்பத்தியையும் மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரத்தால் தொடங்கிவைப்பார்கள் என்பதையும் மெத்த மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த ஆண்டு இம்மாமன்றத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் எல்லைக்குள் முன்னனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகள் ஆகியவற்றை வரன்முறைப்படுத்தும் திட்டத்தை மேலும் சீரும், சிறப்புமாகச் செயல்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திட்டத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டார்கள். இதன்படி அனுமதியின்றி கட்டப்பட்ட மற்றும் விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்த இறுதி வாய்ப்பாக கட்டண விதிகளைத் தளர்த்தி, ஏற்கெனவே இருந்த தொகையில் 50 விழுக்காடுகள் குறைத்து நியாயமான முறையில் மாற்றம் செய்து அறிவித்தார்கள். இப்புதிய திட்டத்தின்படி 31-3-2002 வரை அனுமதியின்றிக் கட்டப்பட்ட மற்றும் விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு 30-6-2002 வரை மனுக்களைப் பெறுவதற்குக் கால அவகாசம் கொடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் 29,871 விண்ணப்பங்கள் பெறப்பட்டு விண்ணப்பதாரரிடமிருந்து ரூபாய் 32 கோடியே 64 இலட்சங்கள் வசூலிக்கப்பட்டன. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், அதன் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளும் இவ்விண்ணப்பங்களை ஆய்வு செய்து வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் மார்ச் 2003 வரை ரூபாய் 179 கோடி வசூல்



செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை பெருமகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய தானைத் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போடுகின்ற திட்டங்கள் அனைத்துமே மக்களுக்குப் பயனுள்ள வகையிலே மக்கள் மனதில் புகழ்பெற்று என்றென்றும் இருக்கின்ற வகையில்தான் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கின்றார்கள். எனவேதான் தமிழக மக்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை இந்த அவைக்கு மிக்க பெருமையுடன் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதியுடன் புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

*முற்பகல் 11-30*

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்:** தனியார் துறையிடமிருந்து பங்கேற்பை கோரிப் பெற்று அவர்களுடன் கூட்டாக "கூட்டுத் துறை நிறுவனம்" ஒன்றைப் பதிவு செய்து வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களில் வீட்டு வசதித் திட்டங்களைச் சமமுதலீடு அடிப்படையிலே நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க சென்னை ஆற்றங்கரையில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் 8,164 குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 3,000 குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய 2002-2003-ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 2,688 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய கூடுதலாக 5,164 குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பதினொன்றாவது நிதிக் குழுவின் மானியத்தின்கீழ் சென்னை நகரில் பல்வேறு பகுதிகளில் 954 அடுக்குமாடிக் குடியிருப்புகள ரூபாய் 12 கோடியே 31 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

மதுரை மற்றும் கோவை நகரங்களில் 1,832 தனி வீடுகள் ரூபாய் 13 கோடியே 75 இலட்சம் செலவில் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் 2003-2004-ல் தொடங்கப்படும்.

வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் தமிழகத்தினுடைய நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு 6,250 தனி வீடுகள் அமைத்து முடிக்கப்படும். மேலும் 5,000 வீடுகள் அமைப்பதற்கான பணிகள் 2003-2004-ல் தொடங்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 41 கோடி செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகரிலே குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்தினைத் தடுக்க குடிசைப் பகுதிகளில் வாழும் 2,729 குடும்பங்களுக்கு ரூபாய் 1 கோடி செலவில் கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் சுற்றுச் சுவர்களுடன் அமைக்கப்படும்.

சென்னை, மதுரை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள், மாடி முகப்புகள் மற்றும் மாடிப் படிகளைச் சீர் செய்தல், மழை நீர்க் கசிவினைத் தடுக்க ஓடுகள் பதித்தல், தளங்களைச் சீர் செய்தல் போன்ற பழுதுபார்ப்புப் பணிகள் ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

சென்னை நகரில் விஜயராகவா சாலையின் பகுதியிலே 32 மத்திய தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

மழைநீர் சேகரிக்கும் முறைகள், வாரியத்தால் அமைக்கப்படும் திட்டப் பகுதிகளில் நிறுவ ரூபாய் 50 இலட்சம் செலவிடப்படும்.

சென்ற ஆண்டு பெய்த மழையின்போது குறிப்பாக, அதிகமாக பாதிக்கப்பட்ட வட சென்னைப் பகுதியிலே தாழ்வாக அமைந்துள்ள அடுக்குமாடி திட்டப் பகுதிகளில் தரை தள குடியிருப்புகளின் தரைமட்டத்தினை உயர்த்தவும், அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் குடியிருப்புத் தொகுதிகளின் பின்புறத்தில் நடைபாதை மற்றும் 'யு' வடிவ கால்வாய் ஒன்றினை பகுதி-2 திட்டத்தின்கீழ் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் ஒரு கோடியே எட்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரம் ரூபாய் செலவிடப்படும்.



குடிசைப் பகுதி வாழ் பெண்கள் தொழில் முனைவோர் திறனை அதிகரிக்க 2003-2004 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் 6,200 பெண்களுக்கு ரூபாய் 25 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம்:** கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களுடைய அலுவலகத்தின் பணிகளை நீண்ட காலஅளவில் ஒழுங்குபடுத்தவும், கணினிமயமாக்கவும் 2003-2004 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் இரண்டு கணினிகள் வாங்கப்படும்.

இந்நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் துணைப் பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய மூன்று மண்டல அலுவலகங்களுக்கு புதிதாகத் தொலைபேசி இணைப்புகள் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் செய்து தரப்படும்.

பாரம்பரியமிக்க இடங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக கீழ்க்கண்டுள்ள 5 பாரம்பரியமிக்க நகரங்களுக்கு ஒரு நகருக்கு ரூபாய் 50 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 2 கோடியே 5 இலட்சம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது: திருத்தணி, திருச்செங்கோடு, திருச்செந்தூர், ஸ்ரீபெரும்புதூர், சித்தன்னவாசல்.

மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிப் பகுதியில் இந்திய சுற்றுலாத் துறையின் திட்டங்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்த நகர் ஊரமைப்புத் துறை வளர்ச்சி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடியே 56 இலட்சம் மானியமாகவும், கடனாகவும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்கள், அர்ச்சுனா தபசு அமைந்துள்ள இடத்தின் எதிர்புறச் சாலைகளை அகலப்படுத்துதல், புல்வெளியுடன் அழகுபடுத்துதல் வாகன நிறுத்துமிடங்களை அமைத்தல் மற்றும் வணிக வளாகங்கள் அமைப்பது போன்றவைகளாகும்.

நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் நகர்ப்புற வளர்ச்சிக்கான செயல் திட்டத்தின்படி மிகவும் பின்தங்கிய 45 வட்டங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. கீழே குறிப்பிட்டுள்ள மிகவும் பின்தங்கிய 3 வட்டங்களில் உள்ள 3 நகரங்களுக்கு உள்ளூர் திட்டப் பகுதி, புதுநகர் அபிவிருத்தி திட்டப் பகுதிகள் அறிவிக்கப்படும்:

அரூர் புது நகர் வளர்ச்சித் திட்டப் பகுதி, அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

பெரம்பலூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதி, பெரம்பலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.

அரியலூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதி, அரியலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.

திருவள்ளூர், குடியாத்தம், கரூர், திருச்சிராப்பள்ளி, திருப்புவனம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு நகரங்களுக்கான முழுமைத் திட்டங்களை மறு ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-35

குறிச்சி புதுநகர் வளர்ச்சித் திட்டத்தை மறு ஆய்வு செய்யவும், சேலம் இரும்பாலை நகர் மற்றும் பெருந்துறை ஆகிய புதுநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசின் இணக்கம் பெறவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புத் துறையின் பயன்பாட்டிற்காக இந்த நிதியாண்டில் மேம்பட்ட வசதிகள் கொண்ட கணினிகள் மற்றும் அது சார்ந்த இயந்திரச் சாதனங்கள் செங்கற்பட்டு, வேலூர், சேலம், திருச்சி, சிவகங்கை, மதுரை, கோவை மற்றும் திருநெல்வேலி ஆகிய 8 மண்டல அலுவலகங்களுக்கும் மற்றும் தலைமை அலுவலகத்திற்கும் ரூபாய் 13 இலட்சங்கள் செலவில் இந்த நிதியாண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் வழங்கப்படும். மேற்கண்ட 8 மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் உள்ள பழைய ஒளிநகல் கருவிகளை ஒப்படைத்து, 9 புதிய ஒளிநகல் கருவிகள் வாங்க ரூபாய் 7 இலட்சத்து 20 ஆயிரம் இந்த நிதியாண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் வழங்கப்படும். இத்துறையின் பணி சார்ந்த வரைபடங்கள் தயாரிக்க ரூபாய் 4 இலட்சம் செலவில் புதிய வரைபட உபகரணங்கள் தலைமை அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்கு இந்த நிதியாண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் வழங்கப்படும். நகர்-ஊரமைப்புத் துறையில் நூலகத்தை மேம்படுத்தவும், புனரமைக்கவும், புதிய புத்தகங்கள் வாங்கவும், இந்த நிதியாண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:** சென்னை பெருநகரப் பகுதிக்கான உள்கட்டமைப்பு வசதிகள், அதாவது வீட்டு வசதி, சாலை வசதி, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதிகள் ஆகியவை அளிக்கும் வகையில் ஓராண்டு, மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு முதலீட்டுத் திட்டங்களின் அடிப்படையில், ஓராண்டு முதலீட்டுத் திட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 1,780 கோடியே 75 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

வழக்கமான போக்குவரத்து நெரிசல்களின் குறைபாடுகளைச் சமாளிக்கும் நோக்கில், நகர்ப்புறத்திற்கு உகந்த பலனளிக்கும் வகையில், பல அடுக்கு தானியங்கி சீருந்து நிறுத்தும் வளாகங்கள் சென்னை மாநகரில் 7 இடங்களில் அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகின்றது. இடங்கள்: பனகல் பூங்கா, பூக்கடை, எழும்பூர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமக் கட்டடம், லஸ் முனை, புரசைவாக்கம், சென்ட்ரல் நிலையம் மற்றும் கோடம்பாக்கம் ஆகிய பகுதிகளில் அமைப்பதற்கான திட்டம் உருவாக்கப்படுகிறது. அதில் பனகல் பூங்காவினையொட்டிய பகுதியில் ஒரே நேரத்தில் 450 சீருந்து மற்றும் 750 இரு சக்கர வாகனங்களை நிறுத்த வழிவகுக்கும் திட்டம் நடப்பு நிதியாண்டில் ரூபாய் 47 கோடி செலவில் தனியார் உதவியோடு அமைத்து, இயக்கி, மாற்றுதல் முறையில் செயல்படுத்த ஆய்வு செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கோயம்பேடு மொத்த அங்காடி வளாகத்தில் மொத்தத் துணி வியாபாரிகளுக்கான கடைகள் 22 ஏக்கர் பரப்பில் ரூபாய் 130 கோடி திட்ட மதிப்பீட்டிலும், உணவு தானியங்கள் வியாபாரிகளுக்கான கடைகள் 35 ஏக்கர் பரப்பில் ரூபாய் 180 கோடி திட்ட மதிப்பீட்டிலும் கட்டும் பொருட்டு, கடைகளுக்கான விரிவான வரைபடங்கள், மதிப்பீடுகள் ஆகியவை வியாபாரிகளோடு கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்டு வருகின்றன. திட்டப் பணிகளை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதியுதவி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை நிதி வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும். எழில்மிகு மெரினா கடற்கரையில் அறிஞர் அண்ணா நினைவிடத்திலிருந்து கலங்கரை விளக்கம் வரையிலான பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த மெரினா கடற்கரை மேம்பாட்டுக் குழு ஒன்றினை அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

சூரிய சக்தியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டி மருத்துவ மனைகள், உணவுக் கூடங்கள், தங்கும் விடுதிகள், விருந்தினர் மாளிகை, மாணவர் இல்லங்கள் மற்றும் திருமண மண்டபம் போன்றவற்றிற்கு புதிதாக கட்டப்படும் கட்டடங்களில், சூரிய சக்தியால் நீர் சூடாக்கும் முறைகளுக்கான உபகரணங்களை கட்டாயம் பொருத்தி எரிசக்தி சேமிப்பிற்கு வழி வகுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்ய, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் வெளிவட்டச் சாலையை அமைக்க தமிழ்நாடு சாலை அபிவிருத்திக் கழகத்தின் சாத்தியக்கூறு அறிக்கையை 6 மாதங்களுக்குள் அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் செலவில் கோயம்பேடு மொத்த வணிக அங்காடி வளாகத்தினுள் 4.50 ஏக்கர் நிலப்பரப்பில் சொகுசு பேருந்துகள் முனையமானது மே மாதம் 2003-ல் திறக்கப்படும். மேலும் கனரக வாகனங்களுக்கான முனையம், கழுவும் பகுதி, பழுது பார்க்கும் கடைகள், உதிரி பாகங்கள் விற்பனைக் கடைகள் முதலான வசதிகளும் இப்பேருந்து முனையத்தின் அருகிலேயே அமைக்கப்படவுள்ளன.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை பெருநகரப் பகுதியில் வாகனங்கள் நிறுத்துமிடங்களின் தேவைகள் குறித்து ரூபாய் 13 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கமானது புறநகர் இரயில் நிலையங்கள், பேருந்து மற்றும் இரயில் முடிவிடங்கள், சாலைகள் மற்றும் முக்கிய இடங்களில் தற்போதுள்ள வாகனங்கள் நிறுத்துமிடங்களின் வசதி மற்றும் தேவை குறித்தும், அதற்கேற்ப புதிய செயல்முறைத் திட்டத்தை தீட்டுவதும் ஆகியவனவாகும். இத்திட்டச் செலவில் 40 விழுக்காட்டினை மத்திய அரசு மானியமாக வழங்கும். மீதமுள்ள 60 விழுக்காடு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து பெறப்படும். இந்த ஆய்வு ஒரு வருடத்திற்குள் முடிவடையும்.

(முற்பகல் 11-40)

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை—தலைமைச் செயலகம்:** இந்த நிதியாண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ், தலைமைச் செயலகத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் பணிகளை ஒழுங்குபடுத்தவும், கணினிமயமாக்கவும் மூன்று கணினிகள் மற்றும் அது சார்ந்த இயந்திரச் சாதனங்கள் ரூபாய் 2 இலட்சத்து ஓராயிரம் அளவில் வாங்கப்படும்.



தொலைநோக்குப் பார்வையுடன் மக்கள் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் திட்டங்களைத் தீட்டி செயலாற்றத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தெரியும். ஆனால் மற்றவர்களுக்குத் தெரிந்தது எல்லாம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வருகின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும், அதை எதிர்த்து, அந்தத் திட்டத்தை முறியடிக்க முடியாதா, மாண்புமிகு அம்மா அவர்களுடைய செல்வாக்கைக் குறைக்க முடியாதா என்றுதான் செயல்படுகின்றார்கள்; வேறு எதுவும் செய்வதில்லை.

மக்கள் சக்தி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடமிருக்கும்போது, நீங்கள் செய்கின்ற சலசலப்புக்கெல்லாம் மக்கள் செவிசாய்க்கவில்லை என்பதுதான் உண்மை. எனவே இனியாகிலும் மக்களுக்காக, எதிர்காலச் சந்ததியினருக்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வருகின்ற பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முட்டுக்கட்டை போடாமல் இருப்பது உங்களுக்கு நல்லது. இல்லையெனில், எதிர்காலச் சந்ததியினரின் பழிச்சொல்லுக்கு ஆளாவீர்கள் எனக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் போடுகின்ற பல நல்ல திட்டங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக இருந்து வருகின்றன. உங்களுடைய ஆணையை நிறைவேற்ற ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் உங்களுடன் இருக்கின்றார்கள். மற்ற தலைவர்கள் எல்லாம் தொண்டர்களை முன்னிறுத்தி, அவர்களை கேடயமாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் நீங்களோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்குக் காவல் தெய்வமாக இருந்து அவர்களைக் காத்து வருகின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஒருபோதும் அவனின்றி ஓர் அணுவும் அசையாதே" என்பதைப்போல, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நாளைய இந்திய நாடே உங்களை எதிர்நோக்கி உள்ளது.

எண்ணத்திலே திண்மை, சொல்லிலே உண்மை, செயலிலே நன்மை ஆகியவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுகின்றவர் எங்கள்

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இன்றைய மன ஓட்டம் தமிழகத்தினுடைய நாளைய செயல் திட்டம்.

தனக்கென வாழாமல் தமிழ்த் தரணிக்கென வாழும் தன்னிகரற்ற தலைவியினுடைய செயல்பாடுகள் கால தேவனினுடைய கட்டளைகள். அதனை எதிர்க்க முனைபவர்கள் அனுதினமும் அறிக்கை விடலாம்; சூழ்ச்சிகள் பல செய்திடலாம்; சூதுமொழி பேசிடலாம்; வஞ்சக வலை பின்னிடலாம்; அதிகாரத்தைத் துஷ்பிரயோகம்கூட செய்திடலாம்.

சூதுகளால் தர்மம் தோற்றது கிடையாது. அதுபோல் எத்தனை சக்திகள் எதிர்த்திட்டபோதிலும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெற்றி மேல் வெற்றி பெறுவது உறுதி, உறுதி, உறுதி என அறுதியிட்டுச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, உங்கள்கீழ் பணியாற்ற நான் என்ன தவம் செய்தேன் அம்மா! என் வாழ்நாள் முழுவதும், என் உயிர்மூச்சு உள்ளவரையும் உங்களின் விசுவாசம் மிக்க தொண்டனாக இருப்பேன் எனக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலே மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சென்னைக்குத்தான், தலைமை அலுவலகமான நகர் மற்றும் ஊரமைப்புப் பிரிவை அணுகித்தான், அனுமதி பெற வேண்டியுள்ளது என்று சொன்னார்கள். அது அல்ல; மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு, மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் பெறுவதை எளிமைப்படுத்தும் விதத்திலே, அதாவது நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலே 5 ஏக்கர் வரை உள்ள மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான அதிகாரத்தை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரகத்தினுடைய மண்டலத் துணை இயக்குநருக்கு வழங்கி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய அரசாணை எண் 134, நாள் 20-9-2002-ன்மூலம் வெளியிட்டு அதை எளிமைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சோ. இராசேந்திரன் அவர்கள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திலே பணம் கட்டிய பின்பும் அதனுடைய Sale deed எல்லாம் வரவில்லை என்று சொன்னார்கள்; பத்திரங்கள் எல்லாம் வரவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் ஆணையிட்டு, இதுவரை 29,461 பத்திரங்களைத் திருப்பிக் கொடுத்திருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துகளைக் கூறியிருக்கின்றார்கள். அவர்களுடைய கருத்துகளை எல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு கவனித்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

இந்த பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்திகரமாக இருக்கும் எனக் கருதுகிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் என்னுடைய விவாதத்தை வைத்தபோது, நம்முடைய பத்திரிகையாளர்களுடைய, திருவான்மியூரில் இருக்கக்கூடிய அந்த வீட்டுமனை ஒதுக்கீட்டிலே காலதாமதமாக மானியம் வழங்கப்பட்டதாலே ஏற்பட்டிருக்கக்கூடிய, வட்டித் தொகை 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், வாரப் பத்திரிகையாளர்களுக்கு இந்த accreditation கார்டு ஒன்றை அங்கீகாரம் அளித்து வழங்க வேண்டும் என்றும் கேட்டேன். அதற்குப் பதில் கிடைக்குமா என்று நான் எதிர்பார்த்து அமர்ந்து இருக்கிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கண்டிப்பாக பரிசீலனை செய்யும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளில் 7-வது அயிட்டத்திலே சொல்லியிருக்கக் கூடியதிலே, சென்னை, மதுரை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் உள்ள குடியிருப்புகளை பராமரிப்பு செய்ய ரூ.5½ கோடி ஒதுக்கி இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது; மகிழ்ச்சி; வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தில் கோயம்புத்தூரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

* **திரு. க. பாரமலை:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நம்முடைய புதிய அறிவிப்பில் 8-வது பக்கத்தில் நகர்களுக்கான முழுமையான திட்டங்களை மறு ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்ன பாராவிலே, திருப்புவனம் என்று குறிப்பிட்டு இருக்கிறது. அது சிவகங்கை மாவட்ட திருப்புவனமா, அல்லது கும்பகோணம் பக்கத்திலே உள்ள திருப்புவனமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சிவகங்கை பகுதியில் இருக்கின்ற திருப்புவனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தொகுதிதான். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (இ) கோரிக்கை எண் 25-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 25-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன் இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன் இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 25-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.110,75,63,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 27-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. தி. வேல் முருகன் இருக்கையில் இல்லை. திரு. தி. வேல முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை எண் 27-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,49,95,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும்



மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(அ) மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. தி. வேல் முருகன் இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ் இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா மானியக் கோரிக்கை எண் 28-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



முற்பகல் 11-50

**(ஈ) கோரிக்கை எண் 2 - ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

**(உ) கோரிக்கை எண் 1 - மாநிலச் சட்டமன்றம்**

**(ஊ) கோரிக்கை எண் 15 - நிதித் துறை**

**(எ) கோரிக்கை எண் 35 - திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை**

**(ஏ) கோரிக்கை எண் 48 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

**(ஈ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று எடுத்துக்கொள்ளவிருக்கும் 5 மானியக் கோரிக்கைகளையும் சேர்த்தே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துகளை அந்தந்த மானியக் கோரிக்கைகள்மீது தெரிவிக்கலாம்.

மானியக் கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய மானியக் கோரிக்கை எண் 2-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,73,20,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 491, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1792, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4835, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7098, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 580, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5397, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 756, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4429, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம எண் மானியக கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5049, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5892, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,73,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6662, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4229,71,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3512, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு ஊழியர்கள், ஆசிரியர் போன்றவர்கள் தனது ஓய்வூதியத்தைக் கூடுதலாகச் சேர்த்துத் தரவேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4229,71,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5257, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னையில் ஷேர் ஆட்டோக்களை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4229,71,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5312, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகைகளை பத்திரங்களாகத் தராமல் ஓய்வு பெறும்பொழுதே ரொக்கமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4229,71,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5037. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியச் சலுகைகள் உடனடியாக ரொக்கமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4229,71,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

பிற்பகல் 12-05

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இறுதியிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளைக் கேட்டு என்னுடைய பதிலுரையை அளிக்கின்றேன். அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்புகள் எல்லாம் அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழில் உள்ளதை @ அவைக் குறிப்பில் ஏற்றி அதை நான் படித்ததாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9 உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சருடைய பதிலுரைக்குப் பின்னால் மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு சரியாக பிற்பகல் 1½ மணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பேச்சினை 6 மணித் துளிகளுக்குள் அமைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை, திட்டம் மற்றும்

@ 225 முதல் 298 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



வளர்ச்சித் துறை, ஓய்வூதியங்கள் மற்றும் ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே உறுப்பினர்கள் பயன்படுத்தக்கூடிய, சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தக்கூடிய, அலுவலகம் இதுவரையிலே கட்டப்படவில்லை. அதற்குண்டான எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதை நான் கூறிக்கொள்கிறேன். அதுசம்பந்தமான அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து—காரணம் அது மிகவும் பின் தங்கிய தொகுதி. அங்கு உட்கார்ந்து பொதுமக்களைச் சந்திக்கக்கூட சரியான அலுவலகம் இல்லை. அதை முறைப்படி எடுத்து—கட்டிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக மத்திய, மாநில அரசாங்கம் பல்வேறு திட்டப் பணிகள், நலப் பணிகள் மூலமாக ஆதிதிராவிட மக்களுக்குப் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்கின்றது. சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்தத் திட்டங்கள் அனைத்தும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னும் ஆதிதிராவிட மக்கள் அனைத்து வசதிகளிலும் தன்னிறைவு அடையவில்லை. அதற்காக அரசு எந்த முயற்சி எடுத்தாலும், அமைச்சர்களோ அல்லது மாண்புமிகு முதல்வர் அவர்களோ முயற்சி எடுத்தாலும் அதிகாரிகள் முழு மனதுடன் ஒத்துழைத்தால்தான் இதுபோன்ற திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியும். அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக நான் உங்களுக்கு ஒரு கருத்தை வைக்க விரும்புகிறேன். சட்டமன்றத்திலே Public Accounts Committee, Estimates Committee, Public Undertakings Committee இருப்பதுபோல S.C/S.T. Welfare Committee-யும், அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் Committee அமைத்தால் நிச்சயமாக சமூக நீதி பாதுகாக்கப்படுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நான் இந்த அரிய சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதிலே, Indian Constitution, Article 15-லே (4), 16, 17, 332, 335, 340, 341, 342 பிரிவுகளின்படி இந்த Committee-ஐ அமைக்கலாம். இதுபோன்ற Committee-கள், ஒரிசா, இராஜஸ்தான், மேற்கு வங்காளம் போன்ற மாநிலச் சட்டமன்றங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தச் சட்டமன்ற Committee-யையும் அமைக்க வேண்டுமென்று நான் இங்கே கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய காட்டுமன்னார்குடி சட்டமன்றத் தொகுதியிலே வீராணம் ஏரி இருக்கின்றது. இந்த வீராணம் ஏரி மூலமாக அரசு சென்னை மாநகருக்கு குடிதண்ணீர் கொண்டு வருவதற்காகப் புதிய வீராணம் திட்டத்தை அறிமுகப்படுத்தி அந்தப் பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காட்டுமன்னார்குடி பகுதியிலே இருக்கின்ற வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வரவேண்டும் என்றால் மேட்டூரிலிருந்து தண்ணீர் வர வேண்டும். மேட்டூர் நிரம்ப வேண்டும் என்றால், காவிரி நீர் வந்தாலதான மேட்டூரிலே நிரம்பும். மார்ச் மாத வாக்கிலே பருவ காலம் மாறுவதன் காரணமாக மேட்டூர் அணைக்கு காவிரியிலிருந்து தண்ணீர் வருவது நின்று போய் விட்டது. ஆகவே வீராணம் நிரம்ப வேண்டும் என்றால், மேட்டூர் அணை நிரம்பினால்தான் வரமுடியும். கடந்த 50 ஆண்டுகளாக..........

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இந்தப் பிரச்சினைக்கு நான் இந்தப் பேரவையில் விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறேன். அப்போது எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் வள்ளல் பெருமான் அவர்கள் இந்த அவைக்கு வரவில்லை. ஆகவே இன்றையதினம் நான் நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கருதினாலும் அவருக்காக இந்த விளக்கத்தை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேட்டூரிலிருந்துதான் வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வர வேண்டும் என்ற அவசியம் இல்லை. வடகிழக்குப் பருவ மழை நன்றாகப் பெய்தாலே போதும்; நல்ல மழை பெய்தாலே வீராணம் ஏரி நிரம்பும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரி, வடகிழக்குப் பருவ மழை நன்றாகப் பெய்கின்ற காலத்தில் ஓரிரு முறை நிறையலாமே தவிர, நமக்குப் போதுமான தண்ணீர் நிச்சயமாக அதிலேயிருந்து மட்டும் கிடைக்காது. விவசாயிகளுக்கும் கிடைக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி நீண்ட விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நீண்ட விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதை விவாதப் பொருளாக்க வேண்டாம். இன்றைக்கு நேரம் இல்லை.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவாதப் பொருளாக்கவில்லை. விவாதப் பொருளாக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு பேசவில்லை. நிச்சயமாக மழை நீர் மட்டுமே நமக்குப் போதிய தண்ணீரைக் கொடுத்துவிடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் பேசினீர்கள். அதற்கு முதலமைச்சரும் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லி இருக்கிறார்கள். திரு. வள்ளல் பெருமான், வேறு ஏதாவது பேசுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 50 ஆண்டுகளில் மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான காலங்களிலே ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீராணம் ஏரியிலே இருந்ததே கிடையாது. ஒரு வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும், கோடைக்காலங்களில்தான், இதுபோன்ற மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான கோடைக்காலங்களில்தான், சென்னையில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக, உச்சக் கட்டத்திலே இருக்கின்றது. சென்னைக்குக் கொண்டு வருவதாக இருந்தாலும், பருவ காலங்களிலே பெய்கின்ற மழைநீரை விவசாயத்திற்காகவும், ஏரியில் உடைப்பு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வள்ளல் பெருமான், மானியக் கோரிக்கைகளுக்குத் தொடர்பே இல்லாதது. ஒரு மணித் துளியிலே பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இதிலே 9 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** இல்லை, இல்லை. எனக்குக் கொடுத்த நேரமே இன்னும் முடியவில்லை.

பருவ காலங்களில் பெய்கின்ற மழை நீரை விவசாயத்திற்காகவும், ஏரியில் உடைப்பு ஏற்படாமல் தடுக்கவும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் வருகின்ற மழை நீரை கட்டாயம் திறந்துவிட்டாக வேண்டும். எனவே 2 டி.எம்.சி. தண்ணீரை மழைக் காலங்களில் எடுத்துச் செல்வது என்பது ஒரு சதவிகிதம்கூட சாத்தியமில்லை என்று நான் கருதுகின்றேன். இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வீராணம் ஏரியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற சிதம்பரம், காட்டுமன்னார்குடி பகுதிகளில் இருக்கின்ற இலட்சக்கணக்கான மக்கள், அவர்கள்

விவசாயிகளாக இருந்தாலும் சரி அல்லது விவசாயம் செய்யாதவர்களாக இருந்தாலும் சரி, வீராணம் ஏரியை ஒரு செல்வமாகவும், உணவுக்கு ஒரு முக்கிய இலக்காகவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே இந்த அவையில் நீண்ட, விரிவான விளக்கங்களைப் பலமுறை நான் அளித்திருக்கிறேன். அப்போதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் இந்த அவைக்கு வரவில்லை. ஆகவே பழைய குறிப்புகளை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். அவர் தவறாமல் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே இந்த அவையில் தெளிவுபடுத்தியதுபோல, வீராணம் ஏரியிலிருந்து பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்தும் விவசாயிகள் எந்தவகையிலும் பாதிக்கப்பட மாட்டார்கள். வீராணம் ஏரியின் கொள்ளளவு அதிகரிக்கப்படும். ஆகவே விவசாயத்திற்கு, நீர்ப் பாசனத்திற்கு, தேவைகள் போக, உபரி நீர்தான், சென்னைக்குக் குடிநீராக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** பேச்சை முடித்துக்கொள்கிறேன். ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீராதாரத்தைப் பெருக்குவதற்குண்டான மதிப்பீட்டிலே 110 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டது. அந்த வேலைகள் எல்லாம் மிகவும் மெதுவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு பைப் புதைக்கும் வேலைகள் மிக மும்முரமாக நடைபெறுகின்றன. ஆனால் அந்தப் பகுதியிலே..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் முறையாக, வேகமாக நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே



மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு நான் சவால் விட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் வள்ளல் பெருமான் அவர்களுக்கும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் வள்ளல் பெருமான் அவர்களுக்கும் நான் சவால் விடுகிறேன். அடுத்த ஆண்டு வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் சென்னைக்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்தத் தண்ணீர் வந்தாலும் அது தாகம் தீர்க்காத தண்ணீராக இருக்கும். காரணம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எஸ்.ஆர்.பி. தண்ணீர் என்பது தாகத்தைத் தீர்க்கத்தான்.

**திரு.எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தாகம் தீர்க்காத தண்ணீர்தான் அது. நீங்கள் புலவர் என்று சொல்கிறீர்கள். தாகம் தீர்க்காத தண்ணீர் என்று ஒன்று இருப்பது உங்களுக்குத் தெரியாதா? ஏனென்று சொன்னால், அது விவசாயிகள் வடிக்கின்ற கண்ணீராகத்தான் இங்கே வந்து சேரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; இதுபோல ஒரு பெரிய திட்டத்தை இப்படி கொச்சைப்படுத்துவது சரியல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்தத் திட்டத்தினைக் கொச்சைப்படுத்திப் பேசுவதும், ஏதோ சாபம் இடுவதைப் போல் பேசுவதும் நன்றாக இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அரசு ஒரு நல்ல முயற்சி எடுக்கும்போது, பொது நலனைக் கருதி ஒரு நல்ல முயற்சி எடுக்கும்போது, அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஆகவே மீண்டும் சொல்கிறேன். விவசாயிகள் கண்ணீர் சிந்த வேண்டிய அவசியம் ஏற்படாது. அப்படி ஒரு நிலைமையை இந்த அரசு நிச்சயமாக ஏற்படுத்தாது. வீராணம் ஏரியிலிருந்து பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்தும் விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள். வீராணம் ஏரியின் கொள்ளளவு அதிகரிக்கப்படும். அந்த உபரி நீர் மட்டுமே சென்னைக்குக் குடிநீராக எடுத்துக்கொள்ளப்படும் என்று மீண்டும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்து விடுங்கள். திரு. எம்.ஏ. ஹக்கீம். (குறுக்கீடு), வள்ளல் பெருமான், ஒரு நிமிடத்திலே நிறைவு செய்யுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** எனக்கு ஒதுக்கித் தந்த அந்த நேரத்தை திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். தயவுசெய்து எனக்கு கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன செய்வது? விவகாரம் உங்களுக்கும் அவருக்கும்தான் நடக்கிறது. (சிரிப்பு)

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அங்கே திட்டப் பணிகள் மெதுவாக நடைபெறுகின்றன என்றுதான் கடந்த ஆண்டே 5 கோடி ரூபாய் ஒதுக்கினீர்கள். இந்த ஆண்டு 6 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதிலே ஒதுக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட திட்டம் அனைத்தும், கூடியவிரைவிலே இந்தத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு முன்பாக அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 110 கோடி ரூபாய் செலவிலே வீராணம் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும், வடவாறு channel-ஐ அகலப்படுத்த வேண்டும். அதிலே lining- அகவுறை அமைக்க வேண்டுமென்ற திட்டப் பணிகளும் தொடர்ந்து பொதுப் பணித் துறையின் மூலமாக simultaneous-ஆக, வெகு விரைவாக நடைபெறும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் நிறைவு செய்யுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கத்திற்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கும் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்,



எங்களுடைய கடலூர், வீராணம் ஏரி இருக்கின்ற மாவட்டத்தைச் சேர்ந்தவர். அதை அவர்களுடைய ஆலோசனையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக விவசாயிகள் பாதிக்கப்படாத அளவிற்கு எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார்கள் என்று நினைக்கின்றேன். அதேபோல அங்கு 58 வாய்க்கால்கள் பிரிந்து செல்கின்றன. அந்த 58 வாய்க்கால்களையும் சீரமைத்து தண்ணீர் திறந்துவிட்டால், தாமதம், தடங்கலின்றி கடைமடை வரை செல்வதற்கு உரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் இந்த அரிய சந்தர்ப்பத்திலே கேட்டு, இந்த வாய்ப்பினைத் தந்த சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம். ஹக்கீம், 6 மணித் துளிகளிலே பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அம்மாவின் பிள்ளை என்ற காரணத்தால் 6 நிமிடத்தில் அடக்கத்தோடு முடித்துக்கொள்கிறேன். தலைப்பு 5; ஒவ்வொன்றும் பெரிது பெரிதாக பார்வைக்குப்பட்ட காரணத்தினால் நிறைய நேரம் பேசலாம் என்ற எண்ணத்தோடு வந்தேன். ஆனால் பேரவைத் தலைவருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு, நீங்கள் சொன்னபடியே நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள்தான் நிறைய பேசுகிறோம் என்று நாட்டுக்குள்ளே ஒரு பேச்சு உண்டு. ஆனால் நேற்றைக்கு நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் பேசுவதைக் கேட்டதற்குப் பிறகு, பேசத் தெரிந்தவர்கள் எல்லோருமே அம்மாவிற்குப் பக்கத்திலே இருக்கிறார்கள் என்பதை நான் கொஞ்சம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டவனாக, இன்னொரு ஆச்சரியத்தையும், வெளிப்படுத்தவேண்டுமென்ற அவசியத்திற்கும் ஆளாகி நிற்கின்றேன். அமைச்சர்கள் என்றால் பேசமாட்டார்கள் என்று நாட்டுக்குள்ளே பொதுவாகப் பேசப்படுகிற பேச்சு. அதிலேயும், காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலேயெல்லாம் அமைச்சர்கள் என்றால் பேசத் தெரியாதவர்கள் என்று ஒரு முத்திரையே பதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இங்கே பார்த்தால், அம்மாவிற்குப் பக்கத்திலே வந்ததற்குப் பிறகு கல்லும் கவி பாடிக் கொண்டிருக்கிறது. புல்லும் போர்வாளாக மாறிக் கொண்டிருக்கிறது. எல்லா அமைச்சர்களுமே ஆளுக்கு ஒரு பக்கத்திலே அடிக்கிற அடியைப் பார்த்தால், அடுத்த 15 ஆண்டுகளுக்கு அம்மாவை அசைப்பதற்கு தமிழ்நாட்டிலே வழியே இல்லை

(மேசையைத் தட்டும் ஒலி) என்பதும் தெரிய வருகிறது. ரொமப அற்புதமான பதிலைக் கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். ஆனால் கொடுக்கின்ற பதிலுக்கு எல்லாம ஒரு வார்த்தை தவறிவிட்டால்கூட, அது எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறைக்குள்ளே உடனுக்குடனே அமைச்சர்களுக்கு உதவி செய்வதற்கு அந்த வார்த்தைகளை முதல் வரிசையிலே இருந்து அம்மா அவர்கள், பக்கத்திலே இருக்கிற பொதுப் பணித் துறை அமைச்சருக்குச் சொல்லி, நிதியமைச்சருக்கு உடனடியாகச் சொல்லி, அதைத் திருத்தி அவரைப் பேசச் சொல்லுங்கள் என்று சொல்லக்கூடிய அந்தப் பாங்கினைப் பார்க்கிறபோது, ஒரு மிகப் பெரிய அரசியல் கலைக் களஞ்சியமாக (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் அமர்ந்திருப்பதை என்னால் பார்க்க முடிகிறது.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் காலத்திலே அமெரிக்காவிலிருந்து சில செனட் உறுப்பினர்கள் டெல்லிக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது இந்திரா காந்தி பிரதமராக இருக்கிறார். நம்முடைய தாய் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். அன்னை இந்திரா காந்தி அவர்கள் நம்முடைய தாயை அவர்களிடத்தில் அறிமுகப்படுத்துகிறார். நானெல்லாம் அப்பொழுது அம்மாவுடைய அரசியலிலே, அந்த பாரதப் பிரதமர் அவர்களுடைய அரசியலிலே ஒரு பக்கத்திலே மிகத் தெளிவாக விஷயங்களை அறிந்து நாடு முழுக்க பேசி வந்தவன் என்ற காரணத்தினால் எனக்கு அது நன்றாக நினைவிருக்கிறது. அவர் அம்மாவை அடையாளம் காட்டிச் சொல்கிறார், இந்திரா காந்தி அவர்கள், "She is the youngest Member of our Parliament" என்று அம்மாவை அறிமுகப்படுத்தி இருக்கிறார். அந்த அமெரிக்க செனட் உறுப்பினர்கள்—அம்மா அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். நினைவிற்காக நினைவுபடுத்திச் சொல்கிறேன்-- Not only she is the youngest Member, We hope that she is the beautiful Member of your Parliament. என்று நம்முடைய அம்மா அவர்களை, இந்திரா காந்தி அவர்கள் அறிமுகப்படுத்தியபோது, அப்படிச் சொல்லியதையும், திரு. குஷ்வந்த் சிங் அவர்கள், அதைத் தொடர்ந்தே, டெல்லியிலே அம்மா அவர்கள் பேசுகின்ற பேச்சைக் கேட்டுவிட்டு, அன்றைக்கு அவர் சொன்ன ஒரு வாசகத்தையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். She speaks English excellently without a little bit of South Indian accent. தென்னிந்தியாவிலே பேசுகின்றவர்கள் பேசுகின்ற ஆங்கில வாடையே இல்லாமல் ஓர் அற்புதமான ஆங்கிலத்தை, அந்த ஆங்கிலேய நாட்டிலே பிறந்ததைப் போலவே,



பேசக்கூடிய ஆற்றல்மிக்க ஓர் அற்புதமான கலைஞர் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு கெட்டிக்காரத்தனமான தலைவராக இருக்கிற காரணத்தால்தான்...

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், திரு. குஷ்வந்த் சிங் அதை எழுதியிருக்கிறார். (குறுக்கீடு) பத்திரிகையிலேகூட எழுதியிருக்கிறார்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** எழுதியிருக்கிறார். பேரவைத் தலைவருக்கு நன்றி. கொஞ்சம் விரிவாகச் சொன்னால் விடமாட்டீர்கள். ஆறு நிமிடங்கள் என்று சொன்னதாலே, அதை விறுவிறுவென்று சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன்.

அதேமாதிரியாகத்தான், சட்டமன்றம் என்ற அந்தத் தலைப்பிலே மாத்திரம் சில விஷயங்களை நான் சொல்லி முடிக்க ஆசைப்படுகிறேன். கன்னடத்திலே பேசுகிறார் காங்கிரஸ் கட்சியினுடைய மேதகு உறுப்பினர் அவர்கள். எனக்குப் பின்னாலே அமர்ந்திருக்கின்ற மாட்சிமைக்குரிய B.J.P. உறுப்பினர் திரு. முரளிதரன் அவர்கள், தெலுங்கிலே பேசிக் கொண்டிருக்கிறார். தெலுங்கிலும் பதில்; கன்னடத்திலும் பதில். இனி பேசவேண்டியது எது பாக்கி? மாண்புமிகு உறுப்பினர் திருநிறைச்செல்வன் ஹேமா அவர்கள் அடிக்கொரு தடவை தமிழில் பேசுகிறபோது சிரமப்படுகிறார். அவரிடம் நானே சொன்னேன்; "நீங்கள் மலையாளத்தில் பேசுங்கள்; அம்மா அவர்கள் மலையாளத்திலேயே உங்களுக்கு பதில் சொல்வார்கள்; பிரச்சினையும் தீரும்" என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மாத்திரமல்ல. மலையாளத்திலே பேசுவதற்கு சங்கடமாக இருக்கிறது என்று சொன்னால், ஆங்கிலத்திலே பேசுங்கள். ஓர் அற்புதமான புலமைபெற்ற ஆங்கிலத்தில் அந்தப் பதிலை அம்மா அவர்கள் அடுக்கடுக்காகச் சொல்லவேண்டும்; இந்த மன்றம் கேட்கவேண்டும்; இந்த நாடும் கேட்கவேண்டும். ஓர் அற்புதமான தலைவரைத் தாங்கள் பெற்றிருக்கிறோம் என்ற பெருமையையும் பெறவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகவாவது, அந்தப் பெருமைக்குரிய விஷயங்களை இந்த நாடு கேட்பதற்குரிய வாய்ப்பினை உங்களோடு சேர்ந்து நாங்களும் பெறுகிறோம் என்பதை நினைத்துத்தான் இந்த இடத்திலே நான் சொல்கிறேன்.

இந்த மன்றத்தில் எல்லாவற்றிலுமே ஒத்துழைப்பு; எல்லாவற்றிலுமே நம்முடைய மாட்சிமைக்குரிய மாண்புமிகு அம்மா அவர்களை அனுசரித்துச் சென்று, அற்புதமாக எதிர்காலக் கடமைகளை நிறைவேற்றிவிட முடியும் என்றிருக்கக்கூடிய ஒரு நல்ல பதத்தை, பண்பை இன்றைக்கு எதிர்க் கட்சியிலே பெரும் பகுதி பேர் பெற்று, சிறபபான முறையிலே இந்த மன்றத்தை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தந்தீர்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம், நன்றி சொல்வதோடு, மனிதர்களுககு மாத்திரமல்ல; மனிதர்களுக்காக மாத்திரமல்ல; ஒரு மாட்டின்மீது கூட, மாடு என்று சொல்கிறபோது, சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. ஏனென்றால், கால்நடை வளர்ப்புத் துறை என்று வருகின்றபோதும், பால் வளத் துறை என்று வருகின்றபோதும், மாட்டைப் பற்றி புரட்சித் தலைவர் ஒரு படத்திலே பாடுவார். அந்தப் படத்திலே அம்மா அவர்கள்தான் நடித்திருந்தார்கள். நான் நினைவிற்காகச் சொல்கிறேன்.

"சத்தியம் நீயே, தர்மத் தாயே,
குழந்தை வடிவே, தெய்வ மகளே,
வளர்த்தவரே உன்னை மறந்துவிட்டாலும்,
மற்றவரிடத்தில் கொடுத்துவிட்டாலும்
வளர்ந்த இடத்தை நீ மறக்காத செல்வம்
வாய் மட்டும் இருந்தால் மொழி பேசும் தெய்வம்"

என்று மாட்டுக்கார வேலன் படத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் பசு மாட்டை வைத்துக்கொண்டு பாடுவார்.

பசு மாட்டின் மடியிலேயிருந்து, மின்சாரம் மூலமாக இயங்குகின்ற plug-ஐக் கொடுத்து, பாலை எடுக்கிறபோது அதை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு off செய்ய மறந்துவிட்டால், அந்தப் பசு இரத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும், அந்த வாய் பேசத் தெரியாத ஜீவனை, அப்படி வாட்டி வதைத்து விடக்கூடாது என்பதற்காகத்தான், 'அதில் எவ்வளவு இலாபம் நமக்குக் கிடைத்தாலும், அது தேவையில்லை. முறையாக கையினாலேயே கறக்கலாம். அப்படி அந்தப் பசுவை துன்புறுத்தக்கூடாது' என்று சொல்லி, அன்றைக்கு அம்மா அவர்கள் ஒரு விளக்கத்தை இங்கே தந்தபோது, பசுவையே பாதுகாத்து பத்திரப்படுத்த வேண்டும் என்று நினைக்கக்கூடிய தாய், இங்கேயிருக்கிற 6-1/4 கோடி மக்களை



அரவணைத்துப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வில் மாறிவிடுவாரா? (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் நான் மெத்தப் பணிவோடு இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் அம்மா அவர்கள் திரும்பத் திரும்ப விளக்கத்தைக் கொடுக்கிறபோது, சில பேர் வேண்டுமென்று. ஏற்றுக்கொண்டு பேசினால் பரவாயில்லை அல்லது மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லலாம். ஆனால் வேண்டுமென்றே விபரீதமாகவே விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது மனம் சங்கடப்படுகிறது. "'இலவச மின்சாரம் உண்டு, இலவச மின்சாரம் உண்டு; ஏழைகளுக்கு உண்டு; அதேமாதிரியாக சிறு விவசாயிகளுக்கும் உண்டு; குறு விவசாயிகளுக்கும் உண்டு"; திரும்பத் திரும்பச் சொல்கிறார்; விளக்கம் சொல்கிறார். ஆனால் 'இலவச மின்சாரத்தை இரத்து செய்துவிட்ட காரணத்தால்' என்று பழையபடி பேசுகிறார்கள். இது என்ன நியாயம் என்பதற்காகச் சொல்கிறேன்.

பிற்பகல் 12-25

அண்ணா அவர்கள்தான் சொன்னார்கள். 'பளபளக்கும் தார் ரோடு, பளிச்சென்று பறக்கும் பிளைமவுத் கார், உருக்குலையாத அங்கவஸ்திரம், உல்லாச சீமான், ஒய்யாரமாக உட்கார்ந்து இருப்பான், இழுத்துக் கொண்டு அலைவது மனிதர்கள் அல்ல, மாடுகள் அல்ல, உழைக்கின்ற அந்தப் பாட்டாளி, உழைக்கின்ற விவசாயியின் ரத்தம் என்பதை மறந்துவிடாதீர்கள்' என்று சொன்னமாதிரி, இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். யாருக்கு இலவச மின்சாரம்? சிறு விவசாயிகளுக்கு உண்டு, குறு விவசாயிகளுக்கு உண்டு. பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்டு. உண்டு, உண்டு என்று சொன்னதற்குப் பிறகு எல்லா விவசாயிகளுக்குமே என்று சொன்னால், கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் அந்தக் காலத்திலே பேசுவார்கள். நான் மறக்கவில்லை. அப்போது இதனைச் சொல்வார்கள். பூண்டி வாண்டையார்கள், கபிஸ்தலத்து மூப்பனார்கள், குன்னியூர் சாம்பசிவ அய்யர், பட்டுக்கோட்டை நாடிமுத்துப் பிள்ளை, நாகநாத உட்கடை இராமநாதத் தேவர் என்று சொல்லி இவர்களுக்கா இலவச மின்சாரம்? அவர்கள் கேட்டார்கள் அல்லவா? அவர்களுக்கா நீங்கள் இலவச மின்சாரம் கேட்கிறீர்கள்? அவர்கள் நாட்டுக்கே இலவச மின்சாரம் தரக்கூடியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்கு ஒரு நல்ல மேடையை அமைத்துக் கொடுங்கள், புதியதாகக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஹக்கீம் அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதாவது முதலமைச்சர் அவர்கள் சில ஆட்களுக்கு சலுகை உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எத்தனை நாட்களுக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறதா? இதே அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, எத்தனை நாட்களுக்கு என்ற கேள்வியை ஏற்கெனவே நீங்கள் கேட்டீர்கள். தொடர்ந்து வழங்கப்படும். நிறுத்தப்பட மாட்டாது என்று ஏற்கெனவே நானும் சொல்லியிருக்கிறேன். அதையேதான் இப்பவும் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய வேண்டுகோளுக்கு பதில் சொன்னார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே விளக்கம் சொல்லிவிட்டார்கள். திரு. ஹக்கீம் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மூன்று ரூபாய்க்கு அரிசி.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது சம்பந்தம் இல்லாதது. திரு. ஹக்கீம் பேசுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநிறைச்செல்வன் ஹேமா அவர்கள், நாங்கள் எல்லாம் இளைய உறுப்பினர்கள், உங்கள் அளவிற்கு பக்குவப்பட்டவர்கள் அல்லது ரொம்ப வயதானவர்கள் அல்ல. இந்த காலகட்டத்தில் கொஞ்ச நேரத்திற்குத் தடையில்லாமல் என்னைப் பேச அனுமதிக்கும்படி தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மூத்த தலைவர் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டார் அம்மா அவர்கள்கூட நிதானமாகச் சொல்லிவிட்டார்கள். அந்த நிதானம் என்பது அம்மா அவர்களுக்கு எப்போதுமே ரொம்ப கையடக்கமாக இருக்கக்கூடிய அற்புதமான சரக்கு. ஏனென்றால் எனக்கெல்லாம் சில



நேரங்களில் ஆத்திரம் வருகிறது, சிலவற்றைப் பார்க்கிறபோது, பேசுகிறபோது. பாருங்களேன், எங்களுடைய முன்னாள் கட்சியிலே ஒரு மூத்த உறுப்பினர் முன்னால் உட்கார்ந்து கொண்டு தண்ணீர் வரவே வராது, தண்ணீர் வரவே வராது, அந்தத் தண்ணீர் வந்தாலும், அது கண்ணீராகத்தான் வரும் என்கிறார். இது என்ன சாபக்கேடு? இது சாபக்கேடு மாதிரி தெரியவில்லையா? வரும் என்று அம்மா சொல்கிறபோது, வரட்டும், நன்றாகத் தரட்டும், மக்கள் வாழ்வு செழிக்கட்டும், வாய் நிறைய தண்ணீர் குடிக்கட்டும், அந்த வாழ்க்கையில் செழிப்பும் சிறப்பும் பிறக்கட்டும் என்று மனதாரச் சொல்லுங்களேன். காவிரி நீர் வருமா? வராது, வந்தாலும வரவிடாமல். நாங்களே பார்த்துக்கொள்வோம், (மேசையைத் தட்டும் ஒலி) அங்கேயே சென்று விடுவோம். கிருஷ்ணா தண்ணீரை ஆந்திர முதலமைச்சா தருவதாகச் சொன்னாலும் இவர்கள் போய் வேண்டாம் வேண்டாம். கொடுத்து அதைக் கெடுத்துவிடாதீர்கள், இருப்பவர்கள் எல்லாம் குடித்துவிடுவார்கள். அதை நீங்களே வேறு பக்கத்தில் திருப்பி சாக்கடையோடு கலக்கச் சொல்லிவிடுங்கள். கவலையில்லை. இது என்ன குணம்? இது என்ன மனம்? அல்லது இது என்ன அரசியல் அணுகுமுறை? இப்படி திரும்பத் திரும்பச் சொன்னால் எப்படி மக்கள் வாக்களிப்பார்கள்? எப்படி வருவீர்கள்? ஏற்கெனவே அம்மா அவர்களுடைய ஆசீர்வாதத்தோடு வாழ்த்துக்களோடு உள்ளே வந்தாகிவிட்டது. இன்னொரு ரவுண்டு வெளியே போனால் என்ன ஆகும் தெரியுமா? அதற்காகத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். இங்கே பேசிக் கொண்டிருக்கிறவர்கள், ஒரு சாபக்கேடாக அது வரக்கூடாது என்கிற மாதிரி ஏதோ ஒரு கெட்ட பேச்சாக அமங்கலமாக சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அப்பாக்கள் சரியில்லை, அம்மாதான் சரி. ஒரு அப்பா தப்பு பண்ணியதால் மொத்தத்தில் அப்பா குலமே அவதிப்படுகிறது பார்த்தீர்களா. அந்த ஒரு அப்பா ஒழுங்காக இருந்தால் நாலும் அப்பன்தானே, எனக்குக் கெட்ட பெயர் வருமா? நமக்குப் பிள்ளை இல்லையா? அது என்னவோ தெரியவில்லை; தப்பான அப்பா, அப்பா தப்பாகவே பண்ணி, அப்பாவும் தப்பு, தப்பான அப்பா, பிள்ளைகளும் தப்பு, இப்படியா வந்து சேருவது, மஞ்சள் மகிமை என்று சினிமாவிற்குப் பெயர் இருந்தது. அதேமாதிரியாகத்தான் பாசமலர் படத்தில் சாவித்திரி அம்மா சிவாஜி காலில் விழுந்து எழுந்திருப்பார்கள்.

உடனே, "தாயே, நீ மஞ்சள் குங்குமத்தோடு நீடூழி வாழவேண்டும்" என்று சொல்வார். இந்த மஞ்சளுக்கு அவ்வளவு சிறப்பு உண்டு. ஒரு தப்பான மனிதன் மஞ்சள் ஆடையை மேலே போர்த்தி இருப்பதால், மஞ்சளே மொத்தத்தில் கெட்டுப்போன மாதிரி, தமிழகத்திற்குள் நிலைமை வந்துவிட்டது பார்த்தீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மஞ்சளின் பெருமையைக் கருதி, அந்த மனிதர் அந்த மஞ்சள் ஆடையைக் கழற்றிக் கொள்ள வேண்டுமாய், அவருடைய கூட்டாளிகள் அவருக்குச் சொல்ல வேண்டும் என்று மெத்தப் பணிவோடு இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-30*

பச்சை, அம்மாவிற்குப் பிடிக்கும். பச்சை, அம்மாவிற்குப் பிடிக்கும் என்பது, செழிப்பு, சிறப்பு, நிறைவு, மகிழ்ச்சி, சந்தோஷம். மக்கள் எல்லோரும் நல்ல எண்ணத்தோடு, நல்ல உணர்வோடு, நல்ல நிறைவோடு வாழ்வதற்கு, பச்சை. ஆகவே அந்தப் பச்சை, ஒரு நல்ல அடையாளம் என்பதற்காகச் சொல்கிறபோது, அப்பாக்களுக்கு உண்டான சிக்கலான பிரச்சினையைப்பற்றி, நேற்று அவர் சொல்கிறபோது, எனக்கு மனதிற்குள் அது பட்டது. அதிலும் உதாரணத்திற்கு அருமையாகச் சொன்னார். "எந்தப் பிள்ளையும் நல்லப் பிள்ளைதான் மண்ணில் பிறக்கையில்; அவர் நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பதில்." நாமெல்லாம் நல்ல பிள்ளைகளாக இருப்பதற்குக் காரணமே, அன்னையின் அரவணைப்பில், பாசத்தில், பக்கத்தில் இருப்பதால். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக அப்பாவினுடைய பிள்ளைகளெல்லாம் தப்பாகப் போய்விட்டது என்று நினைக்காதீர்கள். சில பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக இருக்கின்றனர். அந்தப் பிள்ளைகள்தான் நம்முடைய அன்னையின் தலைமைக்கு ஆதரவாக, கூட்டுறவாக, துணையாக இங்கே இருந்து, நல்ல வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான, பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான விஷயம். 356, 356, 356 என்று வெளியே பேசிக் கொண்டேயிருந்தார் ஒரு தலைவர். போன வாரம் சொல்லிவிட்டார்; 356-ஐ நான் விட்டுவிட்டேன். யார் கொடுத்தார்கள்? அதை எப்போது இவர் விட்டார் என்பதுபற்றி விவாதமே இப்போது



தேவையில்லை. இந்த 356-க்குச் சம்பந்தப்பட்டவர்கள் யார்? 356-க்குச் சம்பந்தப்பட்டவர்கள் யார்? இங்கே எனக்கு அருகிலே இருக்கக்கூடிய ராஜா, அவர்தான் இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார், 356-க்கு நாங்கள்தான் பொறுப்பு என்று. அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? ஐந்தாண்டுகளுக்கு அல்ல; அடுத்த ஐந்தாண்டு அல்ல; எத்தனை ஐந்தாண்டானாலும், மக்கள் விரும்ப, விரும்ப, அம்மா அவர்கள் திரும்பத் திரும்ப வருவதைத்தான் நாங்களும் விரும்புகிறோம்; ஆசைப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதற்கு கிஞ்சித்தும் இடமில்லை. சரி, மக்கள் விருப்பம் அதுவானால், இதைத் தூக்கி வைத்துக்கொண்டு, "நாங்கள், பார்" என்று சொல்லி, பயமுறுத்துகின்ற வேலையா, எத்தனை நாட்களுக்கு? எப்படி முடியும்? நான் தெரியாமல் கேட்கிறேன்; 356 என்று சொல்லி, கட்சிக்காரனைக் குஷிப்படுத்தி, கொஞ்ச நாளைக்கு ஓடவிடாமல் நிறுத்துவதற்குப் பயன்படுத்தலாமே தவிர, யாரைப் போய் பயமுறுத்துவதற்கு 356 என்கிறீர்கள்? 1980 ஆம் ஆண்டு புரட்சித் தலைவருடைய அரசாங்கத்தைத் தமிழகத்திலே கலைத்துவிட்டு, இந்த 356-ஐ பயன்படுத்து, பயன்படுத்து என்று, அதைக் கலைக்க வைப்பதற்கு எவ்வளவு பெரிய பிராயச்சித்தம் எடுத்துக் கொண்டு இவர்கள் போராடினார்கள்? இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்; "வேண்டாம், வேண்டாம். எம்.ஜி.ஆர். அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் மக்களைச் சந்திக்கச் சென்றால், சிக்கல் ஏற்படும்; பிரச்சினை ஏற்படும். அந்தக் கஷ்டத்தை நான் அனுபவிக்க விரும்பவில்லை, வேண்டாம், வேண்டாம்" என்று சொல்ல, "இல்லை, இல்லை, இதுதான் சந்தர்ப்பம், வந்துவிடுவோம். இதுதான் நல்ல வாய்ப்பு, மிரண்டுபோய் இருக்கிறார், இப்படியே ஓடி வந்துவிடலாம்" என்று சொல்லிவிட்டு, கலைக்கச் சொல்லி, மக்களைச் சந்திக்க வருகிறபோது, ஒரே வார்த்தை. "என் அரசாங்கத்தைக் கலைத்ததற்கு நான் நீதி கேட்கிறேன்; தர்மம் கேட்கிறேன்; சத்தியத்திற்குப் பதில்; நானா, அவரா சொல்லுங்கள்" என்று கேட்டார். நாடே கொதித்து எழுந்து தீர்ப்பு அளித்தது. புரட்சித் தலைவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர்தான். அன்றைக்கு அடித்து, ஒடித்து, இடுப்பை ஒடித்து, முறித்து, தூக்கி எறிந்து போட்டதுதான், 10 வருஷத்திற்கு சத்தமே கிடையாது; சத்தமே கிடையாது. என்றைக்கு 1976-ல் இந்த 356-ஐ திராவிட முன்னேற்றக் கழகத்தில் திரு. கருணாநிதி அரசாங்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதோ, அதை மக்கள் சரி என்று ஏற்றுக் கொண்டதன் விளைவுதான், 13 ஆண்டுகள் புரட்சித் தலைவரின் தலைமை,

தமிழகத்திலே எந்தவிதமான மாசுபாடும் இல்லாமல் அற்புதமாக நடந்தது என்பதை நாட்டு மக்கள் மறந்துவிட முடியாது. ஒரேயொரு தடவை, அவருக்கு எதிராகத் திருப்பிப் போட்டார்கள் சட்டத்தை. யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அதே 1989-ல், இவர் ஆட்சிக்கு வருகிறார். 1991-ல் என்ன நடந்தது? 356-ஐத் தூக்கிப் போட்டார்கள். 356-ஐ போட்ட மாத்திரத்தில் மக்கள் என்ன பதில் சொன்னார்கள்? 356-ஐ பயன்படுத்தியது சரி; ஆகவே புரட்சித் தலைவிதான் தமிழகத்திற்குத் தேவை என்று சொல்லி, மீண்டும் மக்கள் வாக்களித்து அவரை உட்கார வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவையெல்லாம் ஒரு பெரிய அரசியல் சவால். அம்மாவை அடித்தீர்கள், இதே சட்டசபையிலே. வெளியேறினார். வெளியேறுகிறபோது, சும்மா போகவில்லை. மீண்டும் இந்தச் சபைக்கு வருவேன்; உறுப்பினராக அல்ல. இதே இடத்தில், உன்னை அப்புறப்படுத்திவிட்டு, தமிழகத்தின் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராக வருகிறேனா, இல்லையா, பார் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லிவிட்டுப்போன அரசியல் வரலாறுதான், இந்தச் சட்டமன்றத்திற்குப் பெருமைமிக்க வரலாறு. யாரும் மறந்துவிட முடியுமா? இந்த அவையிலேயிருந்து கொண்டுதான் சொன்னார். நான் மீண்டும் சொல்கிறேன். உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது? புரட்சித் தலைவர் கேட்பார். உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது என்று. கத்தி, ஈட்டி, கடப்பாரை, பாஸ்பரசாக இருக்குமோ, அதுதான் இல்லையே, அது ஆயுதம் இல்லையே, இதையெல்லாம் சொல்வார். கடைசியாகப் பாடிக் கொண்டு வரும்போது சொல்வார். 'நிலைகெட்டுப் போன நயவஞ்சகர்களின் நாக்குதான் அது' என்று. அந்த நிலைகெட்டு போன நயவஞ்சகர்கள் நாட்டிற்கு வெளியே இருந்து ஆயிரம் கதைகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சந்துமுனை சிந்துபாடிகளாக, சாலை ஓரத்திலே வேலையற்றவர்களாக, அந்த வேலையற்றவர்களின் உள்ளங்களிலே விபரீத எண்ணங்களை வளர்த்தவர்களாக, வீதிகளிலே இன்றைக்கு நெருப்பையும், விஷத்தையும் கக்கிக்கொண்டு அலைகிறார்கள். இந்த ஆட்சிக்கு எதிராக, அம்மாவிற்கு எதிராக, இங்கே நடைபெறுகின்ற இந்த தர்மத்திற்கு எதிராக. ஆனால் விஷமும் நெருப்பும் எவ்வளவு கக்கினாலும், எங்கள் தாயின் பார்வைபட்டால் பஸ்பமாகப் போய்விடும் என்பதை இந்த நாடு இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-25

மறந்து விடாதீர்கள். தன்மான உணர்ச்சியை ஊட்டிக் கொடுத்தவர் புரட்சித் தலைவர். அந்தத் தன்மான உணர்ச்சியை அடிபிறழாமல் இன்றைக்குத் தமிழகத்தில் ஆட்சி நடத்தக்கூடிய இடத்தில் நம்முடைய அன்பிற்குரிய தாய். "ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அதுதாண்டா வளர்ச்சி, உன்னை ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி, நாளும் ஒவ்வொரு பாடம் கூறு காலம் தரும் பயிற்சி. உன் நரம்போடுதான் பின்னி வளரணும் தன்மான உணர்ச்சி" பட்டுக்கோட்டை யார் எழுதிய அந்தப் பாட்டை நாட்டிற்குப் பரவலாக்கி, புரட்சிகரமான சிந்தனைகளுக்காக வித்திட்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை நான் நினைவுபபடுத்திச் சொல்கிறேன்.

தன்மான வாழ்க்கை, சுயமரியாதை வாழ்க்கை எப்படியிருக்கும். நான்கு பேர்கள் போற்றவும் நாடு உன்னை வாழ்த்தவும் மானத்தோடு வாழ்வதுதான் சுயமரியாதை. அந்த மரியாதையை மானத்தோடு காப்பதுதான் அந்த மனிதனுடைய கெட்டிக்காரத்தனம். இன்றைக்கு அதற்கு அடையாளம் நம்முடைய மாட்சிமைக்குரிய அம்மா புரட்சித் தலைவி அவர்கள். பிரதமர் விழாவிலே பங்கெடுக்கவில்லை. ட.க்கத்திலே போய் அமருவதற்கு நாங்கள் விரும்பவில்லை. ஓதுக்கப்பட்ட இடத்திலே உட்கார்ந்து கொண்டு விழாவில் நான் ஒரு சாதாரண பிரஜையாக இருந்து வருவதற்கு விரும்பவில்லை. அது எவ்வளவு பெரிய இடமாக இருந்தாலும் சரி, எத்தனை பெரிய மனிதர்களாக இருந்தாலும் சரி. மரியாதை இல்லாத இடத்திற்கு ஒருககாலும் போகமாட்டேன், செல்லமாட்டேன். ஆறேகால் கோடி தமிழர்களின் மானப் பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆறேகால் கோடி தமிழர்களின் மரியாதைப் பிரச்சினை. அந்த ஆறேகால் கோடி தமிழ் மக்களின் தலைவியாக நின்று, அந்த மரியாதையைக் காத்துத் தந்த அந்த மகத்தான தாய்க்கு, என்னுடைய மாட்சிமைக்குரிய என்னுடைய அன்னைக்கு, இந்த நாடே தன் மரியாதையை, வணக்கத்தை இன்றைக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றது. அதைத்தான் நான் மீண்டும் இங்கே நினைவுபடுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்... (மணியடிக்கப்பெற்றது.)

(திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் தனது இருக்கையிலிருந்து வெளியேறினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, இன்னும் ஒரு ஆளுங்கட்சி உறுப்பினருடைய கோட்டாவையும் சேர்த்து ஹக்கீம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேனே தவிர, வேறு ஏதும் தவறு நடக்கவில்லை . எஸ்.ஆர். பி. அவர்கள் கோபித்துக்கொண்டு போவதைப் போலப் போகிறார். அதற்காக விளக்கம் சொல்கிறேன்.

[2003 மே 9

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைம பூராவுமே ஆளுங் கட்சிக்காகக் கொடுங்கள். அதிலே எங்களுக்குப் பிரச்சினையே கிடையாது. ஆனால் இந்தச் சட்டமன்றத்தினுடைய மரபை மீறக்கூடாது.. (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரபை மீறவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை. 5 மானியக் கோரிக்கைகள். அதைப்பற்றி ஒரு வரிகூட பேசாமல் மேடையாகப் பயன்படுத்தி சட்டமன்றத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மேடை இல்லை இது. அமைச்சரவை என்பது, இதிலே உள்ளடங்கி இருக்கிற மானியக் கோரிக்கைகள்.

**திரு. ஜி. பழனிசாமி:** சட்டமன்றத்தையே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, அமைச்சரவை என்பதும் இந்த மானியக் கோரிக்கையில் உள்ளடங்கிய ஒன்று.

**திரு. ஜி. பழனிசாமி:** 26 ஆயிரம் கோடி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி அவர்களே, தங்களைவிட எனக்குத் தெரியும். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாகத்தான் அவர் பேசுகின்றார். அமைச்சரவை என்பதும், இந்த மானியக் கோரிக்கையிலே உள்ளடங்கிய ஒன்று. அதை வைத்துத்தான் பேசுகின்றார்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, இது ஒரு பொதுக் கூட்டம் போல.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்கும் பேசத் தெரியும், முறைகேடாக,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த முறைகேடும் இதிலே இல்லை. ஆளுநர், அமைச்சரவை என்பது இந்த மானியக் கோரிக்கையிலே உள்ளடங்கியிருக்கிற ஒன்று. ஆகவே அது தொடர்பாகத்தான் பேசுகின்றார். முதலமைச்சர் அவர்களைப் பற்றிப் பேசுகிறார். அவர்கள் கடைப்பிடித்த அந்தத் தன்மானத்தைப் பற்றிப் பேசுகின்றார்.. அது ஒன்றும் முறைகேடானது அல்ல, மரபை மீறியதும் அல்ல, அல்லது மானியக் கோரிக்கைக்குப் புறம்பானதும் அல்ல.



2003 மே 9]

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, அதாவது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் மூத்தவர். எனக்குப் பேசுகின்ற பழக்கம் அப்படி. நான் வந்து உங்களை மாதிரி ரொம்ப சாவகாசமாக, ஒவ்வொன்றாக எடுத்து, மேலேயும் கீழேயும் எடுத்துப் பேசுகின்ற மாதிரி பழக்கமில்லை. என்னுடைய பேச்சின் தோரணை, என்னுடைய பாணியே தனி. அதனாலே, பேசுகின்றதைப் பார்த்தவுடனே பொதுக் கூட்டம் மாதிரி இருக்கிறதா என்று சொன்னால் சட்டமன்றத்திலே பேசுவது என்று சொன்னால், ரொம்பத் தயங்கித் தயங்கி, திணறித் திணறி பேசுவது, விளங்காமல் பேச வேண்டுமென்று விதி இருக்கிறதா? நான் தெரியாமல் கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை, மூச்சுக்கு முன்னூறு தடவை, மேலேயும், கீழேயும் பார்க்க வேண்டுமா? இலலை, ஏதாவது பேப்பரைத் தூக்கித் தூக்கி, மேலேயும், கீழேயும் பரட்ட வேண்டுமா? (மேசையைத் தட்டும் ஒலி) இது அவசியமே இல்லை. எனக்கு எது தெரிகிறதோ, எனது மனதிற்கு எது நியாயம் என்று படுகிறதோ, அதை நான் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளே இருந்துதான் பேசுகிறேன். பேரவைத் தலைவர் சொன்னமாதிரி, நான்தான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேனே, நிதி, திட்டம், முதலீடு, தாக்கல் செய்யப்பட்ட விஷயங்கள் என்று. அவர் சொல்கிறார். 45 நாட்களாக 26 ஆயிரம் கோடி ரூபாய்க்குப் பேசிக் கொண்டுதானே இருந்திருக்கிறோம். இன்றைக்கு என்னமோ அரை மணி நேரத்திற்குள்ளாக, 45 நாட்களில், 26 ஆயிரம் கோடி ரூபாய் என்று வருகிற மேட்டரை பேசப் போகிறமாதிரி, நான் ஏதோ தவறிவிட்ட மாதிரி சொல்கிறார்களே! 45 நாட்களாகப் பேசியது என்ன? (மேசையைத் தட்டும் ஒலி) மணிக்கணக்காக அம்மா பதில் கொடுத்து இருக்கிறார்களே அது என்ன? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால் அதை எல்லாம் கேட்கவில்லையா? மறந்துவிட்டதா? இன்னும் 45 நாட்கள் புரட்டியடித்தால்தான் பழைய விஷயங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வருமா? (மேசையைத் தட்டும் ஒலி) தேவையில்லை என்பதற்காகச் சொல்கிறேன். இந்த வட்டத்தில் எனக்குக் கொடுக்கப்பட்ட இந்த நேரத்தில், என்னுடைய கட்சியைச் சேர்ந்திருக்கிறவர்கள் சொல்ல வேண்டிய விஷயங்கள் எல்லாம் நிறைய இருக்கிறபோது, அந்த வாய்ப்பையும் சேர்த்து தலைவர் அவர்கள் எனக்குத் தந்த காரணத்தினால் இதை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பெரிய மனிதர்கள் கொஞ்சம் நிதானமாக,

எங்களை மாதிரி புதியதாக வந்தவர்களைக் கொஞ்சம் வரவேற்பதற்கும், வழிகாட்டுவதற்கும், சொல்வதற்கும் எங்களுக்கு நீங்கள் துணையாக இருப்பதற்கும் இருக்க வேண்டுமே தவிர, எங்களை நீங்கள் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட வைத்துவிடக்கூடாது என்பதை மாத்திரம் சொல்லிக்கொண்டு, நான் மீண்டும் பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 12-40*

அந்த மரியாதையைக் காப்பாற்றுகிற இடத்தில், ஓர் அமைச்சர் எப்படி சவால் விடுகிறார், வெளியிலே இருந்துகொண்டு? எப்படி அந்தப் பேச்சு வருகிறது? நான் இருக்கிறவரை - நான் இருக்கிறவரை —இராணி மேரிக் கல்லூரியை யாரும் இடிக்க முடியாது.' அதுமாத்திரம் அல்ல; கடற்கரைக்கு எல்லாமே, வங்கக் கடற்கரைக்கும், அரபுக் கடற்கரைக்கும் நானே பொறுப்பு. நல்லவேளை, தலைவரும் நானும் ஆளுக்குப் பாதியாக இழுத்துக் கொண்டோம் என்று சொல்லாமல் நானே பொறுப்பு என்று அதோடு விட்டுவிட்டார். யார் அவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுத்தது என்று சொல்லி, ஒரு சட்ட விளக்கத்தை எங்கள் தாய் இங்கே தந்தார்கள். 'யாரைக் கேட்டார்? எந்த அவை கூட்டப்பட்டது? யார் விவாதித்தார்கள்? என்ன அபிப்பிராயம் தெரிவித்தார்கள்? மந்திரிசபை கூட்டப்பட்டதா? சான்றோர்கள் விவாதித்திருக்கிறார்களா? இல்லை, இது சட்டமாக்கப்பட வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டதா? இல்லை, அந்தச் சட்டம் முறையாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு மசோதாவாக நிறைவேறி, மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதா? எப்படி ஒரு தனி மனிதன்-எப்படி ஒரு தனி மனிதன்-இப்படிப் பேசலாம் என்று கேட்கப்படுகிறபோது, எவ்வளவு அரசியல் அகந்தை, ஆணவம், திமிர், எவ்வளவு அரசியல் கொழுப்பு இருக்கும் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பேசுவார்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட இவர்கள் விரும்புவார்கள். நடக்கவே நடக்காது. ஒரு போதும் நடக்காது. எங்கள் அன்னை, எதற்கும் அஞ்சாத சிங்கம், இந்த மண்ணில் உலா வரும்வரை, இந்த மக்களின் தலைவியாக, இந்த மன்றத்தின் தலைவியாக, இந்த மக்களுக்கு வழிகாட்டியாக, இந்தத் தாய் உலா வருகிறவரை, அந்த அகந்தைக்கு இடம் இல்லை. அந்த ஆணவம் வெற்றிபெற முடியாது. அந்தக் கொழுப்பான அரசியல் தமிழ் மண்ணிலே எடுபடாது என்பதை ஜாக்கிரதையாக நினைவில் அவர்கள் வைத்துக்கொள்ளட்டும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அன்புக்குத்தான் கட்டுப்படுவார்; அன்புக்குத்தான் கட்டுப்படுவார். குறிவைக்க மாட்டான் கரிகாலன்; ஆனால், அவன் குறிவைத்தால், வைத்த குறி தப்பாது என்று புரட்சித் தலைவர் 50 ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னாரே, இன்றைக்கு அந்தத் தலைவரின் வாரிசாக வந்த, அந்த அடிச்சுவட்டில் இருக்கிற எங்கள் தாய், குறிவைக்க மாட்டார்; வைத்தால், அந்தக் குறி தப்பவே தப்பாது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுக்கு நினைவுபடுத்துகிற விதத்தில், இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அம்மா, நீங்களும் புரட்சித் தலைவர் அவர்களும் நடித்த 'ஒளி விளக்கு' படத்திலே புரட்சித் தலைவர் சொல்வார் 'என் குறி தப்பாது; ஓடாதே நில்' என்று. அதுவேதான், அம்மா அவர்கள் இன்றைக்குச் சொல்வதெல்லாம். காலை எடுத்து வைக்கமாட்டேன்; எடுத்து வைத்துவிட்டு, களம் என்று வந்துவிட்டால், வெற்றி பெறாமல், சரித்திரம் படைக்காமல் திரும்புவதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் புரட்சித் தலைவி, இந்த மண்ணுக்குத் தந்திருக்கிற — வகுத்துத் தந்திருக்கிற — அரசியல் வீர வரலாறு என்பதை மீண்டும் இந்த நேரத்திலே நினைவுபடுத்தி, இந்த நாடு உங்கள் பக்கம்; ஆறேகால் கோடி தமிழ் மக்களும் உங்கள் பக்கம்; நாளை இந்த மண்ணில் நீங்கள் பதிக்க இருக்கிற அத்தனை அரசியல் சரித்திர முத்திரை பதித்த அத்தியாயங்களுக்கு, வெற்றிச் சுவடுகளை, உங்களுக்கு உரியதாக ஆக்கித் தருவதற்கு, இங்கே கூடி இருக்கிற அல்லது இங்கே அமர்ந்திருக்கிற அல்லது உங்கள் பின்னாலே அணி வகுத்திருக்கின்ற இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக, கோடானு கோடி மக்களும் உங்களுடைய வெற்றிக் கொடிக்குப் பின்னாலே பவனி வரக் காத்திருக்கிறோம். இந்த மன்றம், இந்த மன்றத்தின் வாயிலாக மக்களின் நல்வாழ்வு சிறப்பதற்கு, செழிப்பதற்கு நிறைவுபடுவதற்கு, தாங்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சிகளுக்கு இந்த நாடு துணை நிற்கிறது. இந்த மன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் துணை வருவார்கள் என்ற நம்பிக்கையோடு வாய்ப்புக்கு நன்றியைக் கூறி நிறைவாக்கி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி.

*பிற்பகல் 12-45*

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் பேசிய பல உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியை ஒரு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நிதி நெருக்கடி இருந்தால், நிதி நெருக்கடி இருக்குமென்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியினை ரூபாய் 99 இலட்சமாகக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எம்.பி.-க்களுக்கு கார்களில் ஒட்டிக் கொள்வதற்குத் தனியாக pass கொடுக்கின்றார்கள், அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு pass வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சட்டமன்ற அலுவலகத்தில் இருந்து 4 மாதங்களுக்கு முன்னர், உங்களின் கார்களின் நம்பர் என்ன என்று கேட்டு கடிதம் எழுதினார்கள். ஆனால், இதுவரை pass கொடுக்கவில்லை. அந்த pass-ஐ கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டம் போன்ற நீண்ட தூரத்திலிருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இரயில் பயணப் படி ரூபாய் 15 ஆயிரம்தான் வருடத்திற்குக் கொடுக்கப்படுகிறது. அந்தப் பயணப் படிக்குப் பதிலாக முன்பு கொடுத்தது போல கூப்பன் சிஸ்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சில உறுப்பினர்கள் விரும்புகின்றார்கள். இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குன்னூர் தொகுதியிலும் உதகமண்டலம் தொகுதியிலும் இதுவரை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டப்படவில்லை. அதைக் கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2001 ஆம் ஆண்டு 4 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை உயர்த்தியும், தினப்படி 150 ரூபாய் உயர்த்தியும் நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏனோ அதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அதை மீண்டும் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். பல்வேறு துறைகளிலே பேசுகின்ற அமைச்சர்கள் தங்கள் துறை இந்தியாவிலேயே முன்னோடியாக இருக்கிறது என்று சொல்கின்றார்கள். அதே வழியிலே மகாராஷ்டிரா மாநிலத்திலும், ஆந்திராவிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளத்தை இந்த மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் நாம் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சட்டமன்ற அலுவலகம் கட்டப் போவதாக நீங்கள் கூறி இருக்கிறீர்கள். அது தொடர்பாக மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சொல்லியதை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அவர்கள் உயிரோடு இருந்தபோது, அவர் நடத்திய ஸ்வராஜ்யா பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதினார்கள். அப்போது தீவுத் திடலிலே இராணுவம் கட்டடம் கட்ட முன்வந்தது. பல்வேறு சமயங்களில் கட்டடங்களைக் கட்ட இராணுவ அமைச்சகம் முன்வந்தது. ராஜாஜி அவர்கள் ஸ்வராஜ்யா பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதினார்கள். இராணுவ அமைச்சகம் தீவுத் திடலிலே கட்டடம் கட்டக் கூடாது; ஏனென்று சொன்னால், சென்னை நகருக்கு கடற்கரையிலிருந்து சுத்தமான காற்று வருகிறது. எனவே கட்டடம் கட்டக்கூடாது என்று அவர்கள் அன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள். அந்த யோசனையை நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே சொன்ன கருத்தினை இது தொடர்பாக நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தாய்க்கு பல குழந்தைகள் இருந்தாலும், உடல் ஊனமுற்ற, சவலைக் குழந்தைகள்மீது அந்தத் தாய்க்கு அதிகமாக பாசம் இருக்கும். அதேபோன்றுதான் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடத்திலும், நமது பேரவைத் தலைவர் அவர்களும், நமது முதலமைச்சர் அவர்களும் சற்று கனிவாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஆந்திர மாநிலத்திலும், மகாராஷ்டிரா மாநிலத்திலும் கொடுப்பது போல இங்கே ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். ஆந்திர மாநிலத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு மாதத்திற்கு 43 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது. மகாராஷ்டிரா மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் மாண்புமிகு உறுப்பினருக்கு எது வேண்டும்?

பிற்பகல் 12-50

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரையில் கந்தசாமி அவர்கள் ஆனாலும் சரி, இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பளமே

வேண்டாம்; மகாராஷ்டிரா மாநிலத்தில் கொடுக்கக்கூடிய படிகளை மட்டுமே நீங்கள் எங்களுக்குத் தந்தால் போதும். அதேபோல் ஆந்திர மாநிலத்திலே, சம்பளமே இல்லாமல் வேலை செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ரெடியாக இருக்கிறோம். ஏற்கெனவே மகாராஷ்டிரா மாநிலத்திலே 35,000 ரூபாய்க்கு மேல் வருகிறது. 35,000 ரூபாய்க்கு மேல் கிட்டத்தட்ட 48,000 ரூபாய் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களும் இப்போது பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு அதிக வாய்ப்பைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Public Department-லிருந்து பெறப்பட்ட விவரங்களைத்தான் நான் இங்கே தெரிவித்தேன். எல்லாப் படிகளையும் சேர்த்துத்தான் மகாராஷ்டிரா மாநிலத்தில் '5,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழு சார்பாகச் சென்றபோது, அதனுடைய Booklet-ஐயே கொண்டு வந்து, அதை நான் நம்முடைய சட்டமன்ற அலுவலகத்திலே கொடுத்திருக்கிறேன். அதை நாம் கணக்குப் பார்த்தோம் என்று சொன்னால்கூட, இப்போது 48,000 ரூபாய்க்கு மேல் இருக்கிறது. நான் தருகிறேன். நானே விளக்கம் தருகிறேன். நானே அதற்குச் சாட்சி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு அதிக வாய்ப்பினை நீங்கள் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கந்தசாமி, உங்களுக்கும் சரி, மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் சரி, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஏதோ எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்பதைப்போல பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் எண்ணிக்கை விகிதாச்சார அடிப்படையில்தான் நேரம் வகுக்கப்பட வேண்டும். அதுதான் முறை, அதுதான் நியாயம், அதுதான் நெறி. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு மணி நேரம் ஒரு பிரச்சினையிலே பேசுவதற்கு வாய்ப்பு என்றால், பிரதான எதிர்க்கட்சிக்கு



10 மணித்துளிகள்தான் வரும். அதைவிட குறைவாகத்தான், காங்கிரஸ் கட்சிக்கு 8 மணித்துளிகள் வரும். அதைவிட குறைவாக பாட்டாளி மக்கள் கட்சிக்கு வரும். அதைவிட குறைவாகத்தான் கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கு வரும். கடைசியாக B.J.P.-க்கு 3, 4 நிமிடங்கள்தான் வரும். ஆனால் அந்த முறையை நான் இறுக்கிப் பிடித்து, கடைபிடித்தால் எதிர்க்கட்சிகளுடைய குரலே எழ முடியாது. அதற்காகத்தான் எல்லாபிரச்சினைகளிலும் எல்லாக் கட்சிகளையும் நான் பேச அனுமதிக்கிறேன். அவர்களுக்குரிய நேரத்தை நான் தருகிறேன். ஆளும் கட்சியினுடைய நேரத்தைப் பறித்துத்தான் தருகிறேன் என்பதை தயவுசெய்து நீங்கள் உணர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** ஹக்கீம் அவர்கள் 30 நிமிடங்கள் பேசி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கந்தசாமி, இன்னொரு ஆளுங்கட்சி உறுப்பினரும் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார். திரு. பொள்ளாச்சி ஜெயராமனும் பேசுவதற்குப் பெயர் கொடுத்து இருக்கிறார். அவருடைய நேரத்தை எடுத்துக்கொண்டு, ஹக்கீம அவர்களைப் பேச அனுமதித்து இருக்கின்றேன். அவரை இதிலிருந்து விலக்கிவிட்டு நீங்கள் மொத்தமாகப் பேசுங்கள் என்று கொடுத்திருக்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, வேறுசில மாநிலங்களின் சட்டப் பேரவைகளில் இருப்பதுபோல் விகிதாச்சார அடிப்படையில் ஆளுங்கட்சியினர் பேச வேண்டும் என்றவொரு நிலைப்பாட்டை எடுப்போமேயானால், எங்கள் பக்கம் 6 பேர் பேசவேண்டிய ஒரு நிலை வரும். உங்களுக்கு, பல கட்சிகளுக்கு வாய்ப்பே கிடைக்காமல் போய்விடும். தாராள மனதோடு புரட்சித் தலைவி அவர்களின் அரசு, மாற்றுக் கட்சிகள் பேசுவதற்கு வாய்ப்பைத் தர வேண்டுமென்று சொல்கிற காரணத்தால்தான் எங்களது உறுப்பினர்கள் பேசுகிற வாய்ப்பைக்கூட விட்டுக் கொடுத்து, உங்களுக்கு நாங்கள் வாய்ப்பைத் தந்துகொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இனி அந்த முறையைத் தான் கடைப்பிடிக்க வேண்டுமென்றால், நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி முடிவு செய்து கொள்ளலாம். எண்ணிக்கை விகிதாச்சார அடிப்படையில் நேரத்தை வகுத்துக்கொள்வதற்கு நான் தயாராக

இருக்கிறேன். (குறுக்கீடு) ஹேமச்சந்திரன் தயாரா? (குறுக்கீடு) இனிமேல் விகிதாச்சார அடிப்படையில், எண்ணிக்கை அடிப்படையில் நேரத்தை வகுத்துக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். பல கட்சிகளுக்குப் பேசுவதற்கான வாய்ப்பே வராது. சுத்தமாக கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பல பிரச்சினைகளைப் பற்றி பேசக்கூடிய வாய்ப்பே வராது. அதை தாங்கள் முதலில் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கந்தசாமி, பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கா. கந்தசாமி:** 25 உறுப்பினர்கள் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு ஒரு மானியத்திலே ஒருவர்தான் பேச முடிகிறது. ஆனால் ஒரேயொரு உறுப்பினரைக் கொண்ட கட்சியைச் சார்ந்த உறுப்பினருக்கு வாரத்தில் மூன்று மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கபபடுகிறது என்பதை நான் சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கட்சியினுடைய தலைவர், முன் வரிசையில் இருக்கக்கூடிய தலைவர், அந்தக் கட்சியின் சார்பாக கருத்துகளைப் பிரதிபலிப்பதற்கு நான் வாய்ப்புத் தரவேண்டும். அதுபோல கம்யூனிஸ்ட் இயக்கங்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். ஆனால் அந்தக் கட்சியினுடைய கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைத் தரவேண்டும். காங்கிரஸ் கட்சிக்கு எந்த வாய்ப்பையும் நான் மறுக்கவில்லை. எந்த வாய்ப்பையும் நான் குறைத்தும் கொடுக்கவில்லை. உங்களுக்குப் போதுமான அளவுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. விகிதாச்சார அடிப்படையில், எண்ணிக்கை அடிப்படையிலே என்று பார்த்தால் பல வாய்ப்புகள், பல கட்சிகளுக்குப் பறிபோகி விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத்தான் நான் நினைவுபடுத்துகிறேன்.

*பிற்பகல் 12-55*

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இங்கு இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிய மதிப்பை, மரியாதையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தருகிறார்கள். பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வைக்கக்கூடிய கோரிக்கைகளைக்கூட உடனடியாக அவர்கள் நிறைவேற்றித் தருகிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டன.



எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பெரிதும் மதிக்கிறார்கள். அதைப்போலவேதான் எனக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. எல்லா உறுப்பினர்களும் ஒன்றுதான். அந்த உணர்வைப் பெற வேண்டும் என்கிற வகையிலேதான் புரட்சித் தலைவி அவர்கள் என்னை இந்த ஆசனத்திலே அமர்த்தி வைத்திருக்கின்றார்கள். ஆகவே ** என்பதைப் போல் ஒரு கருத்துப்பட பேசுவது முறையற்றது. தாங்கள் குறிப்பிட்ட அந்த வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ஒரு மணித்துளியில் பேசி முடியுங்கள்.

**திரு. கா. கந்தசாமி:** முதலமைச்சர் அவர்களே எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய எங்களைப் பார்த்து பொறுப்புக்கெட்டத்தனமாக நடந்துகொள்கிறார்கள் என்று சொன்னால் எங்களை யார் மதிப்பார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; ஒட்டுமொத்தமாகச் சொல்லவில்லை. குறிப்பிட்டுப் பேசிய ஓர் உறுப்பினருடைய கருத்திற்கு அவர்கள் மறுப்புச் சொல்கிறபோது அந்தக் கருத்தைச் சொன்னாரே தவிர, ஒட்டுமொத்தமாக யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. கா. கந்தசாமி:** சட்டமன்றத்தில்...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குறிப்பில் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பொறுப்புக்கெட்டத்தனமாக நடந்துகொள்கிறார்கள் என்று முதலமைச்சர் பேசியதாகத்தான் Record-ல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அப்போது எதிர்த்து வாதம் செய்ததற்கு பதில் சொன்னார்கள். (குறுக்கீடு) அப்போது எதிர்த்து வாதம் செய்ததற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதிலே ஒன்றும் தவறில்லை.

**திரு. கா. கந்தசாமி:** சட்டமன்றத்தில் எல்லா முக்கியப் பிரச்சினைகளும் விதி 110-ன்கீழ்தான் படிக்கப்படுகின்றன. அதற்கு விவாதம் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது அது ஒரு நல்ல முன்னுதாரணமாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; அப்போது சட்டமன்ற விதியைத்தான் திருத்த வேண்டும். சட்டமன்ற விதிகளிலே 110-வது விதியின்கீழ் வைக்கக்கூடிய அறிக்கையின்மேல் விவாதம் கூடாது என்பதுதான் சட்டமன்ற விதி. விதியைத்தான் திருத்த வேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டன.

**திரு. கா. கந்தசாமி:** முக்கியமான பிரச்சினை...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா முக்கியப் பிரச்சினைகளிலும் விதி 110-ன்கீழ் அறிக்கை தந்து விடுகிறார்கள், அதைப்பற்றி விவாதம் செய்ய முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வது தவறான ஒரு கருத்து. ஏறக்குறைய 45 நாட்கள் நடைபெற்ற இந்த பட்ஜெட் கூட்டத் தொடரில், 5 முறை அல்லது 6 முறைதான் விதி 110-ன்கீழ் நான் அறிக்கைகள் வாசித்து இருப்பேன். மற்ற அனைத்து நாட்களிலும், அனைத்து நேரங்களிலும் பல்வேறு பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பி இருக்கிறார்கள். அனைத்திற்கும் பதில் சொல்லிக்கொண்டேதான் இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் விதி 110-ன்கீழ் எந்த எந்த பிரச்சினைகள் குறித்து அறிக்கைகள் இங்கே வாசிக்கப்பட்டனவோ, அந்தப் பிரச்சினைகள் குறித்துகூட வேறு சந்தர்ப்பங்களில் இங்கே கேள்விகள் எழுப்பப்பட்டு நாங்கள் பதிலும் அளித்து இருக்கிறோம்.

**திரு. கா. கந்தசாமி:** Zero hour-ல் ஒரு பிரச்சினை...(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கந்தசாமி பேசுங்கள். (குறுக்கீடு) கந்தசாமி, பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கா. கந்தசாமி:** நான் அதையும் பேசுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கந்தசாமி, பேசி முடியுங்கள்.

**திரு. கா. கந்தசாமி:** Zero hour-லே ஒரு பிரச்சினை பற்றிப் அனுமதி கேட்டபோது நீங்கள் மறுக்கிறீர்கள். ஆனால் அதே பிரச்சினை பற்றி அரை மணி நேரம் கழித்து விதி 110-ன்கீழ் படிக்கின்றீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் அவருக்கு-ஒரு நிதி நெருக்கடியில் இருக்கின்றார்கள். அவருக்கு-- நேரம் இருக்குமேயானால் ஒரு யோசனையை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக்கூட நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. கா. கந்தசாமி:** சென்ற வாரம் உலக வங்கி அதிகாரிகள் இங்கே வந்து 2,000 கோடி ரூபாய்க்கான உலக வங்கி கடனைப் பெற நீங்கள் ஆலோசனை நடத்தியதாக பத்திரிகையில் படித்தேன். நிதி நிலை அறிக்கையில்கூட 11,000 கோடி ரூபாய்க்கு உலக வங்கியில் கடன் வாங்குவதாக நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். மொத்தம் நீங்கள் எவ்வளவு உலக வங்கியில் கடன் வாங்குகிறீர்கள்? தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகன் மீதும் எவ்வளவு கடன் சுமை இருக்கிறது என்பதை நீங்கள் சொல்லவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தமிழ்நாடு நிதி நெருக்கடியில் இருக்கிறது என்று நீங்கள் 3,000 கோடி ரூபாயை மத்திய அரசைக் கேட்டதாகவும், மத்திய அரசு இன்னும் கொடுக்கவில்லை என்றும் நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன். ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அதற்கு மேலே நான் போக மாட்டேன். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் Bus Permit கொடுக்கின்ற அதிகாரம் Police Superintendent-இடம் இருந்தது. சேலம், நாமக்கல், தருமபுரி போன்ற ஒன்றுபட்ட மாவட்டங்களுக்கு வேலூர் Police Superintendent-தான் Bus permit-க்கு அனுமதி வழங்க வேண்டுமாம். அப்போது சேலம் மாவட்டத்திலிருந்து 20 பஸ் முதலாளிகள்...

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உரையை முடித்துவிடுங்கள். திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) ஜி.கே. மணியா?

**திரு. கா. கந்தசாமி:** சொல்லி முடித்துவிடுகிறேன் சார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் ஒரு பெரிய கருத்தைச் சொல்கிறார்.

**திரு. கா. கந்தசாமி:** பெரிய கருத்து இல்லை. நல்ல கருத்து; உங்களுக்குத் தேவையான கருத்து. உங்களுக்கு நல்ல கருத்துதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நல்ல கருத்து என்பது முக்கியமல்ல. நேரமதான் முக்கியம்.

**திரு. கா. கந்தசாமி:** சேலம் மாவட்டத்திலிருந்து 20 பஸ் முதலாளிகள் அனுமதி பெற வேலூருக்குச் சென்றார்களாம். அப்போது அந்த Police Superintendent. ஆங்கிலேயருக்கு கொஞ்சம், கொஞ்சம் தமிழ் தெரியுமாம். அதில், ஆத்தூரைச் சேர்ந்த ஒரு பஸ் முதலாளி மட்டும், 'துரை அவர்களே, எனக்கு அந்த Bus Permit-ஐக் கொடுங்கள்' என்று கேட்டாராம். துரை என்று சொன்னால் நான் Bus Permit கொடுக்கமாட்டேன் என்று அந்த வெள்ளைக்காரர் சொன்னாராம். அதற்கு இந்த பஸ் முதலாளி, 'துரை அவர்களை, துரை, துரை என்று சொல்லி பழக்கமாகிவிட்டது துரை அவர்களே' என்று சொன்னாராம். உடனே அந்த ஆளுக்குத்தான், அந்த பஸ் முதலாளிக்குத்தான், அந்த Bus Permit கொடுக்கப்பட்டதாம். அதுபோன்று நீங்கள் மத்திய அரசிடம் பணிவாக, கனிவாகப் பேசி, இந்த மோதல் போக்கைக் கைவிட்டு, மத்திய அரசிடம் நிதி பெறவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறோம் துரை. *(சிரிப்பு)* திரு. ஐ. கணேசன். *(குறுக்கீடு)* திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நாங்கள் என்னதான் பேசினாலும்கூட, பேசுகிறபோது, எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உங்களுக்கு, உறுப்பினர்களுக்கு, நாங்கள் தாராளமாக மனது வைத்து நேரம் ஒதுக்கிக் கொடுக்கிறோம். கணக்குப்படி பார்த்தால், எண்ணிக்கையின் அடிப்படையிலே உங்களுக்குப் பேசுவதற்கே வாய்ப்பு வராது என்றெல்லாம் மனக் குறையோடு சொல்லிக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையிலே, நாங்கள் அதையும் மீறி நல்ல, ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொன்னாலும்கூட, அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படும் என்று சொல்லக்கூடிய அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகும். அதையும் நாங்கள் தாங்கிக் கொண்டு சில வார்த்தைகள் பேசினால், எங்களுடைய மனது புண்படும்படியாக அல்லது ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்கள் மனது புண்படும்படியாக அந்தக் கட்சிகளை எல்லாம் நோகடிக்கக்கூடிய வகையிலே பேசுவதற்கு, அந்தப் பேச்சை என்றும் நாங்கள் வாங்கிக் கட்டிக்கொள்வதற்குத்



தயாராக இல்லை. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்தச் சட்டமன்றத்திலே நல்ல கருத்துகளை, நாட்டுக்குத் தேவையான கருத்துகளைச் சொல்லப்போய், எங்கள் கட்சிகளைக் கொச்சைப்படுத்தக்கூடிய, கட்சித் தலைவர்களை இழிவுபடுத்தக்கூடிய, தமிழ்நாட்டிலே எந்த அரசியல் கட்சிகளுமே இங்கே நியாயமான கட்சிகள் இல்லை என்று சொல்லக்கூடிய வகையிலே, அந்தச் சூழ்நிலையை உருவாக்குவதற்கு இன்று நாங்கள் தயாராக இல்லை. அப்படிப்பட்ட மனம் எங்களை நோகக்கூடிய சூழ்நிலை மேலும் வரக்கூடாது. உங்களுக்கு அப்படிப்பட்ட தாராள மனது இருக்கின்ற காரணத்தினாலேதான், இன்று நாங்கள் இந்த மானியக் கோரிக்கைகளிலே எதையும் பேசாமலே உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, அமர்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன். *(குறுக்கீடு)* திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது பிற்பகல் 1-1/2 மணிக்கே அமைச்சர் பேசி முடித்து Voting-க்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்களே பேசி முடிக்கட்டும். நாங்கள் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒரு ஐந்தைந்து மணித் துளிகள் பேசலாம். *(குறுக்கீடு)* திரு. மகேந்திரன். *(குறுக்கீடு)* திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நாங்கள் பேசியதாகப் பதிவுசெய்து என்னுடைய வார்த்தையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஐந்து மானியக் கோரிக்கைகளிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்துவைப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி 82 இலட்சம் ரூபாய் என்றிருக்கிறது. அதை 1 கோடி ரூபாயாக உயர்த்திட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்

கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான 2 கோடி ரூபாயையும் முழுமையாக அவர்கள் திட்டங்களுக்கு ஒதுக்க முடிகிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர் ஏற்கெனவே முடிவு செய்த ஒருசில திட்டங்களுக்கு, எந்தெந்தப் பகுதிகள் என்பதை மாத்திரமே குறிப்பிட முடிகிறது. எனவே முழுத் தொகையும், சட்டமன்ற உறுப்பினர், அவருடைய discretion-படி ஒதுக்குவதற்கு மாநில அரசு அனுமதி அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல ஒரு கிராம ஊராட்சியினுடைய தலைவர், உதவியாளரை வைத்துக்கொள்வதற்கு முடிகிறது. ஆனால் இரண்டு யூனியன்கள், ஒரு நகராட்சி அல்லது மூன்று யூனியன்களை உள்ளடக்கிய ஒரு சட்டமன்றத் தொகுதியிலே உறுப்பினராக இருக்கின்ற எம்.எல்.ஏ. வினுடைய அலுவலகம் இருக்கிறது. ஆனால அலுவலகத்திற்கு உதவியாளரை அரசாங்கம் நியமிப்பதில்லை. எனவே எம்.எல்.ஏ. அலுவலகத்திற்கு ஓர் உதவியாளரை அரசு அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சட்டமன்றம் நடக்கின்ற நாட்களை அதிகப்படுத்த வேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே தணிக்கை மறுப்புகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. Audit objections பற்றி இருக்கிறது. அதிலே 4,22,345 தணிக்கை மறுப்புகள் இதுவரை தீர்வு செய்யப்படாமல் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு தணிக்கை மறுப்புகள், அதிலும் Civil Construction-ஐப் பொறுத்தவரை, அதிகமாக பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தந்த ஒப்பந்ததாரர்களிடம் திரும்பப் பெறவேண்டுமென்றெல்லாம் Audit objection-ல் இருப்பதை, Audit Report-ல் பார்க்க முடிகிறது. எனவே 1,22,345 தணிக்கை மறுப்புகள் தீர்வு செய்யப்படாமல் இருக்கின்றன என்பது அதிகமாக இருக்கிறது. எனவே இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் ஓய்வுகால பணிக்கொடையைப் பொறுத்தவரை, 1-4-2003 அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு 50% ரொக்கமாகவும், 50% சிறு சேமிப்புப் பத்திரமாகவும் அளிக்கப்படும்



என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவர் 25 ஆண்டுகள் அல்லது 30 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெறும்போது அவர், அவருடைய வாழ்க்கையிலே சில பொறுப்புகளை, ஓய்வு பெறும்போது பெறுகின்ற பணிக்கொடையின் மூலம் முடிக்கவேண்டுமென்ற சூழ்நிலையில் இருக்கிற நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவராகத்தான் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பணிக்கொடை 100%-ஐயும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இங்கு பல்வேறு சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய வாரிசுதாரர்களுக்கு மானியமானது கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வாரிசுதாரர்களைத் தேர்வு செய்து, வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் வாரிசுதாரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல வீரன் சுந்தரலிங்கனார் வாரிசாக இருக்கின்ற பாஞ்சாலங்குறிச்சி திரு. பொன்னையா அவர்கள் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இது தொடர்பாக, அவர்தான் இருக்கிற ஒரே வாரிசு என்று குறிப்பிட்டு கடிதங்கள் எழுதி இருப்பதாகச் சொன்னார். எனவே வீரன் சுந்தரலிங்கனார் குடும்பத்தாருக்கு, வாரிசாக இருக்கிற அவருக்கு அரசாங்கம் உதவித் தொகை அளிக்கவேண்டும். ஏனென்றால் அவரது குடும்பம் வறுமையிலும், கடனிலும் இருந்துகொண்டிருக்கிறது என்ற தகவல் இருக்கின்ற காரணத்தால், இதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரை, அதில் பெரும்பகுதியானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு பேருந்திலே பயணம் செய்வதற்கு முடியாத காரணத்தாலே, அவர்களது உபயோகத்திற்காக புகைவண்டி கூப்பன்கள் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல வயது முதிர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு—ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போது அவரது குடும்பத்திற்கு மருத்துவ சிகிச்சை செய்வதற்கு அரசு நிதியுதவி தருகிறது. ஆனால் ஓய்வு பெற்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு—மருத்துவப் படியாக மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியத்தோடு சேர்த்து வழங்கவேண்டுமென்கிற கோரிக்கையையும் அரசு நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஓரிரு கோரிக்கைகள் இருக்கின்றன. அதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலமாக பல்வேறு பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வரையறுக்கப்படாத ஊதியமாக consolidated pay ரூ.500-லிருந்து ரூ.1000 வரை கொடுக்கப்படுகிறது. அவர்கள் பட்டப் படிப்பு, அதற்குப் பிறகு ஆசிரியர் பயிற்சிக்கான படிப்பும் படித்த பிறகும் இவ்வளவு குறைந்த சம்பளத்தில் பணியாற்ற வேண்டியிருக்கிற காரணத்தால், அவர்களது பணியையும் முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி 1 (Group I). 2000-2001 தேர்வில் இதுவரை எந்தவிதமான தேர்வு முடிவுகளும் அறிவிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே அதற்கும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராட்டத்திலே இறங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் அழைத்துப் பேசி--அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் சரண் விடுப்பு இரத்து, பென்ஷன் பலன் குறைப்பு, பணிக் கொடைகள் 50% தாமதமாகக் கொடுப்பது போன்ற இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் அவர்கள் செய்து கொண்டிருக்கிற போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வாக்கூடிய எண்ணத்தோடு, அரசாங்கம் அவர்களை அழைத்துப் பேசி--இந்தப் போராட்டத்திற்கு முடிவு காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

அதோடுகூட இன்றையதினம் இங்கே விவாதத்தின்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கட்சிகளுக்கு நேரம் ஒதுக்குவதைப் பற்றி தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். உண்மையிலேயே அனைத்துக் கட்சிகளுக்கும் நல்லமுறையிலே நேரம் ஒதுக்கி நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் எதிர்க் கட்சிகளுடைய கருத்துகளை இங்கே எடுத்து வைப்பதற்கு நல்லமுறையில் *(மேசையைத் தட்டும் ஒலி)* நேரம் ஒதுக்கித் தருகிறார் என்ற காரணத்தால், இப்போது இருக்கின்ற முறையை தொடர்ந்து நேரம் ஒதுக்குவதற்கு அவர் பயன்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன். *(குறுக்கீடு)* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய, சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர், இங்கே பேசுகிறபோது ஏதோ அவரையும் மற்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் பேசுகிறபோதும், அவர்களுடைய மனம் புண்படும்படி ஆளும் கட்சியிலே இருக்கிறவர்கள், நம்முடைய தமிழகத்தினுடைய காவல் தெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்னும் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களை ஏதோ மனம் புண்படும்படிப் பேசுவதாகச் சொல்லி, வருத்தப்பட்டு, பேசுவதற்கு வாய்ப்பே அவர்களுக்கு அளிக்கவில்லை என்ற தொனியிலே பேசி, இந்த நாட்டுமக்களுடைய ஒட்டுமொத்தமான அனுதாபத்தைப் பெறுகிற வகையிலே அவர் இங்கே பேசி அமர்ந்திருப்பதுதான் உள்ளபடியே இங்கே சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிற பத்திரிகையாளர்களுக்குக்கூட அவர் சொன்ன கருத்து உள்ளபடியே மன வருத்தத்தை அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மனதார, அவர் நெஞ்சைத்தொட்டு மாண்புமிகு மணி அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து பேச வேண்டிய ஒரு தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் தினம், தினம்...*(குறுக்கீடு)*

**திரு. ஐ. கணேசன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பேச்சு இல்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அமைச்சர் முடித்துவிடட்டும்.

**திரு. ஐ. கணேசன்:** ஒட்டுமொத்தமாக எல்லோரையும்தான் சொன்னார்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** No. No. பேரவைத் தலைவர் அவர்களே, மணி பேசுகிறபோது எதிர்க்கட்சித் தலைவர்களை

ஒட்டுமொத்தமாக, எதிர்க்கட்சித் தலைவர்களுடைய மனம் புண்படும்படி பேசுகிறார்கள் என்றுதான் எங்கள்மீது குற்றம் சொன்னார். (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** ஒட்டுமொத்தமாகத்தான் C.M. சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) அதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், உட்காருங்கள். கல்வி அமைச்சர் பேசி முடிக்கட்டும். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) முடித்தவுடனே உங்களுக்கு நான் வாய்ப்பு தருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** தினம், தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், இங்கே வந்து பேச வேண்டிய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற அவர், எப்படியெல்லாம் ஆட்சிக்கு எதிராக, ஆளும் கட்சிக்கு எதிராக, குறிப்பாக நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தனிப்பட்ட முறையில் தரக்குறைவாக, கொச்சையாக, சிலேடையாக எப்படி எல்லாம் விமர்சனம் செய்கிறார் என்பதை நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல இந்தச் சட்டமன்றத் தேர்தலிலே நான் நிற்க மாட்டேன் என்று சபதம் எடுத்துக்கொண்ட நம்முடைய மாண்புமிகு மணி அவர்கள் தலைவராக இருக்கிற கட்சியினுடைய நிறுவனத் தலைவர் இப்போது அறிக்கைவாதியாகவே மாறி அவருக்குப் போட்டி போட்டுக் கொண்டு தினம், தினம் எப்படி அர்ச்சனை செய்கிறார் என்பதும் இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். அவற்றையெல்லாம் மறைப்பதற்காக, அவற்றையெல்லாம் மக்கள் மனதிலிருந்து அகற்றுவதற்காக மணி இவ்வளவு வாய்ப்பைப் பெற்று, இந்தச் சட்டமன்றத்திலே இவ்வளவு வாய்ப்புகளையும், அனைத்து வாய்ப்புகளையும் பெற்றிருக்கிற அவர் இன்றைக்கு இப்படி பெரிய, மிகப் பெரிய ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவதன் மூலம் ஏதோ அவர்கள் நாட்டு மக்களுக்கு நல்லவர்கள்போல காட்டிக்கொள்வதற்கு



இன்றைக்கு மணி பேசியதை உள்ளபடியே நான் மன வருத்தத்தோடு சொல்கிறேன். நிச்சயமாக நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகட்டும் அல்லது பேரவைத் தலைவர் அவர்கள் ஆகட்டும், எதிர்க் கட்சித் தலைவர்களை மதிக்கக்கூடிய, இன்றைக்கு ஒப்பற்ற தலைவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளபடியே அப்படிப்பட்ட நல்ல தலைவர்களைப் பற்றி நீங்களும் பேசுவதுதான் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. இந்தக் கருத்தை உங்களுடைய தலைவருக்கும் உங்களோடு இப்போது உறவுகொள்ளத் துடிக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவருக்கும் நீங்கள் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்றத்திலே எதிர்க் கட்சிகளை எல்லாம் அல்லது அந்த வகையிலே கட்சிகள் பெயரைச் சொல்லிக்கூட புண்படுத்துகிற மாதிரி பேசவில்லை என்கிற மாதிரி நம்முடைய அமைச்சர் சொல்கிறார். அப்படிப் பேசாமல் இருந்திருந்தால் எங்களுக்கு மனநிறைவு. எந்தக் கட்சியைப் பற்றியும் பேசவில்லை என்றால், ஒரு கட்சி மரம் வெட்டிய கட்சி, இன்னொரு கட்சி வந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உட்காருங்கள். சொல்கிறேன், உட்காருங்கள். இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள்.

பிற்பகல் *1-15*

**திரு. ஜி.கே. மணி:** இந்தச் சட்டமன்றத்திலே (குறுக்கீடு) இல்லை, இல்லை, இந்தச் சட்டமன்றத்திலே நான் மனம் திறந்து சொல்கிறேன். எங்கள் கட்சியின் சார்பிலே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய கட்சிகளையோ அல்லது ஆளும் கட்சியையோ, முதலமைச்சரையோ, அமைச்சர்களையோ, ஓர் உறுப்பினரையோ ஒரு வார்த்தை மனது நோகிற மாதிரி இந்தக் கூட்டத் தொடரில் என்றைக்காவது பேசினோம் என்று சொன்னால், சொல்லுங்கள் நாங்கள் வாபஸ் வாங்கிக்கொள்கிறோம். ஒரு கட்சியைப் பற்றி மரம் வெட்டிய கட்சி; சமூக நீதிக்காகப் போராடிய கட்சியை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. இதனால் மனது நோகுமா, நோகாதா? வேதனைப்படுவார்களா, படமாட்டார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியிலே இருக்கிற உங்களுடைய கட்சியினுடைய நிறுவனத் தலைவர் விடக்கூடிய அறிக்கை என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரடியாக புண்படுத்தக்கூடிய வகையில், ஆளும் கட்சியை விமர்சனம் செய்யக்கூடிய வகையிலே அமைகிறது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேதான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) ஒவ்வொருவரும் அரசியல் கட்சி நடத்துகிறோமே தவிர, சன்மார்க்க சபை நடத்தவில்லை. ஆகவே சொல்ல வேண்டிய கருத்துகளை முதலமைச்சர் அவர்கள் அரசியல்பூர்வமாகச் சொல்வதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் இல்லை என்றால் நாம் அரசியல் இயக்கத்திலேயே இருக்க முடியாது. நீங்களும் அதேபோல எந்த விமர்சனத்தை வேண்டுமானாலும் சொல்லலாம்.

**திரு. ஜி.கே. மணி:** நாங்கள் பேசும்போது நல்ல வார்த்தைகளை, நயமான வார்த்தைகளை, நல்ல வார்த்தைகளைத்தான் சொன்னோமே தவிர ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் பேசியதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்கிற கேள்விக்கு, சொல்கின்ற குற்றச்சாட்டிற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்கள் கடுமையாகப் பேசுகிறபோது நாங்களும் வரம்பு மீறாமல், மரபைக் கடைப்பிடித்துச் சில பதில்களை, அவர்கள் எந்த அளவிற்குத் தாக்குகிறார்களோ அந்த அளவிற்கு நாங்களும் எதிர்த் தாக்குதல் செய்ய வேண்டியிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி அவர்களை நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அப்போது கடுமையான வார்த்தைகள்கூட வரலாம். ஆனால் அப்படி நாங்கள் பதில் சொல்கிறபோது, எங்கள்மீது குற்றச்சாட்டுச் சொல்கிறபோது நாங்கள் கொடுக்கின்ற பதிலடிகளை ஏன் அவர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை?

(திரு. ஜி.கே. மணி அவர்கள் தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். இல்லை; திரு. ஜி.கே. மணி அவர்களை நான் கேட்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களையும் கேட்கிறேன். திரு. ஹேமச்சந்திரன் அவர்களையும் கேட்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) மணி, கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு), உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்தப் பேரவையில் பாட்டாளி மக்கள் கட்சியினர் மரங்களை வெட்டி வீழ்த்தினார்கள் என்று நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் எழுந்து பேசி, ஆமாம், நாங்கள் மரங்களை வெட்டினோம் என்று ஒப்புக்கொண்டார். இதில் மனது புண்படுவதற்கு என்ன இருக்கிறது? இருக்கிற உண்மையை நான் சொன்னேன். உண்மையை நீங்களும் ஒப்புக்கொண்டீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, மரம் வெட்டின கட்சி என்று நீங்கள் சொன்னீர்கள். அந்த மரம் எதற்காக வெட்டினார்கள்? ஒரு சமூக நீதிக்கான போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது விவாதம் இல்லை மணி.

**திரு. ஜி.கே. மணி:** நீங்கள் சமூக நீதி காத்த வீராங்கனை. சமூக நீதிக்கு-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். (குறுக்கீடு) மணி அவர்களே, உட்காருங்கள். முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்களும் அதை ஒத்துக்கொண்டீர்கள். அதைப்போல உங்களுடைய உறுப்பினர், பேசிய உறுப்பினர் ...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, நேற்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில வரலாற்று நிகழ்வுகளை இங்கே எடுத்துச் சொல்கிறபோது, ஒவ்வொரு கட்சிக்கும், இயக்கத்திற்கும் ஒரு வரலாற்று நிகழ்வு இருக்கிறது; அதை இணைக்கிற வகையில் ஒரு சரித்திரம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு வருகிறபோது, பாட்டாளி மக்கள் கட்சியைக் குறிப்பிட்டு மரம் வெட்டிய கட்சி என்றும அவர்களுக்கு ஒரு சரித்திரம இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதற்கு அடுத்து பேசிய மாண்புமிகு மணி அவர்களும் அதை ஒத்துக்கொண்டு அப்போது ஒரு போராட்டத்திற்காக நாங்கள் மரம் வெட்டினோம் என்று அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். போராட்டம் என்பது அறவழியில் இருக்க வேண்டுமே ஒழிய, பசுமையான மரங்களை வெட்டி ரோட்டில் போடுவது போராட்டமாகாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போராட்டத்திலே 21 பேர்களைச் சுட்டுக்கொன்றார்கள். காக்கை, குருவிகளைப் போல சுட்டுக்கொன்றார்கள். 21 பேர் செத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அது விவாதம் இல்லை. விவாதம் என்பது இப்போது அதுவல்ல. இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களை (குறுக்கீடு) மணி, உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்லிவிடுகிறேன். விவாதம் இதைப் பற்றியது அல்ல. விவாதம் என்பது இதைப் பற்றியது அல்ல. இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதிக்கிறார்கள். நீங்களே மனதைத் தொட்டுச் சொல்லுங்கள். உங்களை முதலமைச்சர் மதிக்கவில்லையா? மனதைத் தொட்டுச் சொல்லுங்கள். பதில் சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மணி அவர்களை மதிக்கவில்லையா? ஹேமச்சந்திரன் அவர்களை மதிக்கவில்லையா? பழனிசாமி அவர்களை மதிக்கவில்லையா? மனதைத் தொட்டுச் சொல்லுங்கள்.





**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனிப்பட்ட நபரை, என்னை மதிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. எங்களுடைய இயக்கத்தை எப்படிச் சொன்னார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய இயக்கம், வெளியே இருந்து கருத்துச் சொல்கிறபோது அந்தக் கருத்துக்கு பதில் சொல்ல வேண்டியது முதலமைச்சர் கடமை அல்லவா?

**திரு. ஜி.கே. மணி:** இல்லை; சட்டமன்றத்திலே ஒரு முதலமைச்சர், வேறு யாராவது சொல்லியிருந்தால்கூட நாங்கள் தாங்கிக்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய இயக்கத்தினுடைய தலைவர் வெளியே இருந்து அறிக்கை விடுகிறபோது முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடு) இந்த விவாதத்தை இத்தோடு நிறுத்துங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களே, எதிர்க்கட்சிகளை எல்லாம் மதிக்கக்கூடிய மனப்பக்குவம் பெற்றவர்கள். நிதானத்தோடு அவர்கள் பிரச்சினைகளை அணுகக்கூடியவர்கள். நீங்கள் பேசக்கூடிய கருத்துகளுக்கு அவர்கள் பதில் சொல்கிறார்கள். அதை நீங்கள் எதிர்த்து உங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கும் வாய்ப்பு அளிக்கிறார்கள். நீங்களும் நேற்று அதற்கு பதில் சொன்னீர்கள். அந்தப் பதிலும் அவைக்குறிப்பிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே எல்லா எதிர்க்கட்சிகளையும் மதிக்கக்கூடிய மனவளத்தோடுதான் இந்தச் சட்டமன்றம் நடக்கிறது. சட்டமன்றக் கூட்டத்தொடர் நிறைவுபெறக்கூடிய இந்தச் சூழ்நிலையில் தாங்கள் இப்படிப்பட்ட வேதனைகளை வெளியிடுவது மிகவும் வருந்தத்தக்கது. (குறுக்கீடு) உட்காருங்கள். தமிழரசன், மூன்று நிமிடங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 1-20*

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விடுதலைப் புலிகள் சம்பவத்திலே சிவராசன், தாணு அவர்களுடன் புரட்சித் தலைவி அம்மா இருக்கிறார்கள் என்று ஒரு போலியான...

**திரு. ஜி.கே. மணி:** ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பில் அவர் பேசியது ஏறவில்லை. அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தமிழரசன், மூன்று மணித்துளிகள் பேசுங்கள்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு செகண்ட்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கே. ஆறுமுகம்:** Record பண்ணுங்கள். அதை record பண்ணுங்கள். சட்டமன்றத்தில் அதை record பண்ணுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மணி அவர்கள் கூறியது பற்றியும், அதுகுறித்து நான கூறியது அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஏற்கெனவே அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். அவைக்குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களும் நேற்று தும்பை விட்டுவிட்டு, இன்றைக்கு வாலை பிடிப்பதைப் பார்க்கும்போது என்ன

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



தோன்றுகிறதென்றால், நேற்றையதினம் அவர்கள் கடந்த காலத்தில் மரங்களை வெட்டினார்கள் என்று நான் சொன்னபோது மாண்புமிகு மணி அவர்கள் அதை ஒத்துக்கொண்டார்கள். அது தொலைக்காட்சியிலும் வந்தது. பத்திரிகைகளிலும் வந்தது. அவர் இங்கிருந்து சென்ற பின்பு அவருடைய நிறுவனத் தலைவர் அவரை நன்றாக டோஸ் விட்டிருப்பார் என்று கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அதைச் சரிக்கட்டுவதற்காக இன்றைக்கு, நேற்று முடிந்துபோன பிரச்சினையை மீண்டும் இன்றைக்குக் கிளப்பி மனம் புண்படுகிறது, நீங்கள் எங்கள் மனதைப் புண்படுத்திவிட்டீர்கள் என்றெல்லாம் குற்றம்சாட்டிப் பேசுகிறார். இதில் மனம் புண்படுவதற்கு என்ன இருக்கிறது? மரங்களை வெட்டினீர்கள் என்று நான் சொன்னேன். கடந்த கால உண்மையை, வரலாற்று உண்மையை நான் சொன்னேன். அந்த உண்மையை நீங்களும் ஒப்புக்கொண்டீர்கள். ஆமாம், நாங்கள் மரங்களை வெட்டினோம் என்றீர்கள். இதில் மனம் புண்படுவதற்கு ஒன்றுமே இல்லையே.

**திரு. ஜி.கே. மணி:** தி.மு.க. மொழிக்காக போராடிய கட்சி, பெருமைக்குரிய கட்சி. அண்ணா தி.மு.க. சத்துணவு கண்ட கட்சி, பெருமைக்குரிய கட்சி. சமூக நீதிக்காகப் போராடிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று நடந்தது. நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் சொன்னார்கள். நீங்களும் பதில் சொன்னீர்கள். நேற்றே முடிந்துவிட்டது. (குறுக்கீடு) மணி, நேற்று முடிந்துவிட்டது. பேசி முடிக்கப்பட்டுவிட்டது. மணி 1-23 ஆகிவிட்டது. நேற்று முடிந்தது. நேற்று முடிந்ததற்கு இப்போது பேச வேண்டிய அவசியமே இல்லை. இது கும்பகோணத்தில் வாங்கிய அடிக்கு குற்றாலத்தில் மீசை துடிப்பதுபோல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றே முடிந்துவிட்ட பிரச்சினை. தமிழரசன், மூன்று மணித்துளிகள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தமிழரசன் பேசுங்கள்:

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதங்களின் இறுதி நாளான இன்று என்னைப் பேச அனுமதித்த தங்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி இரத்தினச் சுருக்கமாக இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய வேண்டிய சில கருத்துகளை பதிவு செய்ய வேண்டுமென்ற நோக்கோடு சிலவற்றைப் பேச விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்திலே இதுவரையிலே தமிழக வரலாறு காணாத

அளவிற்கு ஒரு நிகழ்வு நடந்துகொண்டிருக்கிறது. ஏன்? இந்தியாவிலே உள்ள பிற சட்டமன்றங்களிலேகூட இந்த நிகழ்வு நடந்து இருக்குமா என்றால் நிச்சயமாக இருக்காது என்றே வரலாறு சொல்லும். என்னவென்றால், கடந்த மார்ச் 21 ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்தச் சட்டப் பேரவையிலே 45 நாட்களாக நிகழ்ந்துகொண்டிருக்கிற இந்தச் சட்டப் பேரவையிலே, இந்தச் சட்டமன்ற மாண்புகளை மதிக்கின்ற வகையிலே ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாளும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பங்கேற்று, விவாதங்களிலே கலந்துகொண்டு, எதிர்க்கட்சியினர்களுக்கு, அவர்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கெல்லாம் தக்க பதில் அளித்து, இந்தியாவிலே வேறு எந்த முதலமைச்சரும் தொடர்ந்து சட்டமன்ற நடவடிக்கைகளிலே மணிக்கணக்காக அமர்ந்து பங்கேற்று பதில் சொன்னார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலை இல்லாத வகையிலே இந்தச் சட்டமன்றத்திலே அந்த வரலாற்றை இந்த முதலமைச்சர் அவர்கள் படைத்திருக்கிறார்கள். உலகிலே வேறு எந்தச் சட்டமன்றத்திலேயும் இது இருந்திருக்குமா என்பது சந்தேகம். அந்த அளவுக்கு இந்தியாவிலேயே ஒரு முன்னுதாரணமாக 45 நாட்களும் சட்டமன்ற நிகழ்வுகளில் பங்கேற்று, விவாதத்திலே பங்கேற்று, தெலுங்கு, தமிழ், இந்தி, ஆங்கிலம், மலையாளம் என பல்வேறு மொழிகளில், அவர்களுக்குத் தெரிந்த அனைத்து மொழிகளிலேயும் கேட்டதற்கு பதில் சொல்லுகின்ற வகையிலே அவர்கள் பங்கேற்று இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களைப் பாராட்டி, இந்த மன்றப் பதிவேடுகளிலே என்னுடைய பாராட்டினை பதிவு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த விவாதத்திலே நான் என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற ரூ.82 இலட்சம் என்பது 1 கோடியாக மாற்றப்பட வேண்டுமென்ற முதல் கோரிக்கையை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலேயும் நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். அடுத்ததாக கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கார் வாங்குவதற்கு கடன் வழங்குவோம் என்று அறிவித்திருந்தோம். ஆனால் நடைமுறையாக்கப்படவில்லை. கார் வாங்குகின்ற கடனை நீங்கள் விரைவிலே நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்ல 3 நிமிடங்கள் தயவுசெய்து தாருங்கள். இன்னும் ஒரு மணித்துளியில் முடியுங்கள். 1½ மணிக்கு முடிக்கவேண்டும்.

**திரு. செ.கு. தமிழரசன்:** ஆக, அடுத்ததாக இந்த சட்டமன்றக் கட்டடத்தை எழிலார்ந்த கட்டடமாக கட்ட வேண்டுமென்று நீங்கள் முயற்சிக்கிறீர்கள். அந்த முயற்சிக்கு தடைகள் இருக்கின்றன. வழக்கமாகவே, நெருப்பாற்றிலே நீந்தி வந்த நீங்கள் முட்பாதைகளை எல்லாம் கடந்து வந்திருக்கிற நீங்கள் எப்போதுமே நேர் கொண்டு எதிர்த்து, மோதி, அதிலே வெற்றி கண்டு, பழக்கப்பட்ட நீங்கள், இதிலேயும் நிச்சயம் வெற்றி அடைவீர்கள். ஒரு புதிய சட்டமன்றக் கட்டடம் உருவாகிறபோது, அதிலே எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அலுவலகம் வேண்டும். இங்கே இருக்கிற பல கட்சித் தலைவர்களுக்கு அலுவலகம்கூட கிடையாது. அவர்கள் உட்கார்ந்து நடவடிக்கைகளிலே ஈடுபடுவதற்குக்கூட அலுவலகம் கிடையாது. ஒரு சட்டமன்றச் செயலாளர் அலுவலகத்திற்குப் போனால் பாவம், சட்டமன்றச செயலாளர் அவர் இருக்கையைத் தவிர நூற்றுக்கணக்கான அதிகாரிகளோடு இந்தச் சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் குழுமியிருக்கின்ற நிலையைப் பார்க்க முடிகிறது. அலுவலர்கள்கூட இந்தச் சட்டமன்றத்திலே உட்கார்ந்து அலுவல் காரணமாக குறிப்பெடுப்பதற்கு இந்தச் சட்டமன்றத்திலே இடமில்லை. அப்படிப்பட்ட—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுங்கள். பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** ஆக இந்த நிலைமைகளை மாற்றியமைக்கிற வகையிலே நீங்கள் புதிய சட்டமன்றக் கட்டடத்தை எல்லாம் உருவாக்க, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், எங்களையும், நாங்கள் அர்ப்பணித்துக் கொள்வோம் என்ற வகையிலே எங்கள் ஆதரவையும் தெரிவித்து, பெண் குலத்து திருவிளக்காக இருக்கிற நீங்கள் இந்தியாவிலேயே ஒரு முன்னுதாரணமான முதலமைச்சராக தொடர்ந்து செயல்பட இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே நாங்கள் வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்து இயம்பியிருக்கிறார்கள். பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள்; வெட்டுத் தீர்மானங்கள் பலவற்றை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தந்திருக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் மிகத் தெளிவான விளக்கத்தை நிதிநிலை அறிக்கையிலே நான் விளக்கமாகத் தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்குமென்று கூறி வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

### (அ) கோரிக்கை எண்-2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது திரு. நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,73,20,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(உ) கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

(ஊ) கோரிக்கை எண் 15 - நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15 - நிதித் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.



**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திருமபப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.



"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.380,77,93,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.20,38,11,000/-க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(எ) கோரிக்கை எண் 35 — திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35-திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 35-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,30,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,08,83,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



## (ஏ) கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48- ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். ஜி. விநாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1229,71,35,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## 3. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (உ) உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கவிருக்கும் விருந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள ஏதுவாக இன்று மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் உறுப்பினர்கள் இங்கிருந்து நேராக தாஜ் கொரமண்டல் ஓட்டலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிகப் பெரிய வறட்சி இன்று நிலவிக் கொண்டிருக்கின்றது. இந்த நேரத்திலே இப்படிப்பட்ட ஒரு விருந்து தேவைதானா என்பதை முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், முதலமைச்சர் அவர்கள்—இது எல்லா உறுப்பினர்களும் கொஞ்சம் கலந்து, ஒன்றாகப் பழக வேண்டும் என்பதற்காக செய்யப்படக் கூடியது. விருந்தாக அல்ல. எல்லோரும் கலந்து பேச வேண்டும் என்பதற்காகத்தான்.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்ற உறுப்பினர்களை கௌரவித்து ஒரு முறை மேதகு ஆளுநர் அவர்களும் பின்னர் பட்ஜெட் செஷன் முடியும்போது முதலமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விருந்தளிப்பது பல ஆண்டுகளாக இருந்து வருகின்ற ஒரு மரபாகும். ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற அசாதாரணமான நிலைமை அதாவது, வறட்சி, நிதி நெருக்கடி, இவற்றையெல்லாம் கருதித்தான் 2001-ல் புதிதாக இந்தச் சட்டமன்றம் அமைந்த பின்னரும், புதிதாக இந்த அரசு ஆட்சி பொறுப்பேற்ற பின்னரும்கூட நான் சட்டமன்ற உறுபபினர்களுக்கு விருந்தளிக்கவில்லை. அதைப்போலவே 2002 ஆம் ஆண்டில்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் விருந்து அளிக்கவில்லை. காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இந்த மரபை அடியோடு விட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த முறை, இநத ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்காக நான் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆகவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நான் அவர்களை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த விருந்தில் நல்ல மனதோடு கலந்துகொள்ள வேண்டும். இந்த விருந்து அளிப்பதையே கொச்சைப்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### (ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.





## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவுப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2003 மே 9

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2003) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2003), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2003) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2003 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் யாராவது பேசுகிறீர்களா? (குறுக்கீடு) திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கின்ற இச்சூழ்நிலையிலே என்னுடைய கருத்துகளை உங்கள் முன்னே நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டு காமராஜருடைய நூற்றாண்டு விழா நிறைவு பெறுகின்றகட்டத்திலே வந்திருக்கிறது. தமிழக முதல்வர் அவர்கள் மாவட்டங்கள்தோறும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய விழாவினை ஏற்பாடு செய்து வருவதாகவும் ஜூலை 15-ல் நிறைவு விழா விருதுநகரிலே நடைபெற இருப்பதாகவும் காலையில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். காமராஜர் அவர்கள் ஒரு மிகப் பெரிய தியாகி. அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணி கிடைக்க இந்த அரசு ஆணையிட வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தர வேண்டிய முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் பணி கிடைக்கவில்லை. நான்கூட, காமராஜர் அவர்களுடைய உற்ற நண்பர் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்த, மறைந்த செல்வராஜ் சுப்பையாப் பிள்ளை என்பவருடைய மகன், ஒரே வாரிசு என்ற காரணத்தினாலே அமைச்சர் அவர்களிடத்திலே அது குறித்து, அவருக்குப் பணி கிடைப்பதற்கு, இந்த ஆண்டு நூற்றாண்டு விழாவாக இருக்கின்ற காரணத்தால் நீங்கள் உதவிட வேண்டுமென்று கேட்டேன். இன்றைய வரையிலும் அவருக்கு எந்தவிதமான பணியும் கிடைக்கவில்லை. ஆகவே— அவர் மட்டுமில்லை— இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த அந்தத் தியாகிகளுடைய வாரிசுதாரர்களுக்கு அரசாங்கம் உரிய மரியாதையைக் கொடுக்கின்ற வகையில அவர்களுக்கு உதவி செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மைய அரசின் மானியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு தனது பங்காக 500 ரூபாய் மட்டுமே கொடுக்கிறது. நமது மாநிலத் தியாகிகள் அவர்கள். அந்திமக் காலத்தில் மன நிறைவுடன் இருக்க இந்த அரசு ரூபாய் 500-ஐயும் சேர்த்து ரூ. 1,000/- ஆகக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபர் ஒதுக்கீடு ரூபாய் 29. அதுவே ஐந்தாண்டு காலத் திட்டத்தில் 248 ஆகவும் 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6,440 எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிப் பற்றாக்குறையால் 2001-2002 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு 6,040 கோடி என நிர்ணயிக்கப்பட்டது 5,200 கோடி என குறைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றால், இதன் காரணமாக அரசுக்கு பொருளாதாரச் சிக்கல் இருப்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. 10-வது ஐந்தாண்டுத் திட்டம் மூலம் ரூபாய் 40 ஆயிரம் கோடிக்கு மத்திய அரசாங்கம் திட்டக் கமிஷன் மூலமாக நம்முடைய மாநிலத்திற்குக் கொடுக்க இருப்பதாக அறிகிறேன். 8 சதவிகிதம் வளர்ச்சிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும்கூட இந்த சதவிகித வளர்ச்சிகள் சிறப்புற அமைய வேண்டுமென்று சொன்னால், அதிகாரிகளுடைய பணிகள் சிறப்பிற்குரியதாக இருக்க வேண்டும்.

பிற்பகல் 4-35





என்னுடைய பகுதியிலேயே—நான் சென்ற முறை பேசியிருக்கின்றேன். 2, 3 முறை நான் பேசியிருக்கின்றேன். என்னுடைய பகுதியிலே— மணிமங்கலம், நடுவீரப்பட்டு, புதுச்சேரி சாலை இவை பற்றி எல்லாம் வெட்டுத் தீர்மானமாகக்கூட கொடுத்திருக்கிறேன். ஆனால் சாலைப் பணிகள் ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. மாங்காடு பரணிப்புத்தூர், மௌலிவாக்கத்திற்கு கிட்டத்தட்ட 30 இலட்ச ரூபாய் செலவு செய்ய வேண்டியதற்கு 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களிடத்திலே குறிப்பிட்டிருக்கின்றேன். 16 இலட்சம் ரூபாய் செலவு செய்தால் ஒரு வேலையும் ஒழுங்காக நடக்காது.

அதேபோல செம்பரம்பாக்கம் ஏரி தண்ணீர் எங்கு வந்தாலும், செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்துதான் போரூருக்கு வந்து சென்னைக்கு வரவேண்டும். அந்த செம்பரம்பாக்கம் ஏரிக்கரை சாலை, கிட்டத்தட்ட 30 வருடத்திற்கு முன்னாலே போடப்பட்ட அந்தச் சாலை இதுவரைக்கும் செப்பனிடப்படவில்லை. அதையும் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தாற்போல மின்சாரக் கட்டணம். இந்த மின்சாரக் கட்டணத்திற்கு நான் ஒரு ஆலோசனை கொடுக்கலாம் என்று இருக்கிறேன். ஒரேவிதமான கட்டணத்தைப் போட்டு எல்லோரையும் சிரமப்படுத்துவதை விட—ரேஷன் கார்டு 3 வகையாகக் கொடுக்கிறீர்கள். ஒரு ரேஷன் கார்டு மஞ்சள் கார்டு. அதற்கு அரிசி, உப்பு, புளி, மிளகாய், கோதுமை, சர்க்கரை எல்லாம் கொடுக்கிறீர்கள், மண்ணெண்ணெய் உட்பட. அடுத்து ஒரு ரேஷன் கார்டுக்கு வெறுமனே சர்க்கரை கொடுக்கிறீர்கள். அதேபோல — ரேஷன் கார்டை பொருளாதார ரீதியில் பிரித்ததைப்போல மின் கட்டணத்திற்கும் இது போல கார்டுகளைப் பயன்படுத்தி ஏழைகளுக்கு, வசதி படைத்தவர்களுக்கு, Income Tax கட்டுபவர்களுக்கு என்று 3 வகையாகப் பிரித்து அந்தக் கட்டணத்தை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஓர் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நீதிபதி, அவருக்கும் ஒரே மின் கட்டணம்; தவாலி, அவருக்கும் ஒரே கட்டணம் என்று சொன்னால், அவருடைய சம்பளம், வருமானம் எவ்வளவு, இவருடைய சம்பளம், வருமானம் எவ்வளவு. எனவே இதை அரசு கருணையுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல முதியோர் உதவித் தொகை. இந்த முதியோர் உதவித் தொகை கடந்த பல மாதங்களாகக் கொடுக்கப்படவில்லை என்று நான் நினைக்கின்றேன். அரசாங்கத்தினுடைய கருணையின் அடிப்படையில்தான் ஏழைகளுக்கு, அதுவும்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகையை தவறுதலாக யார் யார் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுக்க வேண்டுமென்று ஒரு கணக்கு மேற்கொள்ளப்பட்டது. அந்த நிலையில் சில இடங்களில் இவை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தற்போது Revenue துறை மூலமாக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கூப்பிட்டு, பேசி மீண்டும் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளுக்கும் தற்போது முதியோர் உதவித் தொகை with retrospective effect கொடுக்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

பிற்பகல் 1-40

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் சாலையிலே வருகிறபோது, திடீரென்று ஒரு காட்சியைக் கண்டேன். பெரிய பெரிய பஸ்களை பெண் டிரைவர்கள் இன்றைக்கு ஓட்டி வருகிறார்கள். அது உண்மையிலேயே பாராட்டுக்குரியது; நான் அதை வரவேற்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில், நடுவீரப்பட்டியில் தொடர்ந்து தீ விபத்து ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிகாரிகளால் இந்த தீ விபத்து எதனால் ஏற்படுகிறது? எப்படி ஏற்படுகிறது? என்று பார்க்கமுடியவில்லை. குறிப்பாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுடைய வீடுகள்தான் இன்றைக்கு பற்றிக்கொண்டு எரிகின்றன என்ற நிலைமை இருக்கின்றபோது, நிச்சயமாக அதை நீங்கள் கவனிக்கவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். உங்களிடத்திலேயிருந்து நாங்கள் சிலவற்றை எதிர்பார்க்கிறபோது, வரவிற்குரிய சில வகைகளையும் உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு எதிரில், புறம்போக்கு நிலம்; செட்டிப்பள்ளம் என்று ஒரு பகுதி; கக்கன்ஜி நற்பணி மன்றம்; அங்கே வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள். பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்த நிலத்தில் இருக்கின்றவர்களை சிலர்



சரவணா ஓட்டல் இன்றைக்கு ஆர்ச் போட்டிருக்கிறது; அந்த இடம் அவர்களுக்கு என்று. அதை அரசாங்கம் எடுத்தால் பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதியிலே, எருமையூர் என்று ஒரு பகுதி. அந்த எருமையூரிலே, மேய்க்கால் புறம்போக்கு என்ற ஒரு இடத்தை — ஏற்கெனவே காலப்போக்கிலே இருந்திருக்கிறது. அது 40 வருடத்திற்கு முன்னாலேயே மேய்க்கால் புறம்போக்கினை — குவாரி புறம்போக்காக மாற்றி அங்கே எல்லோரும் கல் எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இன்றைக்கு நீங்கள் அங்கேபோய் மேய்க்கால் புறம்போக்கு என்று எட்டிப்பார்த்தீர்களேயானால், மூன்று பனை மரம் உயரத்திற்கு பள்ளம் இருக்கிறது. அதிலே ஒன்றும் மேய்க்கால் பண்ணமுடியாது. அதை குவாரி புறம்போக்காக மாற்றாத காரணத்தாலே இன்றைக்கு திருட்டுத்தனமாக, அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாய்/ரெவின்யூ வரவில்லை; கள்ளத்தனமாக மிகப்பெரிய முதலாளிகள் அங்கே எடுத்துக்கொண்டு செல்கிறார்கள்; கற்களை வெட்டியெடுத்துக் கொண்டு செல்கிறார்கள். இப்போதும் 32 பேர் கல் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட அதிகாரிகள் வருவதற்குள் அவர்களுக்கு விஷயம் தெரிந்துவிடுகிறது. ஏனென்றால், ஒவ்வொருவரிடமும், ஒவ்வொரு டிபார்ட்மென்டிலும் செல்-போன் கொடுத்து வைத்திருக்கிறார்கள்; அவர்களுடைய ஆட்களுக்கு. ஆனால் அதிகாரிகள் வருகிறார்கள் என்றால், Phone மூலம் தகவல் கொடுத்தவுடன் அவர்கள் உஷாராகி விடுகிறார்கள். அதனால் அந்த எருமையூரிலே இருக்கிற குவாரியை மேய்க்கால் புறம்போக்கு என்பதை குவாரி புறம்போக்காக மாற்றி, அதை அரசாங்கம் டெண்டருக்கு விட்டு, அதன் மூலமாக அரசுக்கு வருமானம் வருவதற்குரிய வழிவகைகளை நீங்கள் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்'புகிறேன்.

அடுத்தாற்போல ஜானகி எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியிலே, — புரட்சித் தலைவர் எம.ஜி.ஆர். அவர்கள் மறைந்த நேரத்தில் — கோயில் கட்டுவதற்காக, சோழிங்கநல்லூரில் 100 ஏக்கர் நிலம் அன்றையதினம் ஒதுக்கப்பட்டதாக நான் அறிகிறேன். அது உண்மையாக இருக்குமேயானால், அந்த 100 ஏக்கர் நிலம் யாருக்குக் கொடுக்கப்பட்டது? இன்றைக்கு அந்தக் கோயில் கட்டவில்லை என்று தெரிகிறது அது யாரிடத்திலே இருக்கிறது என்பதை அரசாங்கம் அறிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி டி. யசோதா] [2003 மே 9

அதேபோல விடுதலைப் புலிகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே கிட்டத்தட்ட 100 ஏக்கர் நிலம், இராமநாதபுரத்திலே இருக்கின்ற உச்சிப்புளி என்கின்ற இடத்திலே கொடுக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இந்த நாட்டிலேயிருந்து அகற்றப்பட்டதற்குப் பிறகு, அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டதற்குப் பிறகு, அந்த இடத்தை அரசாங்கம் கையகப்படுத்தி இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், அந்த இடம் இன்றைக்கு யார் கையிலே இருக்கிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல விடுதலைப்புலிகளுக்கு சென்னை நகரிலே மட்டுமல்ல; பல பகுதிகளிலே அசையாச் சொத்துக்கள் இருக்கின்றன; வீடுகள் எல்லாம்கூட இருக்கின்றன. அந்த வீடுகள் போன்ற அசையாச் சொத்துக்கள் யார் பெயரிலே இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்து, அது யார் பெயரிலே இருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

அதேபோல குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முன்பெல்லாம் B.D.O. ஆபீசுக்கு ஜீப் இருக்கும். எம்.எல்.ஏக்கள் அந்த ஜீப்பிலே — ஒரு யூனியனில் 50 லிட்டர் டீசல் கொடுப்பார்கள். அந்த 50 லிட்டர் டீசலைப் பயன்படுத்தி, நாங்கள்—ஏரியாவை சுற்றிப் பார்த்து அங்கே என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைக் கவனிக்க முடியும். ஆனால் இப்போது இருக்கிற நிலைமையிலே அதைக் கவனிக்க முடியவில்லை. காரணம் B.D.O. ஆபிசில், எம்.எல்.ஏ-க்களுக்கு ஜீப் கொடுப்பதில்லை. ஆகையினால் இன்றைக்கு தொகுதியை முழுமையாகப் பார்க்க முடியவில்லை என்றாலும்கூட அது ஏன் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

வால்பாறை பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் இருக்கின்ற, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மிக அதிகமாக வாழ்கின்ற, சட்டமன்றத் தொகுதி. மிகவும் வறுமையில் இருப்பவர்கள் இவர்கள். இவர்களுடைய குழந்தைகளும் அதே நிலையிலேதான் இருக்கிறார்கள். அவர்கள் படிப்பதற்கென்றே ஒரு கல்லூரியை நீங்கள் அந்த இடத்திலே அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு நான் என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே வைப்பதற்கு வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



2003 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கும், ஒட்டுமொத்தமாகவும் சில கோரிக்கைகளைத் தந்து அதை ஈடேற்ற வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலிக்கும் என்று கூறி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2003) நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2003). மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின்...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வருகிறது, இப்போது வருகிறது. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடபபடுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### பிரிவு 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் தன் திருத்தத்தை மொழியலாம்.

**THIRU J. HEMACHANDRAN:** Honourable Speaker Sir, I move the following amendment to Clause 2 :

"In Clause 2 Add the words "President of the local Panchayat" after the word Trustee`` wherever it occurs.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல் யாரும் இல்லையா?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்து சமுதாயம் சம்பந்தமாக கொண்டு வந்திருக்கிற இந்த சட்டங்களில் சில முக்கியமான கருத்துகளைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது இந்தச் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 'Religious Institution' means a math, temple or specific endowment and includes a samadhi or brindhavan or any other institution established or maintained for a religious purpose.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2003 மே 9

பிற்பகல் 4-50

இதிலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், சமீப காலமாக தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே நடந்து வருகிறதாக தகவல் இருக்கிறது. எங்களுடைய குமரி மாவட்டத்திலே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிற ஒரு நிகழ்ச்சி என்னவென்றால், இன்று ஒரு சமுதாயத்தினுடைய கோயிலுக்குப் பக்கத்திலே இன்னொரு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், ஒரு கல்லையோ அல்லது வேறு ஏதேனும் ஒரு வடிவத்தையோ கொண்டு வந்து வைத்துவிட்டு, இது கோயில் என்று சொல்லி, இன்னொரு சமுதாயத்தாருடைய கோயிலிலே விழாக்கள் நடக்கிற நோத்திலே, இவர்களும் இங்கே ஒலிபெருக்கியைப் போட்டு, விழாக்கள் என்று சொல்லி, தகராறு பண்ணுவதும்—காவல் துறையும், மாவட்ட நிர்வாகமும் சொன்னதற்குப் பிறகும்கூட—அவர்கள் ஒலிபெருக்கியை வைத்து முழக்கம் போடக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரும் போய்ச் சொன்னதற்குப் பிறகும்கூட, கேட்காமல் தகராறு பண்ணுகிறார்கள். இதில் என்ன நிலைமை என்றால், குமரி மாவட்டத்திலே, ஏற்கெனவே நடந்த மண்டைக்காடு கலவரத்திற்குப் பிறகு ஜஸ்டிஸ் வேணுகோபால் கமிஷனுடைய ஒரு அறிக்கை இருக்கிறது. அந்த அறிக்கையினுடைய அடிப்படையிலே, தமிழக அரசு அதை ஏற்றுக்கொண்டு, ஓர் ஆணையும் போட்டிருக்கிறது. அந்த ஆணையைப் பற்றியோ அல்லது அந்த கமிஷனைப் பற்றியோ சிலருக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மாவட்ட நிர்வாகமும் மாநில நிர்வாகமும் அதுசம்பந்தமான சட்டமுன்வடிவுகளை இன்றைக்கு உருவாக்கி, நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற நேரத்திலே, அங்கே இருக்கிற நிலைமை என்னவென்றால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி இல்லாமல் யாரும் கோயில்களைக் கட்டக்கூடாது. இன்றைக்கு நடுரோட்டிலேயே ஒரு கல்லைக் கொண்டுவந்து வைத்துவிட்டு, அதற்குப் பிறகு அதற்கு ஒரு வேலியைப் போட்டு, இது ஒரு கோயில் என்று சொல்லி, இன்றைக்கு Traffic-கிற்குக்கூட இடையூறு ஏற்படுத்தக்கூடிய முறையிலே நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதற்கு சட்டமுன்வடிவுப்படி ஏதாவது அங்கீகாரம் இருக்கிறதா? இல்லை.

இன்றைக்கு இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தப்படி 'any other institution established or maintained for a religious purpose..'; ஒரு கல்லைக் கொண்டு வந்து வைத்துவிட்டு,



2003 மே 9] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

4 பேர் இது எங்களுடைய religious institution என்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை இந்தச் சட்டப்படி வருகிறது. இது மிகப் பெரிய ஆபத்தான நிலைமை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வருகின்ற சட்டம், கல் வைப்பதற்கு அல்ல. இப்போது தமிழக அரசால் செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஆலயத்தின் சார்பாக கொண்டுவரப்படுகிற சட்டமே தவிர, தெருக்களிலே யார் வேண்டுமென்றாலும் ஒரு நாள் வைக்கலாம்; அதை எடுத்துவிட்டுச் செல்லலாம். அதற்கும் இந்தச் சட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சருடைய விளக்கத்தோடு மாறுபடுகிறேன். ஏனென்றால், இப்போது போடப்படுகின்ற திருத்தம் என்ன? Religious institution means என்று போட்டுவிட்டு, இரண்டாவது என்ன சொல்கிறார்கள்; 'any other institution established or maintained for a religious purpose'. By whom? My question is 'By whom'? அது இந்தச் சட்டத்திலே தெளிவாக இல்லை. இன்று...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சமய நிறுவனங்கள், திருக்கோயில்கள், மடங்கள். மடங்களைச் சார்ந்த திருக்கோயில் மட்டுமே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ளன. புகழ் வாய்ந்த குருக்கள், சாதுக்கள் ஆகியோரின் நினைவில் ஏற்படுத்தப்பட்ட சமாதிகள், பிருந்தாவனம் போன்றவை துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவர இந்தச் சட்டத்திருத்தத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களுக்கு பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் உள்ளனர். மிக அதிக அளவில் சொத்துக்கள் தானமாக இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு தனியாரால் பயன்படுத்தப்படுகின்றன. இதனைச் சரி செய்து, சொத்துக்களை முறையாகப் பயன்படுத்தத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத் திருத்தம் அதுவாக இருக்கலாம்; நோக்கம் அதுவாக

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2003 மே 9

இருக்கலாம். ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விதிகளை misuse பண்ணுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவேதான் நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

'Provided they are instituted in accordance with the laws of the State and complied with the Notifications made out by the Competent Authority.' நான் ஒன்றும் ரோட்டிலே போகக்கூடியவன் சொல்வதைக் கேட்க வேண்டும் என்று சொல்லவில்லை. அதாவது இந்த நாட்டினுடைய அரசு இயற்றுகிற சட்டங்களுக்கும், விதிகளுக்கும் உள்ளிட்ட, ஸ்தாபிக்கப்பட்ட அந்த Institution-களைத்தான் Religious Institution என்று சொல்ல வேண்டுமே தவிர, இந்து மதத்தினுடைய பெயரிலே, அல்லது கிருத்துவ மதத்தினுடைய பெயரிலே, அல்லது முஸ்லிம் மதத்தினுடைய பெயரிலே இப்படிப்பட்ட misuse-கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவேதான் Hindu Religious and Charitable Endowment பற்றியுள்ள திருத்தமானதால்தான், நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்று வேறு இடங்களில் இந்து ஆராதனை ஸ்தாபனங்கள் என்ற பெயரிலே இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. மாவட்ட நிர்வாகமோ, அல்லது மாநில அரசினுடைய ஒப்புதலையோ அல்லது அதனுடைய சம்பந்தமான அங்கீகாரமோ அல்லது அனுமதியோ பெறாமல், இப்படிப்பட்ட ஏற்பாடுகள் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சட்டம் அவற்றையெல்லாம் legalise பண்ணுவதற்கான ஆபத்து உண்டு.

பிற்பகல் 4-55

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். கிருத்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். ஆனால் அங்கே அவர்களெல்லாம் தனியாக ஒவ்வொருவரும் ஆலயம் வைத்திருக்கிறார்கள். அங்கே அந்தப் பகுதியில் உள்ளவர்கள், அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் விழா எடுக்கின்ற நேரத்திலே. அந்தப் பகுதியிலேயிருக்கின்ற மாவட்டத்தினுடைய ஆட்சியாளருடைய அனுமதி அல்லது அங்கேயிருக்கின்ற அதிகாரிகளிடத்திலே அனுமதியைப் பெற்றுத்தான் பல்வேறு இடங்களிலே அப்படிப்பட்ட விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். ஹேமச்சந்திரன் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட மீறல்கள், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரும் போய், என்னுடைய தொகுதியிலே ஆத்தூர் என்ற இடத்திலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டு, அவர்கள் கட்டுப்படுத்தியதற்குப் பிறகுகூட, அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் தகராறு பண்ணினார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் இந்தச் சட்டத்தை, அந்த அளவிற்கு misuse பண்ணுவதற்கான இடமில்லாத அளவிற்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமைச்சர் சட்டமுன்வடிவு 10/2003-ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார். 11-ம், 12-ம் இதுவரை இன்னும் கோரவில்லை. அதிலே இங்கு விவாதத்தினை மாண்புமிகு உறுப்பினர் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது வரும்போது பேசுங்கள். அமைச்சர் அவர்கள் பதில் ஏதும் இப்பொழுது சொல்ல வேண்டுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சமய நிறுவனங்கள், திருக்கோயில் மடங்கள், மடங்களைச் சேர்ந்த திருக்கோயில்கள் மட்டுமே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ளன. புகழ் வாய்ந்த குருக்கள், சாதுக்கள் ஆகியோர் நினைவில் ஏற்படுத்தப்பட்ட சமாதிகள், பிருந்தாவனம் போன்றவை துறை ஆளுகையின்கீழ் கொண்டுவர இந்தச் சட்டத் திருத்தத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களுக்கு பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் உள்ளனர். மிக அதிக அளவில் சொத்துக்கள் இந்த நிறுவனங்களுக்குத் தானமாக

வழங்கப்பட்டு தனியார்களால் பயன்படுத்தப்படுகின்றன. அதனைச் சரிசெய்து சொத்துக்களை முறையாகப் பயன்படுத்தத்தான் இந்தச் சட்டம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் முதலிலே எடுத்துக்கொண்டதை விட்டுவிட்டு, இரண்டாவதாக வரக்கூடிய அந்தச் சட்டத்தை இப்போது குறிப்பிட்டுப் பேசினார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மூன்றையும் சேர்த்து ஒன்றாக எடுத்துக்கொள்வதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பரவாயில்லை. அதனாலே ஒன்றும் இல்லை. திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தால் போதும். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் திருத்தச்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்னும் முடியவில்லை.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக்கோருகிறேன்.

பிற்பகல் 5-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 6. உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கவிருக்கும் விருந்து இரத்து

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 7-00 மணிக்குமேல், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு விருந்து ஒன்று தருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை அவை உறுப்பினர்கள் அறிவார்கள். நல்லுணர்வை, நல்லுறவை, சட்டப் பேரவை உறுப்பினர்களிடையே உருவாக்கும் பரஸ்பர நோக்கோடும், கருத்துகள், கொள்கை மாறுபாடு, அரசியல் கட்சிகளுக்குள் இருந்தாலும்கூட, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குள் இருக்க வேண்டிய நல்லிணக்கம், நல்லுணர்வின் அடிப்படையிலும், —on the basis of establishing cordiality between the Members— இப்படிப்பட்ட விருந்து தேவை என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே தெரிவித்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், இன்று முற்பகல் அப்படிப்பட்ட விருந்து வேண்டாம் என்ற நோக்கோடு ஒரு கருத்தை வெளியிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தவொரு நல்லுணர்வோடு எந்தவொரு நல்உள்ளத்தோடு, எந்தவொரு பரஸ்பர உணர்வு, சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குள் இருக்க வேண்டும் என்ற நோக்கோடு அதை அறிவித்தார்களோ, அதை வேண்டாம் என்ற முறையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இந்த நிலையில் இந்த விருந்து இன்று வேண்டாம் என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அந்த விருந்து இன்று இரத்துச் செய்யப்படுகிறது என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும்...(குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** With due respect to the Hon. Chief Minister, எந்த உணர்வோடு இது ஏற்பாடு செய்யப்பட்டதோ, அதே உணர்வோடுதான் நானும் அந்தக் கோரிக்கையை வைத்தேன் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.





## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண 11/2003). மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2003)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு) எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாங்கள் இங்கே நடைபெறுகின்ற விவாதங்களிலே பங்கேற்பதை ஆளுங்கட்சியினர் விரும்புவதில்லை. தாங்கள் மட்டுமே அவையிலே பேசி, அதை அனைவரும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., இது பாதியிலே நிற்கிறது. முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

---

@ 7-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்லிவிடுகிறேன். நான் முடித்துவிடுகிறேன். இது ஒன்றுமில்லை. நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவு பாதியிலே நிற்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்) (குறுக்கீடு) பாதியிலே நிற்கிறது; அப்புறம் எடுத்துக்கொள்ளலாம்.

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## பிரிவு 2

பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள், தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

In Clause 2, ADD the following words after the Sub-sections (i) and (ii):

"Provided they are instituted in accordance with the laws of the State and complied with the Notifications made out by the Competent Authority." என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது பேச வேண்டுமா? (குறுக்கீடு)





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இந்தச் சட்டமுன்வடிவு முடியட்டும். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை, அதைத்தான் நான் சொல்கிறேன். நான் பேசப் போவதில்லை என்பதைத்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவு முடியட்டும். பாதியிலே நிற்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் பேசப் போவதில்லை என்பதை நான் சொல்லப் போகிறேன். வேறு ஒன்றும் இல்லை. பேசப் போவதில்லை. இந்தச் சபையிலே, தீர்மானத்திலே ... (குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தேவையில்லாத சில கருத்துகளை இங்கே தெரிவிக்கிறார். பொத்தாம் பொதுவாக எதிர்க்கட்சியினர், இந்த அவையில் பேசுவதை ஆளுங்கட்சியினர் விரும்புவதில்லை என்றார். ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியினர் பேசுவதை விரும்பவில்லை என்று எப்போது சொன்னார்கள்? எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அவையில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அதன்படி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு அளித்து வருகிறார். இன்னும் சொல்லப்போனால், வரலாற்றிலேயே இதுவரை இல்லாத வகையில், ஆளுங்கட்சியினருக்குப் போதுமான, தேவையான வாய்ப்புகளைத் தராமல், ஆளுங்கட்சியினருக்குத் தரவேண்டிய வாய்ப்புகளையெல்லாம், தரவேண்டிய நேரத்தையெல்லாம் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுத்து வருகிறார். நாங்களும் அதைச் சகித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்தக் கூட்டத்தொடரில் பெரும்பாலான நாட்களில், வீணான இத்தகைய ஒரு வம்புச் சண்டைக்கு, ஆளுங்கட்சியை இழுப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வம்புச் சண்டை என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். உள்ளபடியே அப்படிப்பட்ட வார்த்தைகளை அவருடைய வாயிலிருந்து நான் எதிர்பார்க்கவில்லை. *(குறுக்கீடுகள்)* நாங்கள் பங்கேற்பதை விரும்பவில்லை என்பது யதார்த்தமான உண்மை. நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம்; யதார்த்தமான உண்மை. ஆளும் கட்சியினர், நீங்கள் விரும்புவது இல்லை. நீங்கள் பேசுவதை நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. வேறு யாருமே பேசுவதை விரும்புவதில்லை. அவர் ஒரு Super Constitutional Authority என்று தன்னைத் தானே நினைத்துக் கொண்டிருக்கிறாரா என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதல் நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சபாநாயகர் பேசினாலும் குறுக்கிடுகிறார்; முதலமைச்சர் பேசினாலும் குறுக்கிடுகிறார்; அமைச்சர்கள் பேசினாலும் குறுக்கிடுகிறார்; ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசினாலும் குறுக்கிடுகிறார்; அவருடைய கட்சி உறுப்பினர்கள் பேசினாலும் குறுக்கிடுகிறார்; தானே இந்த அவையின் பெரும்பாலான நேரத்தை ஆக்கிரமித்துக்கொள்ளலாம் என்று எந்த விதியின்கீழ் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கருதுகிறார் என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சென்டன்ஸிலே முடித்துவிடுகிறேன். *(குறுக்கீடு)* ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிறேன். **என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திரு. எஸ்.ஆர்.பி. சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஹேமச்சந்திரன் தன் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த amendment மீது பேச விரும்புகிறேன். தங்களுடைய அனுமதி தேவை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தம் வலியுறுத்தப்படாமல் இருக்கிறபோது எப்படிப் பேச முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ராஜா, அடுத்ததில் பேசுங்கள்.

**திரு. எச். ராஜா:** Bill-ல்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததில் பேசுங்கள்; Bill-ல் பேசலாம்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவிலே, சமய நிறுவனங்கள் என்றால், ஒரு மடம், கோயில் அல்லது திட்டவட்டமான அறநிலைக் கொடை எனப் பொருள்படும்; மற்றும் அது ஒரு சமாதி, பிருந்தாவனம் அல்லது சமய நோக்கம் ஒன்றிற்காக நிறுவப்பட்டு பேணி வரப்படும் பிற நிறுவனம் எதனையும் உள்ளடக்கும் என்று இந்தத் திருத்தத்திலே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அதாவது இந்தத் திருத்தத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டாம்; வாபஸ் செய்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கோயில்கள் என்பது பரார்த்தமானது. அதில் பொதுமக்கள், பக்தர்கள் போய் வழிபடுவதற்காக இருப்பது கோயில்கள். ஆனால் சமாதி, பிருந்தாவனம் ஆகியவை பொதுமக்களுக்கான விஷயமே அல்ல. ஒரு குருமாரையோ அல்லது ஒரு சுவாமியையோ— அவருடைய பக்தர்கள் மாத்திரம் வழிபடுபவர்கள் சீடர்கள்; அவரை— தங்களுடைய ஆத்ம குருவாக ஏற்றுக்கொண்ட ஒரு சிலர் மாத்திரம்தான் சமாதி அல்லது பிருந்தாவனத்தை ஏற்படுத்தி அதிலே அவர்கள்

[திரு. எச். ராஜா] [2003 மே 9

வழிபாடு நடத்துகிறார்கள். ஏற்கெனவே இந்துக்களினுடைய வழிபாட்டுத் தலங்கள், இந்து அறநிலையத் துறையின் மூலமாக இருப்பதையே சான்றோர்கள், ஆனறோர்கள் அடங்கிய தனித்து இயங்கும் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்பது பாரதிய ஜனதா கட்சியின் கோரிக்கையாக இருந்து வந்திருக்கிறது. இப்போது இருக்கின்ற கோயில்களோடு சமாதியையும் பிருந்தாவனத்தையும்கூட அரசாங்கமே எடுத்துக்கொள்வது என்பது—ஏற்கெனவே இந்துக்கள் அவரவர்களுடைய குருமார்களை அவர்கள் வழிபடுவதற்காக—அது பரார்த்தமானது அல்ல; அவர்கள் ஆன்மார்த்தமாகச் செய்து கொள்கின்ற விஷயம். ஆகவே இந்து அறநிலையத் துறை சட்டத்தின்கீழ் கொண்டுவரக் கூடாது என்பது பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆணித்தரமான கருத்து. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தினை, உணர்வுகளை ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டத் திருத்தத்தை அரசாங்கம் வாபஸ் செய்து கொள்ள வேண்டுமென பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமாதி என்பது ஓர் உடலை அடக்கம் செய்யும் இடம். பிருந்தாவனம் என்பது நினைவிடமாகக் கட்டப்பட்ட ஒரு மண்டபம். இராகவேந்திர சுவாமிகளை அடக்கம் செய்த இடம் கருநாடக மாநிலம். மந்த்ராலயம் என்ற இடம். ஆனால் அவருடைய நினைவிடங்கள் இன்றைக்குப் பல்வேறு நகரங்களில் அமைந்துள்ளன. சென்னை, திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோயில் போன்ற இப்படிப்பட்ட பல இடங்களிலே இருக்கின்றன. அதைப்போலவே பல இடங்களில் இப்படி 27 ஏக்கர், 50 ஏக்கர் இடங்களை வைத்துக்கொண்டு, இன்றைக்கு மடம் என்று, சமாதி என்று சொல்லியும், பிருந்தாவனம் என்று சொல்லியும் அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் இன்றைக்கு அரசாங்கத்தினுடைய கட்டுக்கோப்பில் இருந்தால்தான் தவறுகள் நடக்காமல் இருக்கும் என்ற அடிப்படையிலேதான் இந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.



2003 மே 9] [பேரவைத் தலைவர்]

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2003 மே 9

**(ஈ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2003), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2003) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 7-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2003 மே 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2003) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2003 மே 9

### (உ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2003),* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையிலே எந்தக் கருத்துகளையும் சொல்லாமல் பாட்டாளி மக்கள் கட்சி அமைதி காக்கிறது என்ற செய்தியைச் சொல்லி அமர்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையிலே என்று முற்பகல் நடைபெற்ற கூட்டத்தின்போதும் மாண்புமிகு மணி தெரிவித்தார். இப்போதும் அதே கருத்தைத் தெரிவிக்கிறார். அப்படி என்ன சூழ்நிலை இங்கே நிலவுகிறது என்பதைத் தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிற நேரத்திலே அவர் ஒரு கருத்தைச் சொன்னார். அவர்மீது குற்றச்சாட்டு சொல்வதைப்போல வீண் வம்புச் சண்டைக்கு இழுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. அதைப்போல மற்றவர்கள் யாரும் பேசி அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகக் கூடாது, அமைதி காக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*@8-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.*



2003 மே 9]

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் அவைக்கு மனசாட்சியை மீறி, உண்மைக்கு மாறான ஒரு தகவலைச் சொன்னார். அதாவது, பேசுவதற்கு வாய்ப்புத் தருவது இல்லை, ஆளுங்கட்சியே பேசுகிற நேரத்தை எடுத்துக்கொள்கிறது என்று சொன்னார். உண்மை நிலையில் அந்தப் பொருளோடு சொன்னார். ஆனால் எஸ்.ஆர்.பி. அவர்கள்தான் அதிகப்படியான நேரம் பேசுகிறார்; அவர் பேசுகிறபோது ஆளுங்கட்சி அமைச்சர்கள்கூடக் குறுக்கிட முடியவில்லை. அப்படி ஒருவேளை நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொன்னால், எங்கள்மீது அவர் குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அதற்குப் பதில் சொல்கிற உரிமையைக்கூட எங்களுக்குத் தராமல் கோபிக்கிறார்; வேகமாகப் பேசுகிறார்; இதை நீங்கள் அவையிலே பார்த்திருக்கலாம். இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எஸ்.ஆர்.பி. அவர்களின் பேச்சுரிமை இந்த அவையைப் பொறுத்தவரைக்கும் எந்த நேரத்திலும் அது பறிக்கப்படவில்லை. மாறாக, அமைச்சர்கள் பேசுவதற்குக்கூட அவர் முட்டுக்கட்டையாக இருந்து, இடம் கொடுக்காமல் இருந்துகொண்டு வருவதுதான் நடைமுறை உண்மையாக நீங்கள் அவையிலே பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். இதைத்தான் தெளிவுபடுத்தி இருக்கிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை மாண்புமிகு திரு. மணி சொல்வதை இங்கே ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு முன்னால் திருமதி யசோதா அவர்கள் பேசவில்லையா? குறுக்கீடுகள் இருந்தனவா? மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் பேசவில்லையா? குறுக்கீடுகள் இருந்தனவா? மாண்புமிகு திரு. ராஜா அவர்கள் பேசவில்லையா? குறுக்கீடுகள் இருந்தனவா? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். வேண்டுமென்றே திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், திரு. ஜி.கே. மணி அவர்களும், ஏதோ பேசிவைத்துக்கொண்டு, இந்த அரசின்மீது, மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது, என்மீது, ஏதோ பழி சுமத்த வேண்டுமென்று திட்டம் போட்டு இங்கே வந்ததுபோல் தெரிகிறது. (குறுக்கீடு)

*பிற்பகல் 5-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, இல்லை, கொஞ்சம் இருங்கள். ஆளும்கட்சி உறுப்பினர்கள் மட்டுமே பேச அனுமதிக்கப்படுகிறார்கள்; (குறுக்கீடு) உட்காருங்கள் மணி. (குறுக்கீடு)

மணி, உட்காருங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மட்டுமே பேச அனுமதிக்கப்படுகிறார்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கான வாய்ப்பே மறுக்கப்படுகிறது என்று எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்ன குற்றச்சாட்டை நீங்களும் ஏற்றுக்கொள்கிறீர்களா? (குறுக்கீடு) அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? (குறுக்கீடு) எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பேசுவதற்கு அனுமதிக்கவே இல்லை...(குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அருள்கூர்ந்து நான் சொல்லாத சொல்லை எல்லாம் சொல்லாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொன்னீர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பேயில்லை ... (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலேயே பங்கேற்கவில்லை என்று சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். நான் விவாதத்திலே பங்கேற்க விரும்பவில்லை. அவர்கள் சொன்னது, நீங்கள் சொன்னது மாதிரி நான் எதுவும் சொல்லவில்லை. நீங்களாகவே, நான் சொன்னதாக ஏதேதோ சொற்களை எல்லாம் சொல்கிறீர்கள். நான் அந்த மாதிரி சொற்களை எல்லாம் பயன்படுத்தவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. ஆகட்டும், மாண்புமிகு ஜி.கே. மணி ஆகட்டும், நாங்கள் இந்த விவாதத்தில் பங்கேற்க விரும்பவில்லை என்று சொல்லி, அதோடு நிறுத்திக்கொண்டால் பரவாயில்லை. ஆனால் நாங்கள் பேசுவதை ஆளுங்கட்சியினர் விரும்புவதில்லை, எதிர்க்கட்சியினர் பேசுவதையே ஆளுங்கட்சியினர் விரும்புவதில்லை, இதை முதலமைச்சரும் விரும்புவதில்லை என இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை எல்லாம் சொன்னால் நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரே ஒரு கருத்து. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல சூழ்நிலையிலே இந்தச் சபையின் நடவடிக்கைகள் நாளையோடு நிறைவுபெற வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்; பொதுவாக கம்யூனிஸ்ட் கட்சியினர் விரும்புகிறார்கள். வணக்கத்திற்குரிய எஸ்.ஆர்.பி. அவர்களையும், ஜி.கே. மணி அவர்களையும், மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர்களையும் கேட்டுக்கொள்வது, இந்த விவாதத்தை இதோடு



தயவுசெய்து விட்டுவிட்டு எஞ்சியுள்ள காரியங்களை சுமுகமாக நடத்திக்கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் அவர்கள்மீது, முதலமைச்சர் அவர்கள்மீது அல்லது ஆளுங்கட்சி அமைச்சர்கள்மீது இதுவரையிலே ஏதோ திட்டமிட்டுப் பேசியதைப்போல நம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் இதுவரையிலே முதலமைச்சர் மீதோ, அமைச்சர்கள்மீதோ என்றைக்காவது குறை சொல்லியிருக்கின்றோமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய சூழ்நிலையில் என்று சொன்னீர்களே, இன்றைக்கு என்ன சூழ்நிலை என்று கேட்கிறேன். இன்றைய சூழ்நிலையிலே என்று சொன்னீர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல திருமதி யசோதா பேசினார்; ஹேமச்சந்திரன் பேசினார்; ராஜா பேசினார். இன்றைய சூழ்நிலை என்ன என்று கேட்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, என்றைக்காவது தலைவர்மீது குற்றச்சாட்டு சொல்லி அல்லது முதலமைச்சர் மேலே, அமைச்சர்கள் மேலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே குற்றச்சாட்டு சுமத்தி என்றைக்காவது பேசியிருக்கிறோமா என்று சொல்லுங்கள். அப்புறம் முதலமைச்சர் எங்கள்மீது அபாண்டமாகச் சொல்வது மாதிரியல்லவா இருக்கிறது. அப்படிச் சொல்வது வருத்தமாக இருக்கிறதல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இன்றைக்கு உங்களுக்கு ஏற்பட்ட மன இறுக்கத்திற்கு என்ன காரணம் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். பரிகாரம் தேடலாம். இன்றைக்கு நீங்கள் இவ்வளவு வேதனைப்படக்கூடிய அளவு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. எல்லா உறுப்பினர்களும்—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது சட்டமுன்வடிவுகள். சட்டமுன்வடிவுகளிலே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பே கிடையாது. திருமதி யசோதா பேசினார், திரு. ஹேமச்சந்திரன் பேசினார். திரு. ராஜா பேசினார். ஆகவே கருணாகரனுடைய வேண்டுகோள் நம்முடைய ஜி.கே. மணி அவர்களுக்கும், எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும்தான் பொருந்தும்

[பேரவைத் தலைவர்] [2003 மே 9

என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து கருணாகரன் அவர்கள் கோவூர் கிழாரைப்போல அவர்களிடத்திலே பேசி முடிவு செய்யுங்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.



2003 மே 9]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 13/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊ) தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2003), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

---

@8-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது பேசுகின்றீர்களா?

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 5-20

## பிரிவு 3

பிரிவு 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், தம் திருத்தங்களை முன்மொழியலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்திலே பங்கேற்கவில்லை. அமைதி காக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தம் முன்மொழியப் பெறாததால், அவையின் அனுமதியுடன் திருத்தம் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. (குறுக்கீடு)



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Permanency and Confirment Act-ல் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் இன்றைக்கு உயிரில்லாத ஒரு சட்டம். Confirment and Permanency Act-ஐ எந்த நிருவாகமும் மதிப்பதுமில்லை; நடைமுறைப்படுத்துவதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய திருத்தம் திரும்பப் பெறப்பட்டுவிட்டது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அது திரும்பப் பெறப்பட்டுவிட்டாலும் நான் Act-ல் பேசுகிறேன். Bill-ல் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது ஒரு தொழில் ஸ்தாபனத்தில் 24 மாதங்கள்—480 நாட்கள்—வேலை செய்து இருந்தால், அவரை நிரந்தரப்படுத்த வேண்டுமென்பது சட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தச் சட்டமுன்வடிவு இல்லை. எல்லோரும் இன்றைக்குக் குழம்பிப் போய்விட்டீர்கள் போல் இருக்கிறது.

பிரிவு 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (எ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2003) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2003) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

(@)28-4-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. Confirment and Permanency Act என்பது மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம். அந்தச் சட்டப்படி, 24 மாதங்களில், 480 நாட்கள் வேலை செய்திருக்கிற தொழிலாளியை நிரந்தரப்படுத்த வேண்டும். ஆனால் எந்த ஸ்தாபனமும் தொழிலாளியை நிரந்தரப்படுத்துவதில்லை. இதற்கு முன்னாலே போக்குவரத்துக் கழகங்களிலும், மின்சார வாரியத்திலும் Industrial Disputes Act-லே 240 நாட்கள் வேலை செய்திருக்கிற தொழிலாளர்களுக்கு, நிரந்தரத் தொழிலாளி என்ற அடிப்படையில், எல்லா உரிமங்களும் கொடுக்க வேண்டுமென்ற ஷரத்தின் அடிப்படையில், போக்குவரத்துக் கழகங்களில், மின்சார வாரியத்தில் தொழிலாளர்களை நடத்தி வந்தார்கள். இப்போது அவர்களும் நடத்துவதில்லை. அது கிடக்கட்டும். நான் அந்த விவாதத்துக்குள் வரவில்லை. இந்தச் சட்டத்தில் அப்படி ஏதேனும் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு நிர்வாகம் மறுக்குமேயானால், அது சரியான நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு ஒரு வகை செய்திருந்த சட்டத்தில், இப்பொழுது நிருவாகத்திற்கு சலுகை காட்டக்கூடிய முறையில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலில் அவர்கள் முதல் தடவையாக ஒரு contravention ஏற்படுத்தினால், 500/- ரூபாய் அவர்களுக்கு fine. அதற்கடுத்து second offence-க்கு வந்தால், அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் fine. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு Offence concurrent-ஆகச் செய்யப்படும் வரை, சிறையில் அடைப்பதற்கான திருத்தம்தான் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே உள்ள திருத்தத்தைப் போடுவதற்குப் பதிலாக, ஏற்கெனவே இருந்த தண்டனையைக் குறைக்கக்கூடிய முறையில் இந்த அரசு ஏன் தனியார் அல்லது தொழில் நிறுவனங்களுக்கு, அதுவும் குறிப்பாக தனியார் முதலாளிகளுக்கு சலுகை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 5-25

ஒரு ஸ்தாபனத்தினுடைய contended worker is the asset of the Industry. அந்த முறையிலே, தொழிலாளர்களைப் பார்ப்பதற்குப் பதிலாக, இன்றைக்கு எட்டு மணி நேர வேலை என்பது எல்லாம் போய், 13 மணி நேரம், 14 மணி நோம் வேலையை வாங்குகிற நிலைமை ஒரு பக்கத்திலே உள்ளது. அதற்கு மேலாக 10 ஆண்டுகள் — இங்கே மின்சாரத் துறை சம்பந்தமாகப் பேசப்படுகிற நேரத்திலே மாண்புமிகு அமைச்சர்கூட மறைமுகமாக ஒத்துக்கொண்டார்—பல வருடங்களாக அங்கே தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று. ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்துமபடியாக கொண்டுவரப்படவில்லை. ஆனால் அந்த முறையிலே உள்ள நிர்வாகங்களுக்கு என்ன முறையிலே தண்டனை கொடுக்கப்பட வேண்டுமோ அதைக் கொடுப்பதிலேயிருந்து அவர்களைக் காப்பாற்றக்கூடிய முறையிலே, அவர்களுக்குக் காருண்யம் காட்டக்கூடிய முறையிலே, கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட விதியினுடைய மூன்றாவது பிரிவு, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்களுக்கு பணி புரிந்தால், ஒரு தொழிலாளியை நிரந்தரத் தொழிலாளியாக அந்தப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறது. இதிலே பிரிவு 6 Penalties. இந்த மூன்றாவது பிரிவு என்று சொல்லக்கூடிய இந்தப் பிரிவை மீறினால், என்னென்ன தண்டனைகள் வழங்கலாம் என்று பிரிவு 6-லே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவு 6-ல், இந்தச் சட்டத்தின்கீழ் சில விதிகள் வகுக்கப்படுகின்றன. அந்தப் பிரிவு 3-ஐ மீறினால் என்ன தண்டனை என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, விதிகளை மீறினால் என்ன தண்டனை என்று சட்டத்திலே சொல்லப்படவில்லை. பெரும்பாலும் விதிகளின் அடிப்படையிலேதான்— இப்போது Inspector of Factories, Inspector of Plantations இவர்கள் எல்லாம் இந்தப் பிரிவுகளைச் செயல்படுத்துகிற அதிகாரிகள்—ஒரு





தொழிலாளி 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளி, என்னை நிரந்தரப்படுத்துவதற்குரிய அந்தப் பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்று Inspector of Factories-ஐ அணுகி அவர் புகார் கொடுக்கிறபோது, அந்தப் புகாரை அவர் வாங்கிக்கொண்டு, அந்த Register-ல் பதிவு செய்திருக்கிறதா இல்லையா என்பதைப் போய்ப் பார்த்து, அப்படிப் பதிவு செய்யவில்லை என்றால், நீங்கள் பதிவு செய்யுங்கள் என்று அவர் உத்தரவு போடுகிறார். உத்தரவு போடுவதை ஏற்றுக் கொண்டு, அவர்கள் பதிவு செய்து விடுகிறார்கள். அப்படிப் பதிவு செய்யாமல் அவர்கள் மீறுவார்களானால், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. ஏற்கெனவே மூன்றாவது பிரிவை மீறினால் அவர்களுக்கு தண்டனை என்று இருக்கிறது. ஆனால் விதிகளை மீறினால் தண்டனை அளிப்பதற்கு வகை இல்லை. அதற்குத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோமேதவிர, மாண்புமிகு உறுப்பினர் ஹேமசசந்திரன் அவர்கள் சொல்வதைப்போல, employer-க்கு சாதகமாக இந்தச் சட்டம் இல்லை. தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக, முழுமையாகப் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**பிரிவு-2**

பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

[2003 மே 9

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் விவாதத்தில் பங்கேற்கவில்லை. அமைதி காக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தம் முன்மொழியப்பெறாததால், பேரவையின் அனுமதியுடன் திருத்தம் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2003 மே 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுந்து "நாங்கள் விவாதத்தில் பங்கேற்க விரும்பவில்லை" என்று சொல்வதே விவாதத்தில் பங்கேற்பதுதான். ஒருவகையிலே நன்றி.

### (ஏ) வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்முடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2003), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2003 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2003) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

@30-4-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 5-30

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு வக்ஃப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2003) மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2003) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

@ 8-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 21 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 21 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஒ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2003), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், பேசுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில் அரசானது பெட்ரோல், அதிவேக டீசல், வலுவற்ற டீசல் எண்ணெய், உயர்தரமான வெள்ளை நிற மண்ணெண்ணெய், சலவை இயந்திரங்கள் ஆகியவற்றின்மீது விற்பனை வரியை உயர்த்துவதெனவும் மற்றும் தொலைபேசிகளின் மீதும், செல்லுமிடத் தொலைபேசிகள் மீதும், Bharath Sanchar Nigam Limited மற்றும் பிற தனியார் தொலைபேசி நிறுவனங்கள் வசூலிக்கும் தொலைபேசி வாடகைகள் மீதும் விற்பனை வரியை விதிப்பதென அறிவித்திருந்தபோதே, நாங்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். அதே கருத்தினை இப்போதும் தெரிவித்து, என்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 8-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2003 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோலைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்த 29.5 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரள மாநிலத்தில் 44 சதவிகிதமும், ஆந்திர மாநிலத்திலே 30.55 விழுக்காடும் இப்போது இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். அதேபோன்று அதிவேக டீசல் எண்ணெய் 23.1 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. அண்டையில் இருக்கிற கேரள மாநிலத்தினுடைய விழுக்காடு 40. மகாராஷ்டிரா மாநிலத்திலே 34 விழுக்காடு இருக்கிறது. அதுமட்டுமல்ல. ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் என்ற அளவிலே மகாராஷ்டிரா மாநிலத்திலே இன்று வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் வலுவற்ற டீசல் எண்ணெயைப் பொறுத்தவரையில், 21.9 விழுக்காடு என்றிருந்ததை 25 விழுக்காடாக இப்போது வரி உயர்த்தப்பட்டு இருக்கிறது. இதிலும் மத்திய அரசு இன்று ஒவ்வொரு லிட்டருக்கும் 1 ரூபாய் என்று இருந்ததை 1.10 சதவிகிதம் என்று உயர்த்தியபோதும், தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், குறைவான அளவுதான் வரியை உயர்த்தி இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறேன். அதுமட்டுமல்லாமல் சலவை இயந்திரத்தில் Washing Machine-ல் 12 சதவீதம் என்பதை 12.5 சதவீதம் என்று தான் தமிழக அரசு வணிக வரியை உயர்த்தியிருக்கிறது. குஜராத் மாநிலத்திலே 17 சதவீதம், மகாராஷ்டிரா மாநிலத்திலே 13 சதவீதம், பாண்டிச்சேரி மாநிலத்திலே 12 சதவீதம், கர்நாடக மாநிலத்திலே 12 சதவீதம், ஆந்திர மாநிலத்திலே 12 சதவீதமாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக் காண்பித்து, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமாய் கோருகிறேன்.

பிற்பகல் 5-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2003 மே 9] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (எ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான 15 நாள் கணினிப் பயிற்சி. முதலில் 14-5-2003 வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது சட்டமன்றக் கூட்டத்தொடர் 10-5-2003 அன்றே முடிவடைய உள்ளதால, சட்டமன்ற உறுபபினர்கள் தங்கள் எஞ்சிய மூன்று நாள் பயிறசியை, மொத்தம் 6 மணி நேரம், சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்த பிறகும் எடுத்துக்கொள்ள தற்போது வசதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் எஞ்சிய மூன்று நாள் பயிற்சியை வரும் 11-5-2003 முதல் 13-5-2003 வரை, அதாவது ஞாயிறு, திங்கள் செவ்வாய் நாட்களில், அவர்கள் தற்போது பயிற்சி பெறும் இடத்திலேயே. தினம் 2 மணி நேரம் என்றோ அல்லது ஒரே நாளில் 6 மணி நேரம் தொடர்ந்தோ அல்லது காலை 3 மணி நேரம் மற்றும் மாலை 3 மணி நேரம் என்று இடைவெளி விட்டோ எடுத்துக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்றைக்கு தெரிவித்த கருத்துக்காக ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரில் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 25 பேர் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய நேரம் 8 மணி 41 நிமிடம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் 1-4-2003-லேயிருந்து ஒரு மணி 18 மணித்துளிகள் பேசியிருக்கிறார்கள். ஆகவே வாய்ப்புகள் மறுக்கப்பட்டன என்று சொல்வது உண்மைக்கு மாறுபட்டது என்பதைக் கொஞ்சம் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10-5-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.





***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 10-5-2003 (சனிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

10-5-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (10-5-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

111. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கணக்கின் மீதான தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ்)

112. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கடலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2003 மே 9

113. 2001-2002 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

114. 2001-2002 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

115. 2001-2002 ஆம் ஆண்டிற்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

116. 2001-2002 ஆம் ஆண்டிற்கான அரியலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

117. 2001-2002 ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

357. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004, (தமிழ்)

358. மானியக் கோரிக்கை எண் 15 - நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

359. மானியக் கோரிக்கை எண் 35 - திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004, (தமிழ், ஆங்கிலம்)

360. மானியக் கோரிக்கை எண் 48 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).



# இணைப்பு I

(108 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண்—15—நிதித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

ஒவ்வோர் ஆண்டும், மாநிலத்தின் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து சட்டமன்றப் பேரவை முன் தாக்கல் செய்யும் பணியில் நிதித் துறை மிக முக்கிய பங்காற்றி வருகிறது. மாநில கருவூலத்திற்கான பொறுப்பை வகித்து வரும் நிதித் துறை, வரவு மற்றும் செலவு ஆகியவற்றை சமநிலைப்படுத்த வேண்டிய மிகக்கடினமான பொறுப்பை வகிப்பதோடு, கடன்கள் குறித்த கட்டுப்பாடு நிறைவு செய்யப்படுகிறதா என்பதையும் உறுதி செய்து வருகிறது. மாநிலத்தின் நிதி நிலைமை, 1998-99 ஆம் ஆண்டிலிருந்து வெகுவாக சரிந்து வந்துள்ளது. சம்பளம், ஓய்வூதியப் பொறுப்பு மற்றும் கடன் திருப்பி செலுத்தல் பணி ஆகியவை குறித்த செலவினம் முன்பில்லாத அளவிற்கு அதிகரித்ததால், இந்நிலைமை ஏற்பட்டது. மாநில அரசின் நிதி நிலைமையைச் சீர் செய்ய, மிக அசாதாரண முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதற்கான சீர்திருத்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளன. செலவினங்களைக் கட்டுப்படுத்தியும், வருவாய்ப் பெருக்கத்திற்கான வழிவகைகளைக் கண்டறிந்தும், வரவு செலவினை சமநிலைப்படுத்த வேண்டிய மிக முக்கிய பொறுப்பை நிதித் துறை பெற்றுள்ளது. இதற்காக இரண்டு குழுக்கள், அதாவது "பணியாளர் மற்றும் செலவு சீராய்வுக் குழு" மற்றும் "வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம்" அமைக்கப்பட்டுள்ளன. விவேகமான நிதி மேலாண்மை கொள்கைதான் அரசின் முக்கியமான நோக்கமாக இருப்பதால், இதனை அனைத்து துறைகளும் உணர்ந்து அந்தந்தத் துறைகளே நிதி சீர்திருத்தத்தைச் செய்வதன் மூலம் இதனை எய்த முடியும். நிதி சீர்திருத்தத்தை அனைத்துத் துறைகளும் பின்பற்ற வேண்டியுள்ளது.

[2003 மே 9

2. நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கீழ்க்கண்ட 8 துறைத் தலைவர் அலுவலகங்கள் செயல்படுகின்றன:—

(1) சிறு சேமிப்புத் துறை

(2) பரிசுச் சீட்டுத் துறை

(3) அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை

(4) அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

(5) கருவூலக் கணக்குத் துறை

(6) ஓய்வூதிய இயக்ககம்

(7) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(8) கூட்டுறவுத் தணிக்கைத் துறை

3. இத்துறைகளின் பல்வகையான செயல்பாடுகள் பின்வருமாறு:

**சிறு சேமிப்புத் துறை**

4. சிறு சேமிப்பு, மாநில அரசின் கட்டுமான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், மாநில அரசின் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்கவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இது மாநில அரசின் நிகர சிறு சேமிப்பு வசூல் தொகையின் அடிப்படையில், மத்திய அரசு வழங்கும் கடன் மூலம் சாத்தியமாகிறது. மத்திய அரசு 01-04-2002 முதற்கொண்டு, ஒவ்வொரு மாதமும் மாதந்தோறும் வசூலாகும் நிகர சேமிப்பு வசூலுக்கு சமமான தொகையை கடனாக மாநில அரசுக்கு வழங்கி வருகிறது.

5. அனைத்துத் தாப்பு மக்களுக்கும் ஏற்ற வகையில் பல்வேறு சிறு சேமிப்பு திட்டங்கள் உள்ளன. அவை வருமாறு:—

**(அ) அதிக வருவாய் அளிக்கும் திட்டம்:**

(i) கிஸான் விகாஸ் பத்திரம்

**(ஆ) வருமான வரிச் சலுகை அளிக்கும் திட்டம்:**

(i) தேசிய சேமிப்புப் பத்திரம் VIII-வது வெளியீடு

(ii) 15 ஆண்டு பொதுச் சேம நல நிதி

**(இ) நிரந்தர வருவாய் அளிக்கும் திட்டம்:**

(i) அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம்

(ii) அரசு / பொது நிறுவன ஓய்வு பெற்றவர்களுக்கான முதலீட்டுத் திட்டம்



2003 மே 9]

**(ஈ) நிரந்தர சேமிப்புத் திட்டம்:**

(i) அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம்

**(உ) குறித்த கால வைப்புத் திட்டங்கள்:**

(i) 1 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்பு நிதி

(ii) 2 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்பு நிதி

(iii) 3 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்பு நிதி

(iv) 5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்பு நிதி

6. சிறு சேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை மத்திய அரசு 1-3-2003 முதல் கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்துள்ளது. இவை மத்திய அரசின் திருத்தத்திற்கு உட்பட்டவை:—

| வ. எண் | திட்டம் | வட்டி விகிதங்கள் 01-03-2003 முதல் |
|---|---|---|
| 1. | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் | 8.00% |
| 2. | 1 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு<br>2 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு<br>3 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு<br>5 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.25%<br>6.50%<br>7.25%<br>7.50% |
| 3. | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் | மாதம் ரூ. 10/- வீதம் 5 வருடம்செலுத்தி, முடிவில் ரூ. 728.90 முதிர்வுத் தொகை கிடைக்கும். |
| 4. | தேசிய சேமிப்புப் பத்திரம் VIII-வது வெளியீடு | 8.00% |
| 5. | பொது வருங்கால வைப்பு நிதி | 8.00% |
| 6. | கிஸான் விகாஸ் பத்திரம் | முதலீடு 8 வருடம், 7 மாதங்களில் இரட்டிப்பாகும். |
| 7. | அஞ்சலக சேமிப்புக் கணக்கு | 3.5% |
| 8. | அரசு/பொதுத் துறையில் ஓய்வுபெறும் பணியாளர்களுக்கான வைப்புத் திட்டம். | 7.00% |

[2003 மே 9

## 7. 2002-2003 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை:

2002-2003-ஆம் ஆண்டிற்கு ரூ. 2400/- கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மேற்கண்டவாறு இலக்கு இருக்க, தோராயமாக ரூ. 2700/- கோடி வசூல் செய்யப்பட்டது. இது 2001-2002-ஆம் ஆண்டு நிகர வசூல் தொகையான ரூ. 1854.40 கோடியை விட ரூ. 845.60 கோடி அதிகமாகும். இலவச பரிசுக் கூப்பன் மற்றும் முதலீட்டாளர் ஊக்கத் தொகைத் திட்டம் போன்ற புதிய திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தியதாலும், சிறு சேமிப்புத் துறை, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அச்சு மற்றும் மின்னணு சாதனங்களின் துணை கொண்டு வீடுகள், பள்ளிகளில் தொடர் வைப்புத் திட்டத்திற்கு தகுந்த முறையில் விளம்பரங்கள் செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டதாலும், தொடர் வைப்பீடுகளை ஊக்கப்படுத்துதல், முதலீட்டாளர்களைக் கண்டறிதல், இலக்கு நிர்ணயம் செய்தல், கூடுதல் முகவர்களை நியமனம் செய்தல், போன்ற பணிகளை நிறைவேற்றியதன் மூலமும் இந்த வளர்ச்சியினை எய்த முடிந்துள்ளது.

## 8. சிறு சேமிப்பு முகவர் அமைப்பு:

சிறு சேமிப்பு வசூலில் சிறு சேமிப்பு முகவர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். தற்போது வெவ்வேறு திட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு 3 வகையான முகவாமைப்புகள் உள்ளன. 2002-2003-ஆம் ஆண்டில் சிறு சேமிப்பு வசூலில் சாதனை எய்தியதற்கான காரணம், 4,501 புதிய முகவர்கள் நியமனம் செய்யப்பட்டதேயாகும்.

| வ. எண | முகவர் தனமை | முகவர்கள் நியமிக்கப்பட்ட திட்டங்கள் | ஆண்டு துவக்கத்தில் இருந்த முகவர்கள் எண்ணிக்கை (1-4-2002) | நடப்பாண்டில் நியமனம் செய்யப்பட்ட முகவர்கள் (2002-2003) | 31-3-2003-ல் மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (1) | நிலை முகவர் | கிஸான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் VIII-வது வெளியீடு, அஞ்சலக குறிதத கால வைப்புத் திடடம | 11,659 | 2,133 | 13,792 |
| (2) | மகளிர் முகவர் | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 17,268 | 2,190 | 19,458 |
| (3) | அங்கீகரிக்கப் பட்ட முகவர்கள் | பொது வருங்கால வைபபு நிதி (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்) | 1,891 | 178 | 2,069 |
| | மொத்தம் | | 30,818 | 4,501 | 35,319 |



2003 மே 9]

## 9. முகவர்கள் ஊக்கத் தொகை:

முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்கு கீழ்க்காணும் விவரப்படி ஊக்கத் தொகை பெறுகிறார்கள்:

| வ. எண் | முகவர் வகை | மத்திய அரசால் வழங்கப்படும் தாகுத் தொகை | கூடுதலாக மாநில அரசால் வழங்கப்படும் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | நிலை முகவர் | 0.5% முதல் 1% வரை | 0.5% முதல் 1% வரை | 1% முதல் 2% வரை |
| 2. | மகளிர் முகவர் | 4% | 2% | 6% |
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி | 1% | 1% | 2% |

முகவர்களின் ஊக்கத் தொகை அவர்கள் பணிபுரியும் அஞ்சலகங்களிலேயே அவரவர் கணக்குகளில் வரவு வைக்க எல்லா மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[2003 மே 9

**10. சிறப்புத் திட்டங்கள்**

சிறுசேமிப்பு வசூலை ஊக்குவித்து, அதிகப்படுத்த கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

**(i) வைப்பீட்டாளர்கள், முகவர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு அலுவலர்கள் ஆகியோருக்குப் பரிசுகள் வழங்குதல்:**

சிறுசேமிப்பு வசூலுக்கு வாய்ப்புள்ள அனைவரையும் ஊக்குவித்து இப்பணியில் ஈடுபடச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் சம்பளப்பட்டியல் சேமிப்புக் கணக்கு குழுத் தலைவர்கள், தலைமையாசிரியர்கள், பள்ளி முகவர்கள், முதலீட்டாளர்கள், உள்ளாட்சி அமைப்புகள், முகவர்கள், அஞ்சலக அலுவலர்கள் ஆகியவர்களுக்கு, மாநில அளவிலான பரிசுகளை அரசு அறிவித்துள்ளது. உலகச் சிக்கன நாளான 30-10-2002 அன்று மாநில அளவிலான பரிசுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசு அனுமதி வழங்கிய மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பரிசுகள், ஆணையர், சென்னை மாநகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், மிகச் சிறந்த பலனை அளித்துள்ளதாலும், இது மேலும் அதிக முதலீட்டாளர்களை குறிப்பாக பள்ளி மாணவர்களைத் திரட்ட உதவக்கூடும் என்பதாலும் நடப்பாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**(ii) பயிற்சி:**

இத்திட்டம், சிறுசேமிப்பு முகவர்கள் குறிப்பாக புதியதாக நியமனம் செய்யப்பட்ட முகவர்கள், அஞ்சலக சிறுசேமிப்புத் திட்ட விதிகள், நிதிச்சந்தை உக்திகள் போன்றவற்றை அறிந்துகொள்ள உதவும். அப்போதுதான் அவர்கள், தகுந்த முறைகளைக் கையாண்டு பொதுமக்களை சிறுசேமிப்புத் திட்டத்தில் ஈடுபடுத்த முடியும்.

**(iii) இலவச பரிசுக் கூப்பன் திட்டம்: (01-12-2002 முதல்)**

சிறுசேமிப்பு வசூலினை கடைசி காலாண்டில் அதிகரிக்க, நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்திட சிறு சேமிப்பு முதலீட்டாளர்களுக்கு அரசு ஒரு புதிய திட்டமான "இலவச பரிசுக் கூப்பன் திட்டம்" ஒன்றினை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1-12-2002 முதல் 31-03-2003 வரை குறிப்பிட்ட சிறுசேமிப்புப் பத்திரங்களில் ஒவ்வொரு முறையும் ரூ. 5000/-க்கு மேல் முதலீடு செய்பவர்களுக்கு ஒரு இலவச



2003 மே 9]

பரிசுக் கூப்பன் வழங்கப்படும். ஒரு குலுக்கலுக்கு மொத்தம் 282 பரிசுகள் வீதம் தோராயமாக 25 குலுக்கல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் முதலீட்டாளர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதால் மொத்த நிகர வசூல் உயர்ந்துள்ளது.

**(iv) முதலீட்டாளர் ஊக்கத்தொகை திட்டம்: (01-01-2003 முதல்)**

இத்திட்டமும் 2002-2003 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டிற்கு அறிவிக்கப்பட்ட புதிய திட்டமாகும். குறிப்பிட்ட சிறுசேமிப்புப் பத்திரங்களில் 01-01-2003 முதல் 31-03-2003 முடிய ஒரே நோத்தில் ரூ.10000/-மும் அல்லது அதற்கு மேலும் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு தொடர் வைப்புத் திட்டத்திற்கு 2 சதவீதமும் இதர திட்டங்களுக்கு 1 சதவீதமும் ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்திட்டம், கடைசி காலாண்டில் வசூலை அதிகரிக்க அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**(v) உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத்தொகை திட்டம்:**

சிறுசேமிப்பு வசூலில் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, மாவட்டத்தில் முந்தைய ஆண்டை விட நடப்பு ஆண்டில் மாவட்டங்கள் அதிகமாக ஈட்டும் வசூலின அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் அரசு ஊக்கத்தொகை மானியம் வழங்குகிறது. மாவட்டங்களில் சாதனைக்காக 2002-2003 ஆம் ஆண்டிற்கு, அரசு ரூ. 12 கோடியினை ஒப்பளித்துள்ளது. இந்த நிதி அதற்குரிய மாவட்டங்களுக்கு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கப்படுகிறது. இந்தத் திட்டம் உள்ளாட்சி அமைப்புகளிடையே சிறுசேமிப்பு வசூல் சாதனை மூலம் மானியமாகப் பெற ஒரு ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துகிறது.

**(vi) விளம்பரம்:**

செய்தித்தாள் / மின்னணு சாதனம், வானொலி, தொலைக்காட்சி சேனல்கள், உள்ளூர் தபால் உறைகள், பேருந்து வண்ணப் பலகைகள், துண்டுப் பிரசுரங்கள், ஸ்டிக்கர்ஸ், சுவர் விளம்பரம், விளம்பர ஊர்தி போன்ற சாதனங்கள் மூலம் தீவிர விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கும், சிறுசேமிப்பு வசூலினை அதிகரிக்கவும் உபயோகமாக இருந்தது. விளம்பர நடவடிக்கைகள் 2003-2004 ஆம் ஆண்டிலும் அதிக அளவில் செயல்படுத்தப்படும்.

[2003 மே 9

**11. புதுமையான புதிய முயற்சி நடவடிக்கைகள்:**

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, சிறுசேமிப்பு நிகர வசூலினை அதிகரிக்கவும், சிறுசேமிப்புத் திட்டங்களைக் கண்காணிக்கவும் பின்வரும் நடவடிக்கைகளை சிறுசேமிப்புத் துறை மேற்கொண்டுள்ளது:—

**i) "சேமிப்பு" கணினி மென்பொருள் அறிமுகப்படுத்தல்: (சிறுசேமிப்பு தகவல் அறிதல், திட்டச் செயல்பாட்டு கண்காணிப்பு மற்றும் தகவல் பரிமாற்றம், திட்டம், பயன்கள்)**

சிறுசேமிப்புத் துறை மற்றும் முகவரமைப்புப் பணியினைக் கண்காணிக்கவும், ஒவ்வொரு மாதமும் முகவர் ஊக்கத் தொகை வழங்கவும், சிறுசேமிப்புத் துறை இயக்ககம், தேசிய தகவல் மையத்துடன் இணைந்து "சேமிப்பு" (சிறுசேமிப்பு தகவல் அறிதல், திட்டச் செயல்பாடு கண்காணிப்பு மற்றும் தகவல் பரிமாற்றம், திட்டம், பயன்கள்) எனும் மென்பொருளை உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் சிறுசேமிப்புப் பிரிவில், கணினி நிறுவப்பட்டுள்ளது. மாவட்டங்களின் திட்ட வசூலையும் சிறுசேமிப்பு இயக்கத்தின் முதுகெலும்பாக உள்ள முகவர்களின் செயல்பாட்டினையும் கண்காணிக்க இந்த மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. கணினிமயமாக்கும நடவடிக்கை 2003-2004 ஆம் ஆண்டில் மேலும் தீவிரபபடுத்தபபடும.

**(ii) புது இணைய தளம்**

**www.tnsmallsavings.com மற்றும் முகவர்கள் தகவல் அறியும் முறை:**

இவ்வியக்ககம் உருவாக்கிய www.tnsmallsavings.com என்ற புதிய இணைய தளம் இத்துறையால் உருவாக்கப்பட்ட மென்பொருளோடு இணைக்கப்பட்டுள்ளது. பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள், முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு அரசால் அறிவிக்கப்படும் சிறப்புத் திட்டங்கள், வெவ்வேறு படிவங்கள் ஆகியவற்றின் முக்கிய அம்சங்கள் குறித்த விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முகவர்கள் பணி முதலீட்டாளரைச் சென்றடைய, சிறுசேமிப்பு முகவர் பற்றிய விவரங்கள் அடங்கிய தகவல் தொகுப்பு, சிறுசேமிப்பு இணைய தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகைய தகவல் தொடர்பு சேவை இந்தியாவிலேயே முதல் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்களுக்கு முதலீடு பற்றிய அறிவுரை வழங்குவது உட்பட பல புதுப்பணிகள் இந்த இணைய தளத்தின் வாயிலாக அளிக்க திட்டமிடபபட்டுள்ளது.



2003 மே 9]

**(iii) ஆறு மாவட்டங்களில் கணினியுடன் இணைந்த தொலைபேசி வழி தகவல் பரிமாற்றம் பெறும் வசதி:**

தொலைபேசி வாயிலான தகவல் பரிமாற்ற முறை சிறுசேமிப்புத் திட்டங்கள், சிறுசேமிப்புப் பத்திரங்கள் போன்றவற்றை உடனடியாக அறிய உதவுகிறது. இந்த பொதுத் தகவல் அறியும் முறை முகவர்கள், அவர்கள் முகவரி, தொலைபேசி எண்கள் ஆகிய தகவல்களை வழங்குகிறது. ஏற்கெனவே சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் இயங்கும் இவ்வசதிகள் மேலும் காஞ்சிபுரம், திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டுள்ளன.

12. மேற்கூறிய அனைத்துத் திட்டங்களும் சிறுசேமிப்பு வசூலினை அதிகப்படுத்த உதவியுள்ளன. 2002-2003-ஆம் ஆண்டில் மாநில அரசு சிறுசேமிப்பு வசூலில் சாதனை படைத்துள்ளது.

**பரிசுச் சீட்டு துறை**

13. பொது மக்களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்த நிதியினைத் திரட்டுவது பரிசுச் சீட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் மக்களின் நன்மதிப்பினைப் பெற்றிருந்தது. மற்ற மாநில பரிசுச் சீட்டுகள் ஒளிவுமறைவற்ற நிலையில் இல்லாததினாலும், மக்களை ஏமாற்றி வந்ததினாலும், இம்மாநிலத்தில் பரிசுச் சீட்டு விற்பனையை முறைப்படுத்த, 2002-ஆம் ஆண்டில் விதிகளை அரசு அறிமுகப்படுத்தியது. இந்த விதிகளின்படி, அரசு உள் துறை செயலர் அவர்களின் முறையான ஆணையின்றி எந்த ஒரு பரிசுச் சீட்டும் விற்பனை செய்யப்படக்கூடாது. பிற மாநில அரசுகள், அவர்களின் முகவர்கள் மற்றும் விநியோகிப்பாளர்கள், அவர்களின் பரிசுச் சீட்டு விற்பனையை முறைப்படுத்த அரசுடன் ஒத்துழைக்காமல், மத்திய அரசு சட்டப் பிரிவுகளுக்கும், தமிழ்நாடு பரிசுச் சீட்டு (விதிமுறைகள்) விதிகள் 2002-க்கு முரணாகவும் பரிசுச் சீட்டினை விற்றனர். இதன் விளைவாக பல குடும்பங்கள் குறிப்பாக அன்றாடம் கூலி வேலை செய்து வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் பிரிவினர் இந்த பரிசுச் சீட்டு விற்பனைக்கு இரையாவதுடன் பெரிதும் இழப்புக்குள்ளாயினர். பிற மாநில அரசு நடத்தும் பரிசுச் சீட்டு முகவர்கள் முறைகேடான செயல்களில் விற்பனை செய்து ஏழை எளிய மக்களை ஏமாற்றி வந்ததுடன் சட்டத்திற்குப் புறம்பான வியாபார செயல்பாடுகளில் ஈடுபட்டு அதனால் அதிக அளவில் பணம் ஈட்டி வந்தனர். எனவே மாநில மற்றும் மாநில

மக்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வண்ணம் குறிப்பாக அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினரின் நலனை பாதுகாக்கவும், மாநில அரசுக்கு பரிசுச் சீட்டுகளில் கிடைக்கும் ரூ.50 கோடி அளவுக்குள்ள வருமான இழப்பினையும் பொருட்படுத்தாமல் தமிழக அரசு பரிசுச் சீட்டு உட்பட மற்ற அனைத்து மாநிலங்களால் வசூலிக்கப்பட்டு நடத்தப்படும் மற்றும் ஊக்குவிக்கப்படும் பரிசுச் சீட்டுகளை தமிழக எல்லைக்குள் தடை செய்தது. தமிழ்நாடு அரசு பிறப்பித்த இந்தத் தடை ஆணை செல்திறன் உடையது என சென்னை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியது.

## அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை

14. அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை, நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கி வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் அதன் அலகுகள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போன்ற அரசு சார்புடைய நிறுவனங்களின் மீதான கணக்குகளை தணிக்கை செய்வது இதன் முக்கிய செயல்பாடாகும்.

15. மேலும் அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்தினையும் அரசுத் துறைகளின் உள் தணிக்கையினையும் வேளாண் விரிவாக்க மையங்களின் தணிக்கையினையும் மற்றும் அரசிடமிருந்து மானியம் பெற்றுவரும் நிறுவனங்களின் தணிக்கையினையும் செய்கிறது.

16. அரசு ஊழியர்களுக்கு 1-1-1996-ல் திருத்திய ஊதிய விகிதத்தில் செய்யப்பட்ட ஊதிய நிர்ணயித்தினை, சிறப்பு தணிக்கை செய்ய அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை, பணிக்கப்பட்டு அதன்படி தணிக்கை நடைபெற்று வருகிறது.

17. அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறையால் 2002-2003-ல் தணிக்கை செய்யப்பட்ட பெரிய நிறுவனங்களின் கணக்கு மதிப்பு ரூ. 1719.53 கோடி ஆகும்.



## அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

18. அரசு தகவல் தொகுப்பு விவர மையம், தமிழ்நாடு அரசு நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. மின்னணு தொகுப்பாய்வு சாதனத்தின் மூலம் அரசுத் துறைகளின் நிதித் தொகுப்பு பற்றிய விவரங்களைச் சேகரித்து சீராய்வு செய்திடும் நோக்கிலும், நல்ல முறையில் வரவு-செலவுத் திட்டம் தயாரித்திடவும் வருங்காலத்தில் நிர்வாகத் தகவல் அமைப்பில் மின்னணு செயல்பாட்டு முறை ஒன்றினை ஏற்படுத்தவும், அரசு தகவல் தொகுப்பு விவர மையம் அமைக்கப்பட்டது.

19. அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் செயல்பாடுகள் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றன:—

(i) பள்ளி இறுதி/மேல்நிலைக் கல்வி, மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் தேர்வு முடிவுகளின் தொகுப்புப் பணிகள் நடைபெறுகிறது. 2002 ஆம் ஆண்டில் மேல்நிலை, பத்தாம் வகுப்பு, மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளைச் சார்ந்த 15,91,185 மாணவர்களின் தேர்வு முடிவுகள் மற்றும் அது குறித்த புள்ளிவிவர அறிக்கைகள் குறிப்பிட்ட கால வரம்புக்குள் அச்சடிக்கபபட்டு வழங்கப்பட்டன.

(ii) தொழில் நுட்பவியல் பட்டப்படிப்பு மற்றும் தொழிற்சாலை உயிரியல் தொழில் நுட்பவியல் பட்டப்படிப்புக்கான நுழைவுத் தேர்வு முடிவுகள் தொகுத்தல்.

(iii) செயல்திறன் அறிதல், தேர்வு முடிவு தொகுத்தல்.

(iv) சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு முடிவுகள் தொகுத்தல்.

(v) சீருடைப் பணியாளர் தேர்வு முடிவுகள் தொகுத்தல்.

(vi) மாநில நிதி ஆணையப் பணிகள் தொகுத்தல்.

(vii) ஆசிரியர் பட்டயப்படிப்பு பயிற்சிக்கான தேர்வு முடிவுகள் தொகுத்தல்.

(viii) ஊராட்சி ஒன்றிய அரசு நிதிஉதவி பெறும் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சேமநல வைப்பு நிதிக் கணக்குகளைப் பராமரித்தல்.

[2003 மே 9

20. மேலே குறிப்பிட்டுள்ளதைத் தவிர்த்து தொழில்நுட்பத் தேர்வு முடிவுகளை கணிப்பானில் தொகுக்க அரசு பணித்ததையடுத்து 26,420 மாணவர்களுக்குரிய தேர்வுப்பணி கணிப்பானில் தொகுக்கப்பட்டுள்ளது. மேலும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு மேலநிலைக்கல்வி மற்றும் ஆங்கிலோ இந்தியன் மெட்ரிகுலேஷன் தேர்வில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தேர்ச்சி பெறாத மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு துணைத் தேர்வு நடத்தப்படுவதால் அதன் முடிவுகள் சரியாக மந்தண முறையில் குறுகிய காலத்தில் தொகுத்து வெளியிடப்பட்டன.

21. அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் தகவல் களஞ்சியத்தை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. தேசிய தகவல் மையத்தின் (NIC) துணையுடன் வானொலி அதிர்வலைகள் இணைப்பு வசதியையும் இம்மையம் பெறவுள்ளது. இவ்வசதியினால் இதர துறைகள்/ நிறுவனங்களின் இணைய தளத்திலுள்ள புள்ளிவிவரத் தகவல்களை பாதுகாப்புடன் சேகரித்து வைத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தேவையான இயந்திரங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## கருவூலக் கணக்குத் துறை

22. கருவூலக் கணக்குத் துறை நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. அரசு ஊழியர்களுக்கு மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதிய பட்டுவாடா, அரசு ஒப்பளிப்புகளின் அடிப்படையில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான பணப் பட்டுவாடா மற்றும் அரசுக்குரிய வருவாயைப் பெறுதல் இவற்றுக்குரிய விரிவான கணக்கு விவரங்களை மாநிலக் கணக்காயருக்கு அளித்தல் போன்றவை இத்துறையின் முக்கிய செயல்பாடுகளாகும். இவைத் தவிர, முத்திரைத் தாள்களை முறையாக விநியோகம் செய்தல், கருவூலக் கணக்குத் துறையின் முக்கியச் செயல்பாடாகும். இதன் மூலம் வருவாயில் ஒரு பகுதி அரசுக்குக் கிடைக்கிறது. மேலும் கருவூலக் கணக்குத் துறை தமிழ்நாடு அரசு ஊழியர் நல நிதி மற்றும் அரசு ஊழியர் குடும்ப காப்பு நிதி ஆகியவற்றைப் பராமரிக்கிறது. விலை மதிப்புடைய பொருட்கள் மற்றும் அரசினால் ஒப்படைக்கப்படும் பொருட்கள் கருவூலங்களில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. இப்போது மின்னணு செயற்பாட்டு முறை திட்டத்தின் (Electronic Clearance System) மூலம் சிலவகை அரசுப் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கும் முறை சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



2003 மே 9]

23. கருவூலக நடவடிக்கை மேற்கொள்ளும் மாவட்டக் கருவூலகம், சார் கருவூலகங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களின் விவரம் பின்வருமாறு:

| மாவட்டக் கருவூலகங்கள் | சார் கருவூலகங்கள் | | சம்பளக் கணக்கு அலுவலகங்கள்/ சார்சம்பளக் கணக்கு அலுவலகங்கள் | ஓய்வூதிய வழங்கல் அலுவலகம் |
|---|---|---|---|---|
| | வங்கி சார்ந்தவை | வங்கி சாராதவை | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 29 | 143 | 60 | 8 | 1 |

## ஓய்வூதிய இயக்ககம்

24. 1-9-1994 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட பணிகளை செயல்படுத்துவதற்கு நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஓய்வூதிய இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது:

(1) ஓய்வூதியதாரர்களின் குறைகளைக் களைதல்.

(2) அனைத்து துறைத் தலைவர்கள் மற்றும் அலுவலகத் தலைவர்கள் ஓய்வூதியச் செயற்குறிப்புகளை மாநிலக் கணக்காயருக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கின்றனரா என்பதை உறுதி செய்து காலமுறை ஆய்வு செய்தல்.

(3) ஓய்வுபெறும் அலுவலர்களும் ஊழியர்களும் ஓய்வுபெறும் நாளில் அல்லது ஓய்வுபெறுவதற்கு முந்தைய நாளில் அனைத்து ஓய்வூதியப் பயன்களையும் தாமதமின்றிப் பெற்றிட மாநிலக் கணக்காயர் அலுவலகம் மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(4) ஓய்வூதியதாரர்கள் கோரும் ஐயப்பாடுகளுக்கு விளக்கம் அளித்தல்.

(5) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

(6) கருவூல கணக்குத் துறையிடமிருந்து சிறப்பு சேமநலத் திட்ட நிதிப் பணியினை எடுத்துக் கொள்ளுதல்.

(7) தமிழ்நாடு அரசு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் தொடர்பான பணியினைக் கவனித்தல்.

(8) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மருத்துவ நல நிதித் திட்டம் 1995-ஐச் செயல்படுத்துதல்.

(9) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்பப் பாதுகாப்பு நல நிதித் திட்டம் 1997-ஐச் செயல்படுத்துதல்.

[2003 மே 9

(10) தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம் 2000-ஐச் செயல்படுத்துதல்.

25. 31-12-2002 ஆம் நாள் நிலவரப்படி மொத்த ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களின் விவரம்:

| விவரம் (1) | ஓய்வூதிய தாரர்கள் (2) | குடும்ப ஓய்வூதிய தாரர்கள் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| ஓய்வூதியதாரர்கள் | 2,26,339 | 1,07,645 | 3,33,984 |
| ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள் | 57,975 | 27,286 | 85,261 |
| மொத்தம் .. | 2,84,314 | 1,34,931 | 4,19,245 |

26. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை நடத்தும் ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஓய்வூதிய இயக்குநர் அல்லது அவ்வலுவலக அலுவலர் ஒருவர் பங்கேற்று ஓய்வூதியதாரர்களின் குறைகள் விரைவாகக் களைந்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உதவி புரிகின்றனர். மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள ஓய்வூதிய நேர்வுகளில் தொடர் நடவடிக்கை ஓய்வூதிய இயக்ககத்தால் கண்காணிக்கப்படுகிறது. நேரடியாகவோ அல்லது முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாகவோ ஓய்வூதிய இயக்ககத்தில் பெறப்படும் ஓய்வூதியதாரர்களின் கோரிக்கை மனுக்கள் கருணையுடன் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து தீர்வு செய்யப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 31-2-2002 வரை தீர்வுகாணப்பட்ட முறையீட்டு மனுக்களின் எண்ணிக்கை 4,655 ஆகும்.

27. 22-2-2002 ஆம் நாள் முதல் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையம் ஓய்வூதியதாரர் குறைதீர்க்கும் ஓய்வூதியதாரர் அதாலத்தை ஏற்படுத்தியுள்ளது. ஓய்வூதியதாரர் அதாலத்தின் மூலம் பெறப்படும் குறைகள் சம்பந்தமான



2003 மே 9]

கட்டளைகளை ஆய்வு செய்து தொடர் நடவடிக்கை எடுத்திட, ஓய்வூதிய இயக்குநர், தலைமைச் செயலக நிர்வாகத் துறைகளின் பிரதிநிதிகள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயர் அலுவலகப் பிரதிநிதிகள் உள்ளடக்கிய குழுவினை அரசு அமைத்துள்ளது. இந்த ஓய்வூதிய அதாலத்திற்கு ஓய்வூதிய இயக்குநர் தொடர்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். ஓய்வூதியர் அதாலத், ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிறது.

28. ஓய்வூதியர்கள் ஓய்வூதிய பலன்களை அறிந்திட வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு www.tn.gov.in/dop என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்கள் மேற்குறிப்பிட்ட இணைய தளத்தில் இருந்து உடனடியாகப் பெற்றுக்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதிய இயக்குநரகத்தின் மின் அஞ்சல் குறியீடு dop@tn.nic.in ஆகும்.

**29. தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் நல நிதித் திட்டம் 1995:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள், ஆசிரிய ஓய்வூதியதாரர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு சார்ந்த இந்திய அமைச்சுப் பணிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொண்டதற்கு நிதி உதவி பெற்றிட தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் மருத்துவ நல நிதித் திட்டம் 1-7-1995 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஆண்டிற்கு அரசு, மானியமாக ரூ. 8 இலட்சம் வழங்குகிறது. மேற்குறிப்பிட்ட நிதிக்கு ஓய்வூதியதாரர்களால் மாதத்திற்கு ரூ. 10/- ஓய்வூதியத்திலிருந்து சந்தாவாகப் பெறப்படுகிறது. மேலும் ஓய்வூதியதாரர்கள் அவர்களின் வாழ்நாளில் மேற்கொண்ட குறிப்பிட்ட மருத்துவச் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்கான செலவுத் தொகையில் 75 விழுக்காடு அல்லது ரூ. 50,000/- இதில் எது குறைவோ அத்தொகை மேற்குறிப்பிட்ட நிதியில் இருந்து வழங்கப்படுகிறது. 31-3-2003 வரையிலான காலத்திற்கு 12,398 ஓய்வூதியர்கள் இத்திட்டத்தின மூலம் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் ரூ. 13.31 கோடிக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**30. தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்ப நல பாதுகாப்புத் திட்டம் 1997:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்ப நல பாதுகாப்புத் திட்டம் 1-1-1997 முதல் இறந்த ஓய்வூதியர்களின் குடும்ப உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ஓய்வூதியர்களிடமிருந்து சந்தாத் தொகையைப் பெற்று தொடங்கப்பெற்றது. இந்த நிதி 1-1-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட சந்தாத் தொகையை ஓராண்டு செலுத்திய பின்னர் ஓய்வூதியர் இறந்தால் அவரது மனைவி அல்லது கணவர் அல்லது நியமனதாரர் அல்லது வாரிசுதாரர்களுக்கு ரூ. 25,000/- வழங்கப்படுகிறது. இது ஒரு விருப்பத் திட்டமாகும். ஓய்வூதியர் இத்திட்டத்தில் சேர்ந்த பின்பு, பின் ஒரு தேதியில் இத்திட்டத்திலிருந்து விலகிக் கொள்ள நேர்ந்தால் அவர் மாதந்தோறும் செலுத்திய தொகை திரும்ப வழங்கப்படும். தற்பொழுது ரூ. 70/- மாதந்தோறும் ஓய்வூதியர்களால் இத்திட்டத்திற்குச் செலுத்தப்படுகிறது. நிலுவையிலுள்ள விண்ணப்பங்களைத் தீர்வு செய்யும் பொருட்டு 2001-2002 நிதி ஆண்டுக்கு ரூ. 500 இலட்சம் சிறப்பு மானியமாக அரசு வழங்கியுள்ளது. 31-3-2003 முடிய இத்திட்டத்தில் 29,570 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**31. தமிழ்நாடு அரசு சார்ந்த தொழிற்சாலைகளின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1969:**

அரசுத் துறைகளில் தினக் கூலி பெறும் பணியாளர்களின் நலன் கருதி இத்திட்டம் 1969 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1-1-1989-க்கு முன்பு தினக் கூலியில் 8.33 விழுக்காடு பணியாளர்களால் பங்குத் தொகையாகவும், அதற்கு ஈடாக நிறுவனரின் பங்குத் தொகையும் இத்திட்டத்திற்கு அளிக்கப்பட்டு வருகிறது. 1-4-1989-க்குப் பின்பு 10 விழுக்காடு பணியாளர்களால் பங்குத் தொகையும் அதற்கு ஈடாக அரசு பங்குத் தொகையும் அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது விவசாயம், வனம், பொதுப் பணித் துறை, கால்நடை பராமரிப்பு, பட்டுப்புழு வளர்ச்சித் துறை போன்ற அரசுத் துறையைச் சார்ந்த 471 அலகுகள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 19,977 பேர் உறுப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 61.20 இலட்சங்கள் அதற்காக சந்தாவாகப் பெறப்பட்டுள்ளது. ரூ. 170 இலட்சங்கள், முன்பணமாகவும், இறுதித் தொகையாகவும் சந்தாதாரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டக் கணக்குகள் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.



**32. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 1984:**

இத்திட்டம் 1-4-1984 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் 118 மாதங்கள் வரை அரசுப் பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அத்தொகை பணியிலிருந்து ஓய்வுபெறும்பொழுது அவர் செலுத்திய சந்தாத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூ.5,000/-ம் வழங்கப்படுகிறது. அரசின் பங்குத் தொகை ரூ. 5000/-, 15-9-2000 முதல் ரூ. 10000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**33. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 2000:**

இத்திட்டம் 1-10-2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

(அ) நிரந்தரப் பணியாளர்கள் சந்தா செலுத்த விருப்பம் தெரிவிக்கலாம். இத்திட்டத்தில் ரூ. 50/-வீதம் மாதந்தோறும் செலுத்தி ஓய்வுபெறும் மாதத்திற்கு முன்மாதம் வரை செலுத்தலாம். அத்தொகை ஓய்வுபெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(ஆ) 1-10-2000 அன்றோ அல்லது அதற்குப் பின் பணியில் சேருபவர்களுக்கு இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. புதியதாகப் பணியில் சேருபவர்களுக்கு மாத சந்தாத் தொகை ரூ. 70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ரூ. 10,000/-மும் பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளன்று திரும்ப வழங்கப்படும்.

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை**

34. நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்ற உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனைத்து உள்ளாட்சி அமைப்புகள், மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் சட்டங்களின் வரம்பெல்லைகளின்கீழ் வரும் பல்வகை மானியங்களைப் பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றின் சட்டபூர்வமான தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

[2003 மே 9

கீழ்க்கண்டுள்ள நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன:—

| வ. எண் (1) | நிறுவனங்களின் பெயர் (2) | மொத்த எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 6 |
| 2. | நகராட்சிகள் | 102 |
| 3. | பேரூராட்சிகள் | 611 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 28 |
| 5. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6. | பல்கலைக்கழகங்கள் | 16 |
| 7. | மாவட்ட நூலக ஆணைக் குழு | 29 |
| 8. | மாவட்ட விற்பனைக் குழு | 20 |
| 9 | பலவ்கை நிறுவனங்கள் | 9 |
| 10 | கிராம ஊராட்சிகள் (சோதனை தணிக்கை மட்டும்) | — |

35. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் சென்ற ஆண்டு ரூ.8,000 கோடி அளவிற்கான நிதிப் பரிமாற்றங்கள் மீது தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**36. தணிக்கை மறுப்புகளைத் தீர்வு செய்தல்:**

தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடுமையான முறைகேடுகள், அரசு மற்றும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகள் மற்றும் மறுப்புகள் தொடர்பான பின் தொடர் நடவடிக்கையாக மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களுடன் கூட்டு அமர்வு முறை (Joint sittings) மூலம் தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மறுப்புகளுக்கு உரிய பதில்கள் பெறப்பட்டு, பின்னர் அத்தணிக்கை மறுப்புகள் தீர்வு செய்யப்படுகின்றன. இன்றுவரை 4,22,345 தணிக்கை மறுப்புகள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன:—



2003 மே 9]

| வ. எண் (1) | நிறுவனங்களின் பெயர் (2) | மொத்த மறுப்புகளின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 88,954 |
| 2. | நகராட்சிகள் | 1,05,264 |
| 3. | பேரூராட்சிகள் | 1,05,411 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 1,198 |
| 5. | ஊராட்சி ஒன்றியங்கள் | 84,894 |
| 6. | பல்கலைக்கழகங்கள் | 23,579 |
| 7. | மாவட்ட நூலக ஆணைக் குழு | 8,227 |
| 8. | மாவட்ட விற்பனைக் குழு | 3,108 |
| 9. | பல்வகை நிறுவனங்கள் | 1,710 |
| | **மொத்தம்** | **4,22,345** |

**37. தணிக்கை நிலை:**

31-3-2003 அன்றுள்ளவாறு பல்வேறு நிறுவனங்கள் குறித்த தணிக்கை நிலை கீழ்க்கண்டவாறு உள்ளன. அனைத்து நிறுவனங்களின் தணிக்கை நிலையும் நடப்பில் உள்ளதாகக் கருதலாம்.

| வ. எண் (1) | நிறுவனத்தின் பெயர் (2) | எண்ணிக்கை (3) | தணிக்கை முடிவுற்ற ஆண்டு (4) | தணிக்கை நடைபெறும் ஆண்டு (5) |
|---|---|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 6 | 2000-2001 | 2001-2002 |
| 2. | நகராட்சிகள் | 102 | 2000-2001 | 2001-2002 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 | 2001-2002 | 2002-2003 (2-ஆம் அரையாண்டு) |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 28 | 2001-2002 | – |
| 5. | பேரூராட்சிகள் | 611 | 2000-2001 | 2001-2002 |
| 6. | பல்கலைக் கழகங்கள் | 16 | 2001-2002 | 2002-2003 |
| 7. | மாவட்ட நூலக ஆணைக் குழு | 29 | 2000-2001 | |
| 8. | மாவட்ட விற்பனைக் குழு | 20 | 2000-2001 | |

## 38. பயனீட்டுச் சான்றிதழ்கள் வெளியிடல்:

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் வரும் நிறுவனங்கள் மற்றும் மாநில/மைய அரசுகள், பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழக மானியக் குழு ஆகியவற்றால் விடுவிக்கப்படும் மானியங்களின் பயன்பாட்டிற்கான பயனீட்டுச் சான்றிதழ்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் வெளியிடப்பட்டு வருகின்றன.

## 39. சிறப்புச் செயல்பாடுகள்:

முறையான தணிக்கைச் செயல்பாடுகள் மட்டுமல்லாது கீழ்க்கண்ட சிறப்புச் செயல்பாடுகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

(அ) நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாளர்களுக்கான ஓய்வூதிய நிதியைப் பராமரித்தல்.

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்களின் வைப்பு நிதிகளுக்கு (Time deposit) வட்டி ஒப்பளித்தல்.

(இ) அரசு அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்.



## 40. உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கான ஓய்வூதிய நிதியை நிருவகித்தல்:

உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களான அதாவது நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்களுக்கு சான்றளித்தல், ஒப்பளித்தல் மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகளை ஒருங்கிணைத்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை செயல்படுகிறது. 15,145 ஓய்வூதியர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், பாரத ஸ்டேட் பேங்க், இந்தியன் வங்கி, கனரா வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றின் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். 2003-2004 ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் வழங்குவதற்கான எதிர்பார்க்கப்பட்ட செலவு ரூ.7,983 இலட்சம் ஆகும். ஓய்வூதியப் பயன்கள் அவ்வப்போது உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் (1) | உள்ளாட்சி நிறுவனங்கள் பெயர் (2) | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை (3) | ஓராண்டுத் தேவை (ரூபாய் இலட்சத்தில்) (4) |
|---|---|---|---|
| 1. | நகராட்சிகள் | 2,987 | 2,323 |
| 2. | பேரூராட்சிகள் | 4,644 | 2,185 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 7,514 | 3,475 |
| | மொத்தம் | 15,145 | 7,983 |

41. மாநில நிதிக் குழுவால் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் மானியத் தொகையிலிருந்து மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்களை அளிப்பதற்குத் தேவையான மொத்தத் தொகையையும் பராமரிக்கும் பணியை அரசு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிடம் ஒப்படைத்துள்ளது. தற்பொழுது, இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ஏற்கெனவே அந்தந்த நகராட்சிகளில் ஓய்வூதியம் பெற்று வந்த 12,000 நகராட்சி ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் வழங்கும் பணியை 2003-2004 முதல் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிடம் ஒப்படைத்து அரசு ஆணை நிலை எண் 6, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27-1-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2003 மே 9

42. மாநகராட்சி மற்றும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்த மட்டில் அந்தந்த உடனிருப்பு தணிக்கை அலகுகளால், அந்தந்த நிறுவனங்களின் நிதியிலிருந்து வழங்கப்படும் ஓய்வூதியப் பயன்களுக்கான தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

**43. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதித் தொகைகளுக்கு வட்டி ஒப்பளித்தல்:**

உள்ளாட்சிப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் அதிலுள்ள முதலீடுகள் ஆகியவற்றை அ.ஆ.எண்.533, நிதித் துறை, நாள்: 17-6-1967-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிகளின் மீதான வட்டியை வழங்கும் அதிகாரம் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வட்டி கேட்புகள் பெறப்பட்டு வரவு செலவுத் திட்டத்தில் அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் மூலம் வட்டி வழங்கப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.8 கோடி வட்டியாக ஒப்பளிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**44. அரசு அறக்கட்டளை நிதிக் கணக்குக்கான பொருளாளர் :**

1-4-1952 முதல் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், அறக்கட்டளை நிதிக் கணக்குக்கான பொருளாளராகச் செயல்பட்டு வருகிறார். கல்வி சம்பந்தப்பட்ட காரணங்களுக்காகத் தோற்றுவிக்கப்படும் அறக்கட்டளைகளுக்கு, அறக்கட்டளைகளுக்கான பொருளாளர் நன்கொடை பெறுகிறார். மேலும் அரசு அறக்கட்டளைகளை ஏற்றுக் கொண்டு ஆணை வெளியிட்டு, அரசிதழில் அது தொடர்பான செயல்திட்ட விதிகள் வெளியிட்ட பின்னர்தான் அறக்கட்டளைகள் நடைமுறைச் செயல்பாட்டிற்கு வருகின்றன. அறக்கட்டளை நிதிக்கான வட்டித்தொகை, அவர்களிடமிருந்து வரப்பெறும் தேவைக் குறிப்புகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. தற்போது அறக்கட்டளை பொருளாளர் கட்டுப்பாட்டின்கீழ் ரூ.3.87 இலட்சம் மதிப்புடைய நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூ.7.04 கோடி மதிப்புடைய 442 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன.



2003 மே 9]

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

45. பதினான்கு செயற் பதிவாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயக்கும் மாநிலத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின், (பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக) தணிக்கைகளை மேற்கொள்வதே கூட்டுறவு தணிக்கைத் துறையின் முக்கியமான பணியாகும். அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | பதிவாளரின் பெயர் | மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 11,188 |
| 2. | கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் | 1,732 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 369 |
| 4. | கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் வாரிய தலைமைச் செயல் அலுவலர் | 1,853 |
| 5. | பனைப் பொருள் வளர்ச்சி வாரிய தலைமைச் செயல் அலுவலர் | – |
| 6. | கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் பதிவாளர் | 1,032 |
| 7. | மீன் வளத் துறை இயக்குநர் | 1,008 |
| 8. | கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 963 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 19 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 374 |
| 11. | வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணைய இயக்குநர் | 223 |
| 12. | பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் | 64 |
| 13. | சமூக நலத் துறை இயக்குநர் | 144 |
| 14. | ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் | 38 |
| | **மொத்தம்** | **19,007** |

[2003 மே 9

**46. கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை**

(1) உடன் நிகழ் தணிக்கை, (2) அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**(1) உடன் நிகழ் தணிக்கை**

15 நாட்களும் அதற்குள்ளாகவும் தணிக்கைகளை முடிக்கக்கூடிய அளவில உள்ள சிறிய கூட்டுறவுச் சங்கங்களில் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் தரம் மற்றும் கணக்குகளை தணிக்கை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப் படுகின்றது. 2002-2003 ஆம் நிதி ஆண்டில் ரூ.8.90 கோடி (ஏப்ரல் 2002 முதல் பிப்ரவரி 2003 முடிய) தணிக்கைக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

**(2) அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை**

அதிக அளவிலான நிதி பரிமாற்றங்கள் மற்றும் பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்தக் கூடியவைகளான பெரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடிப்படை விதி 127-ன்கீழ் கூடுதல் தணிக்கையாளர்கள் பணியிடங்கள ஏற்படுத்தப்பட்டு அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலைக்கு உட்பட்டு தணிக்கைக்கான முழுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது அல்லது இலவசமாக தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**47. தணிக்கைப் பணி முன்னேற்றம்:**

கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு தணிக்கைத் துறை மேற்கொண்ட தணிக்கைகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் (1) | நிதி ஆண்டு தணிக்கை (2) | முடிக்கப் பெற்ற அறிக்கைகளின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | 1998-1999 | 16,198 |
| 2. | 1999-2000 | 15,871 |
| 3. | 2000-2001 | 19,820 |
| 4. | 2001-2002 | 19,753 |
| 5. | 2002-2003 | 21,654 |



2003 மே 9]

**48. சிறப்பு அறிக்கைகள்**

கடந்த ஐந்தாண்டு காலத்தில் கூட்டுறவு தணிக்கைத் துறையால் பெறப்பட்ட சிறப்பு அறிக்கைகளின்படி கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள் மற்றும் அது தொடர்பான தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் (1) | நிதி ஆண்டு (2) | சிறப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை (3) | தொகை (ரூபாய் இலட்சத்தில்) (4) |
|---|---|---|---|
| 1. | 1998-1999 | 1,384 | 9,540.82 |
| 2. | 1999-2000 | 1,160 | 6,591.10 |
| 3. | 2000-2001 | 1,121 | 9,607.07 |
| 4. | 2001-2002 | 1,261 | 6,902.90 |
| 5. | 2002-2003 (31-12-2002 வரை) | 1,048 | 7,450.56 |

# இணைப்பு II

*(108 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 35—திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

**1.1. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் முக்கியப் பணிகளாவன:**

i. மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல்.

ii. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்தல்.

iii. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலம் மதிப்பீடு செய்தல்.

iv. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மூலமாக புள்ளிவிவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில், மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப்பு மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவைகளுடன் மாநில பொருளாதார மாதாந்திரக் கண்காணிப்பு ஆகியவை அடங்கும்.

v. இருபது அம்சத் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் கிராமோத்யத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.

vi. பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டத்தில் மாவட்ட திட்டக் குழுவின் பணிகளை மாநில திட்டக் குழுவின் உதவியுடன் மேற்பார்வையிடுதல்.

vii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுதல்.

viii. உலக வர்த்தக மையப் பிரிவின் ஒருங்கிணைப்பாளரின் பணிகளை மேற்பார்வையிடுதல்.

ix. பெரிய கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

x. சிறப்பு முயற்சிகளின்கீழ்வரும் திட்டங்களை ஒருங்கிணைத்து செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

xi. சென்னை பெருநகர் பகுதிக்கான கட்டமைப்பு முதலீட்டு திட்டப் பணிகளை ஒருங்கிணைத்தல்.

xii. ஆண்டுத் திட்டங்களுக்கான திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட இணைப்பினைத் தயாரித்தல்.

xiii. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டங்கள் குறித்த பணிகளைச் செய்தல்.

xiv. 15 அம்சத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

xv. மாநில திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றுக்கான மத்திய உதவியைப் பெறுவதைக் கண்காணித்தல்.

xvi. தொலை உணர்வு நுட்பம் பயன்படுத்தும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

xvii. இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

xviii. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகள்மீது தொடர் நடவடிக்கை எடுத்தல்.

**1.2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கியப் பணிகள் பற்றிய குறிப்பு பின்வருமாறு:**

**1.2.1. ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்**

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முதல் திட்ட ஒதுக்கீடுகளை மாநில அரசு தொடர்ந்து எய்தி வந்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



(ரூபாய் கோடியில்)

| திட்டக் காலம் (1) | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு (2) | செலவினம் (3) |
|---|---|---|
| முதல் திட்டம் (1951-56) | 86 | 80 |
| இரண்டாவது திட்டம் (1956-61) | 186 | 188 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் (1961-69) | 608 | 613 |
| நான்காவது திட்டம் (1969-74) | 552 | 559 |
| ஐந்தாவது திட்டம் (1974-79) | 1122 | 1165 |
| ஆறாவது திட்டம் (1980-85) | 3150 | 3645 |
| ஏழாவது திட்டம் (1985-90) | 5750 | 6317 |
| ஆண்டுத் திட்டம் (1990-91) | 1450 | 1591 |
| ஆண்டுத் திட்டம் (1991-92) | 1600 | 1726 |
| எட்டாவது திட்டம் (1992-97) | 10200 | 14024 |
| ஒன்பதாவது திட்டம் (1997-2002) | 25000 | 25036 |

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.29 ஆக இருந்தது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.248 ஆக உயர்ந்தது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு உயர்ந்த அளவான ரூ.6410 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் வாரியான தனிநபருக்கான ஒதுக்கீடுகள் கீழேயுள்ள வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.






**1.2.2 ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1997-98 முதல் 2001-2002 வரை) ஆண்டுவாரியான சாதனைகள்:**

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.25,000 கோடியாகும். ஆண்டுவாரியான ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு<br>(1) | ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)<br>(2) | செலவினம்<br>(3) | சாதனை விழுக்காடு<br>(4) |
|---|---|---|---|
| 1997-1998 | 4009.90 | 4010.63 | 100.02 |
| 1998-1999 | 4501.00 | 4515.81 | 100.33 |
| 1999-2000 | 5251.75 | 5413.75 | 103.08 |
| 2000-2001 | 5701.30 | 5776.52 | 101.32 |
| 2001-2002 | 5200.00 | 5318.90 | 102.29 |
| **மொத்தம்** | **24663.95** | **25035.61** | **100.14** |

2001-2002 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.6040 கோடி என முதலில் நிர்ணயிக்கப்பட்டது. முன் எப்போதும் இல்லாத அளவில் ஏற்பட்ட நிதியாதாரப் பற்றாக்குறையால் மேற்குறித்த ஒதுக்கீட்டை ரூ.5200 கோடி என குறைக்க வேண்டிய நிர்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. கீழே உள்ள வரைபடம் 1995-96 ஆம் ஆண்டு, முதல் ஆண்டுத் திட்டங்களின் சாதனையை விளக்குவதாக அமைந்துள்ளது.

[2003 மே 9






2003 மே 9]

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 7 சதவீத வளர்ச்சி இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அத்திட்டக் காலத்தில் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் 5.46 சதவீதமே எய்த முடிந்தது.

### 1.2.3. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002-2007)

தேசிய அளவில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான கண்ணோட்டம் 2001 ஆம் ஆண்டு, செப்டம்பர் முதல்நாள் கூட்டப்பட்ட தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் பத்தாவது திட்டக் காலத்தில், அதாவது 2002 முதல் 2007 வரையிலான காலத்தில், தேசிய மொத்த உற்பத்தி வீதத்தில் ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சி இருக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநில திட்டக் குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.40000 கோடி என உயர்ந்த அளவிலான ஒதுக்கீட்டிற்கு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 8 சதவீத வளர்ச்சியை அடைவதைத் தவிர, மனிதவளம் குறித்த முக்கிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் ஆக்கபூர்வமான வாழ்க்கை அமைவதற்கான அனைத்து வசதிகளை ஏற்படுத்தி தமிழ்நாட்டை நாட்டிலேயே சிறந்த மாநிலமாக ஆக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துறைவாரியான ஒதுக்கீட்டு விவரங்களை கீழே உள்ள படத்தில் காணலாம்.






### 1.2.4. 2002-2003ஆம் ஆண்டுத் திட்டம்

2002-2003 ஆம் ஆண்டு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். 2002-2003ஆம் ஆண்டுத் திட்டத்தின் ஒதுக்கீட்டு அளவு ரூ.5750 கோடி என மத்திய திட்டக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வொதுக்கீட்டை அரசு முழுமையாக எய்தி விட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 1.2.5. 2003-2004 ஆம் ஆண்டுத் திட்டம்

2003-2004-ம் ஆண்டுக்கான வரைவுத் திட்டம் மாநிலத் திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்டு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவு மற்றும் 2002-2003 ஆம் ஆண்டில எதிர்பார்க்கபபடும் சாதனை ஆகியவற்றை கணக்கில் கொண்டு 2003-2004 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டு அளவை பெரிய அளவில் நிறைவேற்ற கருதப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீடு புது தில்லியில் சமீபத்தில் நடைபெறவுள்ள மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அளவிலான கலந்துரையாடலுக்குபபின் உறுதி செய்யப்படும்.

### 1.2.6. இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா

இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா அல்லது வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத்திற்கான உதவி என்ற புதிய முயற்சியை மத்திய திட்டக் குழு கொண்டு வந்துள்ளது. மூன்றாண்டுகளுக்கான இத்திட்டத்தின் கீழ் அதிக வறுமை மற்றும் குறைந்த உற்பத்தியுடன் கூடிய பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு வளர்ச்சிக்கான தடைகளைக் களையவும் மற்றும் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் உதவி வழங்கப்படுகிறது. மேற்கண்ட திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு மூன்றாண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.15 கோடி வீதம் மானியம் வழங்க உள்ளது.

### 1.2.7. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்/மத்திய மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவது கண்காணிக்கப்படுகிறது.

திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு மற்றும் மத்திய மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றை ஒப்பளிப்பு செய்யும் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்களின் செயலாக்கத்தின் முன்னேற்றம் பல்வேறு நிலைகளில் மாதாந்திர அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது.

### 1.2.8. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் மாநில அரசிறகுத் துணைபுரியும் வகையில் 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தற்போதைய முக்கிய குறிக்கோள் மாவட்டததின் ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலைக் காத்தல், பேணுதல் ஆகியவையாகும். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஒருங்கிணைந்த நீர்நிலை ஆதார அணுகுமுறை அடிப்படையில் பல்வேறு துறைகளையும் ஒரேமாதிரியாக மேம்படுத்தும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நீர்நிலை ஆதாரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் 75 நீர் முகட்டுப் பகுதிகளாகப் (Watershed) பிரிக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக 2549 சகி.மீ. பரப்பளவைக் கொண்டு கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சந்திப்பில் சராசரியாக கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அதிக உயரமான பகுதி தொட்டபெட்டா ஆகும். (கடல் மட்டத்திலிருந்து 2640 மீட்டர் உயரம்). மாவட்டத்தின் மொத்த பரப்பளவில் 143351 ஹெக்டேர் பரப்பை காடுகள் சூழ்ந்துள்ளன. இது மாவட்ட பரப்பளவில் 56.3 சதவிகிதம் ஆகும். மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பளவு 76.000 ஹெக்டேர் ஆகும். இதில் 82 சதவிகிதப் பரப்பு தேயிலை பயிர்களைக் கொண்டுள்ளது. மீதமுள்ள பரப்பில் காய்கறிகள் மற்றும் பிற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. நடப்பு திட்டக் காலத்தில் பகுதி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது. திட்டமிடாமல் வடிவமைக்கப்பட்டுள்ள வடிகால் அமைப்பினாலும் பழமையான



விவசாய முறைகளைப் பின்பற்றுவதாலும் ஏற்படும் மண் அரிப்பு ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பின்வரும் முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

1. நீலகிரியின் பசுமைக் காடுகளையும், புல்வெளிகளையும் பாதுகாத்தல் மற்றும் பேணுதல்.
2. சரிவு மட்டங்கள் மற்றும் இதர தட்பவெப்ப, சுற்றுச்சூழல், தன்மைகளைப் பொறுத்து காடுகள் மற்றும் விளைநிலங்களின் பயன்பாட்டுத் திட்டமிடுதலை மேம்படுத்துதல்.
3. பெருவாரியாக செடி பயிரிடும் முறையைப் பயன்படுத்தியும் பயிரிடும் விதங்களை மாற்றியமைத்தும், நிலத்தின் விளைச்சல் திறனை உயர்த்த மண் வளத்தையும் நீரையும் பேணிக் காத்தல்.
4. ஏழை மக்களின் முன்னேற்றததிற்கும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் நிலம் சாரா பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
5. ஒதுங்கிய வசிப்பிடங்களில் வாழும் பழங்குடியினரின் பொருளாதாரத்தை மேம்படுத்தல்.
6. மனிதர்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேட்டினைச் சமாளிக்க ஒருங்கிணைந்த மனிதக் குடியேற்றக் கொள்கையை வகுத்தல் மற்றும் குடிப்பெயர்ச்சியைத் தடுத்தல்.
7. "பகுதி சார்ந்த அணுகுமுறைக்கு" முன்னுரிமை அளிக்கப்படும். எல்லா நீர்நிலை ஆதாரங்களுக்கும் ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்து, அதிக முன்னுரிமை உள்ள நீர்நிலை ஆதாரங்களைத் தேர்ந்தெடுத்து சுத்திகரித்தல்.
8. தொலையுணர்வு போன்ற அறிவியல் நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்கமளித்தல்.
9. சூரிய ஒளி, நீர் மற்றும் சாண எரிவாயு போன்ற மரபு சாரா எரிசக்திகளைப் பயன்படுத்துவதை அதிகரித்தல்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு கடந்த ஒன்பதாவது ஐந்தாண்டுத் (1997-98 முதல் 2001-02 வரை) திட்டக் காலத்தில் ரூ.107.44 இலட்சங்களை மத்திய திட்டக் குழு தமிழகத்திற்கு நிதியுதவியாகப் பின்வருமாறு அளித்துள்ளது:

| வருடம் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1997-1998 | 1962 |
| 1998-1999 | 2170 |
| 1999-2000 | 2201 |
| 2000-2001 | 2201 |
| 2001-2002 | 2210 |
| மொத்தம் | 10744 |

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.2210 இலட்சங்களாகும். இத்திட்டம் சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துறைவாரியான ஒதுக்கீடுகளில் மண்வளப் பாதுகாப்பிற்கும் இயற்கை வளங்களைப் பேணிக் காப்பதற்கும் மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கான 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு ரூ.2210 இலட்சமாகும். இதற்கான கருத்துருக்கள் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்காகவும், நிதி ஒதுக்கீட்டிற்காகவும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மேற்கண்ட துறைகளுக்கான நிதி வரவு செலவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.9. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் 1975-76-ல் தொடங்கப்பட்டு மத்திய அரசின் நிதியுதவியுடன் (90% மானியம் மற்றும 10% கடன்) செயல்படுத்தபபட்டு வருகின்றது.



மேற்கு மலைத்தொடர் பகுதியானது தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ளது. இது, தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவீதமாகும். இத்திட்டம் தற்பொழுது தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 57 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தபபட்டு வருகின்றது.

| | மாவட்டம் | வட்டம் | வட்டாரம் |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | 1. காரமடை |
| | | கோயம்புத்தூர் (வடக்கு) | 2. கோயம்புத்தூர் நகராட்சி |
| | | | 3. தொண்டாமுத்தூர் |
| | | | 4. பெரியநாக்கன்பாளையம் |
| | | கோயம்புத்தூர் (தெற்கு) | 5. மதுக்கரை |
| | | பொள்ளாச்சி | 6. ஆனைமலை |
| | | | 7. பொள்ளாச்சி (தெற்கு) |
| | | | 8. பொள்ளாச்சி (வடக்கு) |
| | | உடுமலைப்பேட்டை | 9. உடுமலைப்பேட்டை |
| | | வாலபாறை | 10. வால்பாறை |
| | | அவினாசி | 11. அவினாசி |
| | ஈரோடு | தாராபுரம் | 12. தாராபுரம் |
| | | | 13. மூலனூர் |
| | | காங்கேயம் | 14. காங்கேயம் |
| | திண்டுக்கல் | திண்டுக்கல் | 15. திண்டுக்கல் |
| | | | 16. சானார்பட்டி |
| | | | 17. ஆத்தூர் |
| | | | 18. ரெட்டியார்சத்திரம் |
| | | கொடைக்கானல் | 19. கொடைக்கானல் |
| | | பழனி | 20. பழனி |
| | | | 21. தொப்பமபட்டி |
| | | ஒட்டன்சத்திரம் | 22. ஒட்டன்சத்திரம் |
| | மதுரை மாவட்டம் | உசிலம்பட்டி வட்டம் | 23. உசிலம்பட்டி வட்டாரம் |
| | தேனி | ஆண்டிப்பட்டி | 24. கடமலை-மயிலாடும்பாறை |
| | | | 25. ஆண்டிப்பட்டி |

[2003 மே 9

| | | | |
|---|---|---|---|
| | | உத்தமபாளையம் | 26. உத்தமபாளையம் |
| | | | 27. சின்னமனூர் |
| | | | 28. கம்பம் |
| | | தேனி | 29. தேனி |
| | | பெரியகுளம் | 30. பெரியகுளம் |
| | | போடி நாயக்கனூர் | 31. போடிநாயக்கனூர் |
| 6 | விருதுநகர் | இராஜபாளையம் | 32. இராஜபாளையம் |
| | | ஸ்ரீவில்லிபுத்தூர் | 33. வத்திராயிருப்பு |
| | | சாத்தூர் | 34. வேம்பக்கோட்டை |
| 7 | திருநெல்வேலி | சங்கரன்கோவில் | 35. சங்கரன்கோவில் |
| | | சிவகிரி | 36. வாசுதேவநல்லூர் |
| | | செங்கோட்டை | 37. செங்கோட்டை |
| | | தென்காசி | 38. தென்காசி |
| | | | 39. கடையநல்லூர்-பகுதி |
| | | | 40. கீழப்பாவூர்-பகுதி |
| | | அம்பாசமுத்திரம் | 41. கடயம் |
| | | | 42. அம்பாசமுத்திரம் |
| | | | 43. சேரன்மாதேவி |
| | | | 44. பாப்பாகுடி |
| | | நாங்குநேரி | 45. களக்காடு |
| | | | 46. நாங்குநேரி |
| | | இராதாபுரம் | 47. வள்ளியூர் |
| | | | 48. இராதாபுரம் |
| 8 | கன்னியாகுமரி | அகஸ்தீஸ்வரம் | 49. அகஸ்தீஸ்வரம் |
| | | | 50. இராஜாக்கமங்கலம் |
| | | தோவாளை | 51. தோவாளை |
| | | கல்குளம் | 52. குருந்தன்கோடு |
| | | | 53. தக்கலை |
| | | | 54. திருவட்டார் |
| | | விளவங்கோடு | 55. மேல்புரம் |
| | | | 56. கிள்ளியூர் |
| | | | 57. முன்சிறை |

இத்திட்டம் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முழுவதுமாகச் செயல்படுத்தப்படுகிறது.



2003 மே 9]

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(i) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல்.

(ii) விலங்குகளின் வாழ்கைக்குப் பாதுகாப்பளித்தல்.

(iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளைச் சரிசெய்தல்.

(iv) அங்குள்ள மக்களுக்கு இயற்கைச் சூழலுக்கு ஏற்படும் சீரழிவின் பாதிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்குகொள்ளச் செய்தல்.

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கியப் பணிகள் மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறுபாசனம், ஊரகச் சாலைகள், கால்நடை பராமரிப்பு, மீனளம், பட்டு வளர்ச்சி, தொலையுணர்வு, பனைப்பொருள் வளர்ச்சி ஆகியவையாகும். இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 80 விழுக்காடு தொகை மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு என்ற மூன்று முக்கியப் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

**திட்டத்தின் பயன்கள்**

இதுவரை, மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகள், நிலத்தடி நீர் உயரப் பெரிதும் பயன்பட்டுள்ளன. தடுப்பணை மற்றும் கசிவு நீர்க் குட்டை கட்டப்பட்டுள்ள இடங்களில் உள்ள கிணறுகளில் நீர் தாராளமாக உள்ளது. மேலும், மண்வளப் பாதுகாப்பு கட்டமைவுகளால் புஞ்சை நிலங்கள் தோப்புத் துரவுகளாக மாற்றப்பட்டதுடன், நிலத்தின் மதிப்பும் 20 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடு வரை உயர்ந்துள்ளது. தடுப்பணைகள் கட்டியதால், தேங்காய் விளைச்சல் அதிகரித்து இரட்டிப்பானதுடன், காயும் பருமனாக மாறியுள்ளது. மேலும் இவை குடிநீர் இல்லா ஊர்களில், ஆண்டு முழுவதும் குடிநீர் கிடைக்க வழி செய்துள்ளது.

மேலும் மேற்கு மலைத்தொடர்ச்சி திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வண்டல் சேமிப்பு குளங்களால், கிணற்று நீர் மட்டம் உயர்ந்ததுடன்,

மா, கொய்யா மற்றும் தென்னந்தோப்புகளில் தானிய வகைகளை ஊடு பயிராக விளைவிக்க ஏதுவாகின்றன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தம் ரூ.51.50 கோடி மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி உதவியாகப் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, பத்தாவது ஐந்தாண்டுத் (2002-2007) திட்டத்தின் முதல் (2002-2003) ஆண்டிற்கு மத்திய திட்டக் குழுவால் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1099 இலட்சமாகும். இத்திட்டம், சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துறைவாரியான ஒதுக்கீடுகளில் மண்வளப் பாதுகாப்பிற்கும் இயற்கை வளங்களைப் பேணிக் காப்பதற்கும் மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு ரூ.1099 இலட்சமாகும். இதற்கான கருத்துருக்கள் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்காகவும், நிதி ஒதுக்கீட்டிற்காகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான நிதி சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.10 இருபது அம்சத் திட்டம்

இத்திட்டம் நாட்டின் வறுமையினைக் குறைப்பதற்கென 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிற திட்டம் ஆகும். இத்திட்டத்தில் கிராமப்புற வீட்டுவசதி, குடிசை மாற்று வசதி, குழந்தைகள் நல மேம்பாடு, கிராமப்புற குடிநீர் வசதி மற்றும் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் மேம்பாடு ஆகியவை முக்கிய அம்சங்களாகும். இத்திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் மாநில அளவிலும், தேசிய அளவிலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகின்றது.

### 1.2.11 பெருந்திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்

அரசு திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கிய பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை திட்டங்களைச் செயல்படுத்தும்போதும் திட்டங்கள் முடிவுற்ற பின்னரும் மதிப்பீடுகளைச் செய்துவருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள்



பகுத்தாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

### 1.2.12 உலக வர்த்தக நிறுவனப் (WTO) பிரிவு

உலக வர்த்தக நிறுவனம் சம்பந்தமான பொருள் குறித்து ஒருங்கிணைப்பதற்காக அரசு ஆணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 19-11-2001-ன்படி ஓர் ஒருங்கிணைப்புப் பிரிவு, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலக வர்த்தக மையம் மாநில விவசாயத் துறைப் பிரிவுகளுக்கு ஓர் அறைகூவல் என்ற தலைப்பில் 2002-ல் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. ஜவுளித் துறை தொழிற்சாலைகள், முக்கியமாக அப்போதைய தொழிற்சாலைகள் உலக வர்த்தக மையத்தின் உலகமயமாக்குதல் கொள்கை காரணமாக எதிர்கொள்ளும் விளைவுகள் குறித்து திருப்பூர் விசைத்தறி உரிமையாளர்களுடன் பிப்ரவரி 2003-ல் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதுபோன்று உலக வர்த்தக மையத்தின் செல்வாக்கு மிகுந்த மற்ற துறைப் பிரிவுகள் சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளும் நடத்தப்படும்.

### 1.3 துறைத் தலைமையிடங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநில திட்டக் குழு

(ii) பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் பின்வரும் பக்கங்களில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

### மாநில திட்டக் குழு

2.1 தமிழ்நாட்டில் மாநில திட்டக் குழு 25-05-1971 அன்று அமைக்கப்பட்டது. மாநில திட்டக் குழு 17-09-2001 அன்று மாண்புமிகு

முதலமைச்சரை தலைவராகவும், முனைவர் மா.சா.சுவாமிநாதன் அவர்களை துணைத் தலைவராகவும் ஒரு முழு நேர உறுப்பினர், பகுதி நேர உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்-செயலருடன் திருத்தியமைக்கப்பட்டது. வளர்ச்சி ஆணையர் மற்றும் செயலாளர், நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் மற்றும் வேளாண் துறை செயலாளர் ஆகியோர் அலுவலர் வழி உறுப்பினர்கள் ஆவர்.

**மாநில திட்டக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியப் பொறுப்புக்களாவன:**

(அ) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்களை அரசின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிப்பது.

(ஆ) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பரந்த அளவிலான இலக்குகளில் முக்கிய பங்காற்றக்கூடிய திட்ட எல்லைகளை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்.

(இ) மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறையின் மூலம் அரசு நிகழ்வுகளில் சமூக பொருளாதார வெளிப்பாடு குறித்து மதிப்பீடு செய்தல்.

(ஈ) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல் மற்றும் அது சம்பந்தமான அறிக்கைகளை அரசுக்கு அளித்தல்.

(உ) மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டக் குழுவுடன் இணைந்து செயலாற்றுதல் மற்றும் கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை மேற்பார்வையிடுதல்.

(ஊ) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகளை எய்துவதற்குத் தேவையான கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்கிட அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.



## 2.2 தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல்

தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து காலாண்டு அறிக்கையினை மாநில திட்டக் குழு தயாரிக்கிறது. இதில் பொருளாதாரத்தின் முக்கியப் பிரிவுகளான வேளாண்மை, தொழில்கள், மின்சாரம், வருவாய் திரட்டுதல், முக்கியப் பொருள்களின் விலைவாசி நிலவரங்கள், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திட்டச் செயலாக்கம் ஆகியவை தலைமைச் செயலாளர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன.

## 2.3 மாவட்டப் பரவலாக்கத் திட்டம்

இந்திய அரசமைப்புச் சட்டம் 73-வது மற்றும் 74-வது திருத்தச் சட்டப் பிரிவுக் கூற்றின்படி, அந்தந்த மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சிகளால் தயாரிக்கப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து செயலாற்ற மாவட்டத் திட்டக் குழுவை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட திட்டக் குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. அதன் முதல் கூட்டம் 04-02-2002 அன்று எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூட்டங்கள் நடத்தி மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படுகின்றன. இந்தக் குழுக்களுக்கு உதவும் வகையில் மாவட்டம் தோறும் மாவட்டத் திட்டப் பிரிவுகள் ஏற்படுத்தி கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு 2003-2004-இல் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.4 தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியம்

முனைவர் மா.சா. சுவாமிநாதன், துணைத் தலைவர், மாநில திட்டக் குழு அவர்களது தலைமையில் மாநில நிலப்பயன்பாட்டு வாரியம் மாநில திட்டக் குழுவில் ஒரு சிறிய அமைப்பாக இயங்கி வருகிறது. பரந்த மேலாண்மை முறைமைத் திட்டங்கள் குறித்து ஆராயப்படுகிறது. இது ஒரு மத்திய உதவி பெறும் திட்டமாகும்.

[2003 மே 9

## 2.5 தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டு அறிக்கை

தேசிய மனிதவள மேம்பாட்டு அறிக்கை 2001-ன்படி மனிதவள மேம்பாட்டில், தமிழ்நாடு 15 பெரிய மாநிலங்களில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

## 2.6 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கும் பணி மாநில திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. 12-06-2002 அன்று டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழு துணைத் தலைவருடன் பேசியதில், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ரூ.40,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் சராசரியாக ஆண்டு மொத்த மாநில வருவாயில் 8 சதவீதம் வளர்ச்சி விகிதத்தை இலக்காகக் கொள்ளும். அனைவரும் ஆரோக்கியமான வளமிக்க வாழ்வினைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த இலக்கினை அடைய, மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டமும் தமிழ்நாட்டை சமூக பொருளாதார வளர்ச்சியில் எல்லா நிலைகளிலும் முதலாவதாகக் கொண்டுவர வேண்டும் என்ற அவர்களது இலட்சியமும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வழிகாட்டியாக அமையும்.

மேலும் 2010-ல் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதே முக்கியக் குறிக்கோளாகும். இதனை புதிய வளர்ச்சித் திட்டங்கள் தொடங்க முயற்சி, நல்ல இறையாண்மை, சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் நிதி திருத்தங்கள் ஆகிய நான்கு பெரும் பணிகளை சிறப்புற மேற்கொள்வதன் மூலம் அடைய முடியும்.

2003-2004 ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்டம் அதாவது இரண்டாம் வருடமான பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிவுறுத்திய இலக்கினுக்குள் கட்டுப்பாடும் செயல்திறனும் கொண்டதாக உருவாக்கப்படும்.



2003 மே 9]

## 2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

(1) •டிஜிட்டல் நகல் எடுக்கும் கருவி ரூ.3.50 இலட்சம் செலவில் வாங்குதல்.

(2) மாநில திட்டக் குழுவின் அலுவலகப் பணிக்காக கையடக்க கணினி ரூ.1.50 இலட்சம் செலவில் வாங்குதல்.

(3) துணைத் தலைவர் அலுவலக அறையினை மேம்படுத்துதல், புதிய தரை, மேற்கூரை, கை அலம்பும் வட்டில், கழிவறை அமைத்தல் மற்றும் இரண்டு சாய்வு கட்டில் (சோபா) ரூ.1.00 இலட்சம் செலவில் வாங்குதல்.

(4) கருத்தரங்குக் கூடம் மற்றும் கருத்தரங்கு மேசையின் மேற்பரப்பை ரூ.0.25 இலட்சம் செலவில் சீரமைத்தல்.

## பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

3.1 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மாநிலத்தின் தலைமை புள்ளிஇயல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், ஆராய்வதிலும் வேளாண்மை, தொழில் மற்றும் விலைவாசி ஆகிய பிரிவின்கீழ் அறிக்கைகள் வெளியிடுவதும் மற்றும் புள்ளிவிவரங்கள் குறித்த செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவதும் இத்துறையின் முக்கியப் பணியாகும்.

3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன:

### 1. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோக புள்ளிவிவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் ஒவ்வொரு பருவத்திலும் பயிர் வாரியாக நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

### 2. தேசிய மாதிரி ஆய்வுப் பிரிவினை வலுப்படுத்தும் திட்டம்

தேசிய மாதிரி ஆய்வு, தேசிய அளவில், முக்கியமாக அமைப்பு சாராப் பிரிவுகளின் பல்வேறு பொருட்களை உள்ளடக்கி அடுத்தடுத்த சுற்றுக்களில் தொடர்ந்து நடத்தப்படும் ஓர் ஒருங்கிணைந்த ஆய்வாகும்.

இவ்வாய்வு, 6 மாதம் அல்லது ஒரு வருட காலத்தில் முழுநேரப் பணியாளர்களை களப்பணியாளர்களாகக் கொண்டு நடத்தப்படுகிறது. இது மக்களுடைய சமூக பொருளாதார இனங்களின் மீதான அடிப்படை விவரங்களை அளிக்கிறது.

**3. பயிர் மேம்பாட்டுத் திட்டம்**

மாநிலத்தில் கிராம அளவில் அடிப்படை களப்பணியாளர்களான கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண்மைப் புள்ளிவிவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வு செய்து, அவற்றைச் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**4. வேளாண்மைப் புள்ளிஇயலை மேம்படுத்துதல்**

வேளாண்மை மற்றும் வேளாண்மையைச் சார்ந்த விவரங்களை சேகரித்து, தொகுத்து, ஆராய்ந்து அறிக்கை வெளியிடப்படுகிறது.

**5. மேலாண்மை முறை மற்றும் விவரங்கள் சேகரித்தலை நவீனப்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், கணினி முறைகள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி ஆகியவை மேம்படுத்தப்படுகின்றன.

**6. வேளாண்மைக் கணக்கெடுப்பு**

வேளாண்மையை திட்டமிட நுண்ணிய அளவில், உரிய நிலப் பதிவேடுகளிலிருந்து கைப்பற்றின் அளவு, தன்மை மற்றும் கையிருப்பின் உரிமை பற்றிய விவரங்கள் கணக்கிடப்படுகின்றன.

**7. கால்நடைக் கணக்கெடுப்பு**

கால்நடை, கோழிப் பண்ணை, வேளாண்மைக் கருவிகள், மீன்பிடிக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான விவரங்கள் சேகரித்தல். கால்நடைக் கணக்கெடுப்பு மட்டுமே வயது, இனம், அமைப்பு ஆகியவைகளுடன் கால்நடை வகைகள் மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றை அளிக்கக்கூடியது மேலும் கோழிப்பண்ணை, வேளாண்மை உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் மீன்வளப் புள்ளிவிவரங்கள் குறித்த கூறுபாடுகளை உடையது.



**8. பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களில் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்**

பழம் மற்றும் காய்கறிப் பயிர்களில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தி பயிர் பரப்பு, உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் மிக நுட்பமாகக் கண்டறியப்படுகிறது.

**9. தேசிய தொழில்நுட்ப ஆள்திறன் தகவல் முறைக்கான ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள தேர்ச்சி பெற்ற பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் ஆகியோரின் பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்ப தனித்தன்மை குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் அவர்களின் தேவை மற்றும் அளிப்பினை மதிப்பிடுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**3.3 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் திட்டத்தில் சாரா திட்டங்கள் குறித்த விவரங்கள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:**

| | திட்டம் | நோக்கம் |
|---|---|---|
| 1. | மாநில வருவாய் மதிப்பீடு | ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட ஏதுவாக 17 இனங்களுக்கான மொத்த மாநில உற்பத்தி, நிகர மாநில உற்பத்தி மற்றும் தனிநபர் வருமானம் மதிப்பிடப்படுகிறது. |
| 2. | மாநிலக் கணக்கு | மாநில பொதுத் துறை நிறுவனங்களின் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளின செயல்பாடுகள் குறித்த தெளிவான பார்வை கிடைக்கும் பொருட்டு மண்டல கணக்குக் குழுமத்தின் பரிந்துரையின்படி உற்பத்தி, நுகர்வு மற்றும் மூலதன ஆக்கம் குறித்த விவரங்கள் மண்டலக் கணக்குகளில் இருந்து சேகரிக்கப்படுகின்றன. மேலும் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் மாநிலத்தின் பொதுத் துறை நிறுவனங்களுடன் மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் வெளிப்படுத்துகின்றன. |

[2003 மே 9

| திட்டம் | நோக்கம் |
|---|---|
| 3. மூலதன ஆக்கம் | தமிழ்நாட்டில் உள்ள அரசு நிர்வாகத் துறைகள், அரசு சார்பு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட வாரியங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள முதலிய மாநிலப் பொதுத் துறை பிரிவு மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் மொத்த நிலையான மூலதன ஆக்க மதிப்பீடுகள் கணக்கிடப்படுகின்றன. |
| 4. ஆண்டுத் தொழில் ஆய்வு | மாநில வருவாய் மதிப்பீட்டிற்காக மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம் ஆகியவை குறித்து மதிப்பிடப்படுகின்றன. |
| 5. மாதாந்திர தொழிற் குறியீட்டெண் | குறிப்பிட்ட காலத்திற்கு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைக் கணக்கிட மாதந்தோறும் தொழிற்குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது. |
| பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை | நில உபயோகம், பாசன ஆதாரங்கள், நீர் பாய்ச்சப்பட்ட மற்றும் நீர் பாய்ச்சப்படாத பயிர் பரப்பு, உற்பத்தி மதிப்பீடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் உற்பத்தி விகிதாச்சாரத்தை கணக்கிடுதல், அத்துடன், மழை விவரங்கள், விலைவாசி நிலவரம், விவசாயக்கூலி விவரங்கள் மற்றும் பண்ணை விலை விவரங்கள் போன்ற விவரங்களை உள்ளடக்கியது. |
| பயிர் முன் மதிப்பீட்டறிக்கை | ஒரு பசலியாண்டிற்குரிய பயிர் பரப்பு மற்றும் உற்பத்தியை ஆண்டு முடிவில் கணக்கிடுவதற்கு முன்பாகவே, தமிழ்நாட்டிலுள்ள 43 முக்கிய உணவு, உணவல்லாத மற்றும் பணப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன்கூட்டியே முன்மதிப்பீடு செயயப்படுகின்றன. |



2003 மே 9]

| திட்டம் | நோக்கம் |
|---|---|
| 8. உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டாய்வு | மாவட்டங்கள் மற்றும் மாநில அளவில் பல்வேறு பயிர்களில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தி மிக நுட்ப அளவில் ஹெக்டேருக்கான சராசரி விளைச்சல விகிதத்தை கணக்கிட்டு மொதத உறபத்தி பற்றி மதிப்பீடு செய்யப்படுகிறது. |
| 9. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் | இயற்கையின் சீற்றத்தில் ஏற்படுமு வறட்சி, வெள்ளம், சூறாவளி, பூச்சித் தாக்குதல் மற்றும் நோய் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படும் இழப்பை காப்பீடு மூலம் விவசாயிகளுக்கு ஈடுகட்ட சில குறிப்பிட்ட பயிர்களின் விளைச்சல் விகிதம் பயிர் அறுவடை பரிசோதனை மூலம் கணக்கிடப்படுகிறது. |
| 10. தென்னை மற்றும் கமுகு ஆய்வு | தென்னை மற்றும் கமுகுப் பயிர்களின் பரப்பு, விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி குறித்து மதிப்பீடு செய்யப்படுகிறது. |
| 11. மழை விவரங்கள் சேகரித்தல் | மாவட்டம் மற்றும் மாநிலத்திற்குரிய தினசரி /மாதாந்திர/பருவகால மறறும் ஆண்டுககான மழை விவரங்கள் சேகரிக்கபபடுகின்றன. |
| 12. நீர்ப்பாசனத் திட்டம் | மாவட்ட வாரியாக வட்ட அளவில், பயிர் சாகுபடி முறை மற்றும் பாசன ஆதாரங்கள் மூலம் சாகுபடி செய்யப்பட்ட நிகரப் பரப்பு, மொத்தப் பரப்பு மற்றும் ஒரு தடவைக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பின் சதவீதம் கணக்கிடப்படுகிறது. |
| 13. விவசாயக்கூலி குறியீட்டெண் | மாவட்ட மற்றும் மாநில அளவில், தினசரி/ மாதாந்திர/வருடாந்திர அடிப்படையில் வழங்கப்பட்ட விவசாயக் கூலி விவரங்களின் அடிப்படையில் விவசாயக் கூலி குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது. |
| 14. வீட்டுவசதி புள்ளிவிவரம் | தேசிய அளவில் வீட்டுவசதிக் கொள்கை மற்றும் வீட்டுவசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளின் கட்டடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |

| | திட்டம் | நோக்கம் |
|---|---|---|
| 15. | கட்டட கட்டுமான செலவுக் குறியீட்டெண். | கட்டடப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை காலாண்டிற்கு ஒருமுறை சேகரித்து 16 மையங்களுக்கான கட்டட கட்டுமானச் செலவுக் குறியீட்டெண் ஒருங்கிணைக்கப்படுகிறது. |
| 16. | ஆண்டு நகராட்சி புள்ளிஇயல் கையேடு மற்றும் மாவட்டப் புள்ளிஇயல் கையேடு | மாவட்டங்கள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து விவரங்களும் தொகுத்து அளிக்கப்படுகின்றன. |
| 17. | மாநிலப் புள்ளிஇயல் கையேடு மற்றும் ஆண்டு புள்ளிவிவரத் தொகுப்பு | ஆட்சியாளர்கள், திட்ட வல்லுநர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு கிடைப்பதற்கு ஏதுவாக முக்கிய விவரங்களை உள்ளடக்கிய விவரங்களான மக்கள் தொகை, விவசாயம், தொழில், சுகாதாரம், கல்வி, மின்சாரம், விலைவாசி மற்றும் வர்த்தக விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுத்து வழங்கப்படுகின்றன. |
| 18. | ஆள்திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் | பல்வேறு துறைகளில் தேவைப்படும் ஆள்திறன் தேவை, மற்றும் அளிப்பு குறித்த விவரங்களைச் சேகரித்தல் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்களின் வேலைவாய்ப்பு, வேலையின்மை, குறை வேலைவாய்ப்பு மற்றும் மாணவர்கள் சேதம் போன்றவை குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அண்மையில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் பயன் பற்றிய சிறப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. |
| 19. | அங்காடி புலனாய்வு மற்றும் விலைவாசி | இத்திட்டத்தில் விலைகள், வரத்து அனுப்புகை, இருப்பு மற்றும் இதர உற்பத்தி, அங்காடியின் போக்கு குறித்தான 96 மையங்களில் இருந்து முக்கியமான வேளாண்மைப் பொருட்களுக்கான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |



| | திட்டம் | நோக்கம் |
|---|---|---|
| 20. | தொழிற்சாலை ஊழியர்களின் நுகர்வு விலைக் குறியீடு | தொழிற்சாலை ஊழியர்கள் நுகர்வு விலைக் குறியீடு, பல்வேறு காலங்களில் மேற்படி ஊழியர்கள் நுகரும் ஒரு சில நிலையான பொருட்கள் மற்றும் பணிகளின் விலை வேறுபாட்டிற்கான சராசரி சதவீத மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. |
| 21. | மொத்த விற்பனை புள்ளிக் குறியீடு | விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மொத்த விற்பனை புள்ளிக் குறியீடுகளை சேகரித்தல் மற்றும் அவற்றை ஒருங்கிணைத்து தயாரித்து ஒவ்வொரு மாதமும் வெளியிடுவது. |

### 3.4. மாநிலப் புள்ளிஇயல் குழு

மாநிலப் புள்ளிஇயல் குழுவானது பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படும் முறைகள், அவற்றைப் பயன்படுத்தும் தன்மைகள் ஆகியவை குறித்து மேற்பார்வை செய்கிறது. இக்குழு தற்போது மாற்றியமைக்கப்பட்டு இருமுறை 20-08-2002 மற்றும் 24-01-2003 ஆகிய தினங்களில் கூடியுள்ளது.

### 2003-2004-ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. ஒரு புதிய ஜெராக்ஸ் காப்பியர் இயந்திரம் மற்றும் ஒரு தெர்மல் பைண்டிங் இயந்திரம் ரூ.1.00 இலட்சம் செலவில் வாங்குதல்.
2. தலைமையிடத்து நூலகத்திற்கான துளை இணைப்புச் சட்டம், இரும்பு அலமாரி, கணினி அச்சுக் கருவிகள் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம் ரூ.4.32 இலட்சம் செலவில் வாங்குதல்.
3. தலைமையிடத்தில் பணிபுரியும் அனைத்து புள்ளிஇயல் இணை இயக்குநர்களின் இல்லத்திற்கும் தொலைபேசி வசதி ரூ.0.42 இலட்சம் செலவில் செய்து கொடுத்தல்.
4. கணினி மையத்தில் பழுதடைந்துள்ள யுபிஎஸ் இயந்திரத்தை மாற்றி புதிய யுபிஎஸ் இயந்திரத்தை ரூ.1.40 இலட்சத்திற்கு வாங்குதல்.

[2003 மே 9

5. ஒரு புதிய பேக்ஸ் இயந்திரத்தை ரூ.0.25 இலட்சம் செலவில் வாங்குதல்.

**மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை**

4.1. அரசின் அரிய வள ஆதாரங்களை பல்வேறு திட்டங்களைச் செயலாற்ற உபயோகிக்கும்போது முன்மதியுடனும், திறமையுடனும் பயன்படுத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில், பொதுத் துறைச் சார்ந்த திட்டங்கள் இத்துறை தொடங்கப்பட்ட ஆண்டான 1972-லிருந்து மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

**4.2. இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

1. மத்திய, மாநில அரசுத் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;
2. அயல்நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உட்பட குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களை ஆய்வு மற்றும் சிறப்பு மதிப்பீடு செய்தல்;
3. மாநில நிதி நிலவரம் மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் பற்றிய சிறப்பு பகுத்தாய்வுகள் மேற்கொள்ளல்;
4. வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு' மேற்கொள்ளல்.

4.3. தமிழ்நாட்டில் வெளிநாட்டு உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்களான டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதாரக் கழகத் திட்டங்கள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பல்வேறு பிரிவுகளான கிராமப்புறக் குடிநீர் வழங்கல், கிராமச் சாலைகள், காடு வளர்ப்பு, கால்நடை அபிவிருத்தி, வேளாண் விரிவாக்கம், விதை மற்றும் வேளாண் திட்டங்கள் தீட்டுதல் போன்றவையும் மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மேலும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, அரசு வருவாய் எதிர்பார்ப்பு மற்றும் செலவினங்கள் மத்திய அரசின் நிதிக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் இத்துறையால் செய்யப்படுகின்றன. நிதித் துறையின் உபயோகத்திற்காக முக்கியத்துவம் வாய்ந்த வரி திரட்டு வைப்பேடு இத்துறையால் தயாரிக்கப்படுகிறது.



2003 மே 9]

4.4. இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, பல்வேறு துறைகளைச் சார்ந்த 481 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.5. வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டும், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநரை உறுப்பினர் கூட்டுநராகக் கொண்டும் மாநில மதிப்பீட்டுக் குழு 4-12-2002 முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் எந்தெந்த திட்டங்களை மதிப்பீடு செய்ய எடுத்துக்கொள்ளலாம் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய மேல்நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்து முடிவெடுக்கப்படுகிறது.

**2003-2004ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்**

1. இடிபி மையத்தில் மின் இணைப்பினை ரூ.1.00 இலட்சம் செலவில் மறுசீரமைத்தல்.
2. புதிய தொலைபேசியுடன்கூடிய நிகரிக்காக ரூ.0.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தல்
3. புதிய நகல் எடுக்கும் இயந்திரத்தை ரூ.1.50 இலட்சம் செலவில் வாங்குதல்.
4. தகவல் மதிப்பீட்டு படிப்பிற்காக ரூ.1.50 இலட்சம் செலவில் கணினி வாங்குதல்.
5. தடங்கலற்ற மின்சாரம் வழங்கும் கருவியினை ரூ.0.35 இலட்சம் செலவில் வாங்குதல்.
6. குடிநீர் சுத்திகரிப்புக் கருவி ரூ.0.40 இலட்சம் செலவில் வாங்குதல்.

## இணைப்பு III

**(108 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

### கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

1. இந்த மானியத்தின்கீழ் முதலாவது முக்கிய செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்ற பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில் 31-12-2002 ஆம் நாள் நிலவரப்படி, 4,79,233 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர்.

இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்கள், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,26,339 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 57,975 |
| 3. | அரசுப் பணியாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,07,645 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 27,286 |
| 5. | ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்கள். | 59,988 |
| | மொத்தம் | 4,79,233 |

[2003 மே 9

**2. இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:-**

| | | (ரூபாய்) |
|---|---|---|
| 2071. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். | 42,11,59,13,000 |
| 2235. 60. | சமூகப் பாதுகாப்பும் நலனும்— ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் | 18,12,31,000 |
| | மொத்தம் | 42,29,71,44,000 |

**அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள்**

3. கடந்த காலங்களில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்களின் மேல் ஏற்பட்டுள்ள செலவினங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன:

| வருடம் | மொத்தம் செலவினம் (ரூபாய் கோடியில்) | வருவாய் வரவில் சதவீதம் |
|---|---|---|
| 1995-96 | 787.03 | 7.42 |
| 1996-97 | 1070.15 | 8.95 |
| 1997-98 | 1286.77 | 9.47 |
| 1998-99 | 1691.42 | 11.45 |
| 1999-2000 | 2688.41 | 16.46 |
| 2000-2001 | 2927.24 | 15.48 |
| 2001-2002 | 3050.48 | 16.07 |
| 2002-2003 திருத்திய மதிப்பீடு | 3488.20 | 16.86 |
| 2003-2004 திட்ட மதிப்பீடு | 4211.59 | 18.58 |



2003 மே 9]

ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பயன்களினால் ஏற்படும் செலவின சதவிகிதம் கணிசமாக உயர்ந்துள்ளதை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். இவ்வளவு கணிசமாக செலவு உயர்ந்துள்ளதால், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்களின் செலவின் உயர்வினைக் கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகின்றது.

**4. ஓய்வூதியம்:**

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் 1-4-2003 அன்று அல்லது அதற்குப் பின் ஓய்வுபெறும் அரசுப பணியாளர்கள் ஓய்வுபெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு ஓய்வூதியமாக நிர்ணயிக்கப்படுகிறது. உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப்பணிபுரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 33 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப்பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும். மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு/குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியதற்கு இணையாக மாநில அரசு 1-1-1996 முதல் ஓய்வூதியத்தை/குடும்ப ஓய்வூதியத்தை மாற்றி ஆணையிட்டுள்ளது. குறைந்த அளவு ஓய்வூதியத்தை மாதமொன்றிற்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1275 ஆக 1-1-1996 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

**5. பணிக்கொடை:**

**(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:**

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறுமாதப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது, ஆற்றிய பணிக்காக ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டுமொத்தத் தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக இத்தொகை ஆற்றிய பணிக்காக வழங்கப்படுகிறது.

(ii) **இறப்புப் பணிக்கொடை:**

பணியில் இருக்கும்போது மரணமடைவோர் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

| | பணிக்காலம் | பணிக்கொடையின் அளவு |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | இரு மடங்கு மாத ஊதியம் |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டு களுக்குக் குறைவாக | ஆறு மடங்கு மாத ஊதியம் |
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | பன்னிரண்டு மடங்கு மாத ஊதியம் |
| 4. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் 33 மடங்கு மாத ஊதியம் என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக்கூடாது. |

(iii) **ஓய்வுகாலப் பணிக்கொடை:**

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஓய்வு ஊதியத் தகுதி பெறும் பணியை முடித்திருந்தால் அவர் ஓய்வுபெறும்போது அதிகபட்சம் 16½ மடங்கு மாத ஊதியம் என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக 1-1-1996 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடையைக் கணக்கிடும் பொழுது அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியைச் சேர்த்து கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1-4-2003 அன்று அல்லது அதற்குப் பின் ஓய்வுபெறும் ஊழியர் பெறும்



மொத்த பணிக்கொடையில் 50 விழுக்காடு ரொக்கமாகவும் மீதமுள்ள 50 விழுக்காடு சிறுசேமிப்புப் பத்திரமாகவும் அளிக்கப்படும்.

6. **குடும்ப ஓய்வூதியம்:** அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வுபெற்ற பின்னரோ, இறந்துவிட்டால் அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்தால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற அவருடைய பணிக்காலத்தில் ஓய்வுதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுகாலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும் அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வுபெற்ற பின்னர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் இறந்து விட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1275 ஆக 1-1-1996 முதல் உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. உயர்ந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் உயர்ந்தபட்ச சம்பள விகிதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக இருக்கும்.

குடும்ப ஓய்வூதியம் விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரை அல்லது இறக்கும் வரை இதில் எது முந்தியதோ அதுவரை வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்தக் குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய குழந்தைகளுக்கு 25 வயது வரை அளிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மன நலக்குறைவு அல்லது மனநலமின்மையுடையவராக இருந்தாலோ, உடல்

ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

**7. கருணைத் தொகை வழங்குதல்:**

1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்று/ பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட, உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய / ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு (இவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்) வழங்கப்படும் கருணைத் தொகையை மாதம் ரூபாய் 150-லிருந்து ரூபாய் 605 எனவும் அகவிலைப்படி ரூபாய் 31 எனவும் 1-11-1997 முதல் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்கள் 1-1-1998 அன்றும் மற்றும் அதன் பிறகும் வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

**8. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக அளித்தல்:**

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை ஒட்டுமொத்தமாகப் பெற ஓய்வூதியம் பெறுபவர்கள் தகுதியுடையவர்கள் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவப் பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநில கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்று கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு முழுப்பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதியளித்துள்ளது. 1-4-2003 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்கள் ஓய்வூதியத்தில்



மூன்றில் ஒரு பகுதி 33-1/3 விழுக்காடுவரை மொத்தமாக்கிப் பெறுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது. ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக 1-4-2003-லிருந்து பெற கணக்கிடுவதற்குரிய வருட மதிப்பு அட்டவணையை, 8 சதவிகித வட்டி அடிப்படையில் திருத்தியமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**9. ஏனைய ஓய்வுக்கால நன்மைகள்:**

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக, அதிகபட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் அனுமதிக்கப்படுகிறது.

(ii) 1-4-2003-க்குப் பிறகு ஓய்வு பெறும் ஊழியருக்கு அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பில் (Half Pay Leave on Private Affairs) 60 நாட்களுக்கு மிகைப்படாமல், 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்பு கால சம்பளம் பெறவும் அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் அரைச் சம்பள விடுப்பினையும் காசாகப் பெற 1-4-2003-க்குப் பிறகு அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படி மட்டும் வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளருக்கு ஓய்வு பெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விழையும் ஊருக்குச் செல்வதற்கான பணிமாற்ற பயணப்படி வழங்கப்படுகிறது.

**10. ஓய்வூதியர்களுக்கு இதர பயன்கள்:**

**(அ) அகவிலைப்படி**

(i) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அகவிலைப்படி தவணைத் தொகை அரசு ஊழியர்களுக்கு வழங்கும்போதெல்லாம் அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

[2003 மே 9

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகை மீதான அகவிலைப்படியுடன் மாநில அரசின் அகவிலைப்படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப்படி**

ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**11. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி அதன் மூலம், சிறப்பு மருத்துவச் சிகிச்சை/அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுவோருக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**12. ஓய்வூதியம் பெறுவோர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர் தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஒரே சீராக ரூ.70 வீதம் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப் படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ.25,000/- வழங்கப்படும்.



2003 மே 9]

**13. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதிம்:**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வுகாலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**14. ஓய்வூதிய இயக்ககம்:**

ஓய்வூதியம் பெறுவோரின் நலனைக் கவனிக்க, ஓய்வூதிய இயக்ககம் என்னும் துறை 1-9-1994 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வரசு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களுக்குரிய பல்வேறு பயன்கள் குறித்த தகவல் அடங்கிய வழிகாட்டி இணைய தளத்தினை 19-7-2001 அன்று துவக்கி வைத்துள்ளது. இந்த இணைய தளத்தை www.tn.gov.in/dop என்ற குறியீட்டின் மூலம் பார்வையிடலாம்.

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் உரிய ஓய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும்**

15. நமது நாடு விடுதலை பெறுவதற்காக, விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சொல்லொணா துன்பங்களை அனுபவித்த தியாகிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவுவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் கருணையுடன் இருந்து வருகிறது. அவர்களின் நலனுக்காக, விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வாரிசுகளுக்கு கல்வி நிலையங்களில் சிறப்பு இட ஒதுக்கீடு, வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

16. பொதுத் துறையின் 28-9-1966 நாளிட்ட அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைப்படி தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும், காவல் கைதியாக இருந்தவர்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும்,

கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். மேலும் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என பின்னால் அறிவிக்கப்பட்டது. மேலும் சுதந்திரப் போராட்டத்தின்போது கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு, தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற, அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத சிறைவாசம் என்பது, 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பு 11-3-1983 முதல் நீட்டிக்கப்பட்டது.

17. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற விரும்புபவர்கள் தாங்கள் சிறைத் துன்பம் அடைந்ததற்கு ஆதாரமாக நீதிமன்ற ஆணையின் அல்லது சிறைத் துறை ஆவணத்தின் உரிய பகுதியின் நகல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இவை ஏதும் இல்லாத நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பு செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் சக கைதிச் சான்றிதழ்கள் மனுதாரர்கள் சிறைத் தண்டனை அனுபவித்தமைக்கான ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் சக கைதி சான்று வழங்கும் முறை 1988 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பொதுத் துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு ஆணையின்படி மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து சக கைதி சான்று பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. பின்பு, இந்த முறையிலும் சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், 7-2-1996 ஆம் நாளிட்ட பொதுத் துறையின் அரசு ஆணையின்படி மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியை துணைத் தலைவராகவும், மூன்று பிரபல தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளை



சான்றளிப்பவராகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களாகவும், சான்றளிப்பவர்களாகவும் உள்ள தியாகிகள் மூல அரசு ஆவணங்களின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்றவராக இருத்தல் வேண்டும். விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் கோருபவர் தாம் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட படிவத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

18. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத்தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கும் மாநில அரசு ஓய்வூதியம் ரூ.500 மாதந்தோறும் வழங்கப்படுகின்றது.

19. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது அவரது மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்க நேர்ந்தால் அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த ஓய்வூதியத் தொகை அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

20. நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஒட்டுமொத்த மானியமும், ஓய்வூதியமும், அவ்வபபோது அரசால வழங்கப்படுகின்றன. அந்த வகையில், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 129 பேரும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வாரிசுதாரர்கள் 7 பேரும் மாதம் ரூ.500 தற்போது ஓய்வூதியமாகப் பெற்று வருகின்றனர்.

[2003 மே 9

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மாமன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வாரிசுதாரர்களுக்கு அரசியல் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வந்தது. இந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து அதன் மீது அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வு செய்து முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் தகுதியான வாரிசுதாரர்களின் பட்டியலை அரசுக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அனுப்பினார். இதை அரசு தீவிரமாகப் பரிசீலித்து முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் தகுதியான வாரிசுகளாக 87 நபர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 500 வீதம் அரசியல் ஓய்வூதியம் வழங்குவதற்கு 8-1-2003 அன்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

21. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ. 15 வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

**(ஆ) கல்விச் சலுகைகள்:**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்பு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது.



2003 மே 9]

மேலும் விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு தொழில்/தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் கீழே குறிப்பிட்டுள்ளபடி இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

1. பொறியியல் கல்லூரிகளில் 10 இடங்கள் தொழில்நுட்பப் பயிலகங்களில் 5 இடங்கள்: இவற்றில் 10 இடங்களை 20 ஆகவும், 5 இடங்களை 10 ஆகவும் உயர்த்துவதற்கு உண்டான செயற்குறிப்பு அரசின் உயர் கல்வித் துறையின் ஆய்வில் உள்ளது.

2. பின்வருமாறு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

   (அ) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்.

   (ஆ) விடுதலைப் போராட்ட வீரர்களின் பேரன்/பேத்திகள்.

3. சித்த மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில் ஓரிடம், ஓமியோபதி மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில் ஓரிடம்.

4. பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் (பாலிடெக்னிக்) சிறப்புக் கல்வி நிறுவனங்களில் ஓரிடம்.

5. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் (முறைப்படி படிப்பு) 1 சதவிகித இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சிறுபான்மையரல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலுள்ள மொத்த சேர்க்க இடங்களில் விடுதலைப் போராட்ட வீரர்களின் மகன்/மகள்/பேரன்/பேத்தி ஆகியோருக்கு 28 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**(இ) வீட்டு வசதி**

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/மனைகளில்/அடுக்கு மாடி வீடுகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு

ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) போக்குவரத்து வசதி:**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய வாரிசுகளுக்கும் அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(உ) ஈமச் சடங்குச் செலவு:**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போக நேரிடும்போது, அவர் தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகை ரூ.2000 உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவர், மறைந்தவரின் உடல்மீது அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

**(ஊ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை:**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 4-5-1999 ஆம் நாளிட்ட அரசாணையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர்ப்பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகள்/மொழிக் காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

**22. மத்திய அரசின் ஒய்வூதியத் திட்டம்:**

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-08-1972 முதல் செயலில் உள்ளது. இதன்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:



(அ) விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத் துன்பம் அனுபவித்தவர்கள் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத் துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச்சான்று சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள சிறைச்சான்று இல்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் இல்லை என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்த அதே காலத்தில் தன்னுடன் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத் துன்பம் அனுபவித்தவரும் மைய அரசு ஓய்வூதியம் பெறுபவருமாகிய இருவரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ள சககைதி சான்றிதழ் படிவத்தில் பெறப்பட்ட இரு சககைதி சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும் (அல்லது) தற்போதுள்ள அல்லது முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் ஒருவரிடமிருந்து சான்றாளரின் சிறைத் துன்ப காலத்தையும், மனுதாரரின் சிறைத் துன்ப காலத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு சககைதி சான்றிதழ் குறிப்பிட்ட படிவத்தில் பெற வேண்டும்.

(ஆ) ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்கு சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

(இ) ஓய்வூதியம் பெறுவதற்கான ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.5,000 என்பது 01-08-1980 முதல் நீக்கப்பட்டது.

(ஈ) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாக தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால், அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அதற்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட படிவத்தில் சககைதி சான்றிழ் பெற்று தக்க ஆதாரமாக சமர்ப்பிக்கலாம். மேலும் மேற்படி அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(உ) விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு 10 சவுக்கடிகள்/ கசையடி . அல்லது பிரம்படியை தண்டனையாகப் பெற்று ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாத காலத்திற்கு சிறைத தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) மேலும் இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத் துன்பம்/காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர்.

(எ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர் இறக்க நேரிடும்பொழுது அவர் பெற்று வந்த மத்திய அரசு மாதந்திர ஓய்வூதியத் தொகையான ரூபாய் ரூ.3000-த்துடன் மாநில அரசின் பங்கான ரூபாய் 500-ம் அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு தொடர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஐ) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியதாரர்களுக்கு (Swatantrata Sainik Samman Pensioners) 01-08-2002 முதல் ஓய்வூதியத்துடன் 34 சதவீதம் அகவிலைப்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

23. மே திங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் 31-3-2003 வரையிலான காலத்தில் 161 பேருக்கு மாநில அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முன்னாள் மாமன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வாரிசுதாரர்கள் 87 பேருக்கு அரசியல் ஓய்வூதியம் வழங்க 8-1-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

24. மத்திய/மாநில அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ் நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் எண்ணிக்கை 31-03-2003 அன்றைய நிலவரப்படி வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000+15 மருத்துவப்படி) | 1,569 |
| 2 | மாநில அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதரர்களின் எண்ணிக்கை (ரூ.1,500+15 மருத்துவப்படி) | 2,255 |





| | | |
|---|---|---|
| 3 | மைய அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000+15 மருத்துவப்படி) | 1262 |
| 4 | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ.3,000+15 மருத்துவப்படி) | 1,437 |
| 5 | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ.500 மாதம் ஒன்றுக்கு) | 7 |
| 6 | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித் தோன்றல்கள் (ரூ.500 மாதம் ஒன்றுக்கு) | 129 |
| 7 | முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (ரூ.500 மாதம் ஒன்றுக்கு) | 87 |

25. இத்திட்டங்களுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.17,79,11,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2003 மே 9

## இணைப்பு-1

**மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்**

| வரிசை எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | 01-10-1966 முதல் | 50 |
| 2 | 15-08-1972 முதல் | 75 |
| 3 | 01-04-1979 முதல் | 100 |
| 4 | 25-01-1981 முதல் | 150 |
| 5 | 10-06-1986 முதல் | 250 |
| 6 | 01-08-1989 முதல் | 350 |
| 7 | 01-01-1991 முதல | 400 |
| 8 | 01-08-1992 முதல் | 1,000 |
| 9 | 01-09-1995 முதல் | 1,500 |
| 10 | 15-08-1997 முதல் | 3,000 |



2003 மே 9]

## இணைப்பு-2

**மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்**

| வரிசை எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | 01-10-1966 முதல் | 50 |
| 2 | 15-08-1972 முதல் | 75 |
| 3 | 01-04-197[illegible] முதல் | 100 |
| 4 | 25-01-1[illegible]1 முதல் | 150 |
| 5 | 10-06-1986 முதல் | 250 |
| 6 | 01-08-1989 முதல் | 350 |
| 7 | 01-01-1991 முதல் | 400 |
| 8 | 01-08-1992 முதல் | 500 |
| 9 | 01-09-1995 முதல் | 750 |
| 10 | [illegible]-08-1997 முதல் | 1,500 |

## இணைப்பு-3

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மத்தி[illegible] அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை[illegible] விவரம்**

| வரிசை எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | 15-08-1972 முதல் | 200/- |
| 2 | 01-08-1980 முதல் | 300/- |
| 3 | 01-06-1985 முதல் | 500/- |
| 4 | 11-11-1988 முதல் | 750/- |
| 5 | 12-08-1992 முதல் | [illegible]000/- |
| 6 | 02-10-1994 முதல் | 1,500/- |
| 7 | 15-08-1997 முதல் | 3,000/- |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
18508
சென்னை-600 008
Y211,31 P03
003.60